# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு.குலாம் முஹம்மது


Volume-15
Issue-9

செப்டம்பர்-2022 (ஸபர்-1444)

விலை ரூ. 40 /-


## அமெரிக்காவின்
# பொய்கள் - போர்கள் பிணங்கள்

22 ஆண்டுகளுக்குப் பின்


Thierry Meyssan
BEFORE OUR VERY EYES
FAKE WARS AND BIG LIES FROM 9/11 TO DONALD TRUMP

# காவி மயமாகும் கல்வி

வெளியேற்றப்பட்ட உண்மைகள்!



## இந்தியாவின் நீதித்துறையை பெண்கள் நம்பலாமா?

பில்கிஸ்பானு வழக்கு!

## திருச்சியில் முஸ்லிம்களை குறிவைக்கும் உளவுத்துறை



Vaigarai Velicham - Tamil Monthly, RNI: TNTAM/2008/25045 Postal Registration No TN/CNIGPO/031/2017-19
R.DIS.No.1477/07 Posted at Egmore RMS Patrika Chennai. Date of Publication: 30th of every Month.


# கஷ்மீரின் பாதி விதவைகள்

– மு.குலாம் முஹம்மது

**என்னைப் போலவே என் வழக்கறிஞரும் மனமுடைந்து போனார். அன்று முதல் கஷ்மீரிலிருந்து உச்சநீதிமன்றம் போக வேண்டும் என வருபவர்களிடம் அவர் இப்படிக் கூறினார்:**

KASHMIRI'S SHOULD NOT KNOCK AT THE DOORS OF APEX HOUSE OF JUSTICE IN THE COUNTRY. ATTORNY SHOMOHANA KHANNAH
(SOURCE : WIDOWS & HALF WID OWS : SAGA OF EXTRA JUDICIAL ARRESTS & KILLINGS IN KASHMIR P.52)

**அதாவது : கஷ்மீர் மக்கள் இந்த நாட்டு உச்சநீதிமன்றத்தின் கதவுகளை நீதிக்காகத் தட்டவே கூடாது.**





விலை: **70/-**

**9786214186**

Vergal Pathippagam | 8148129887

ஐந்தாம் பதிப்பு

''ஆப்கானிஸ்தான் வல்லரசுகளின் கப்ரிஸ்தான்'' கல்லறை / சவக் குழி




₹140

9786214186

20 வருடங்கள் (2001-2021) ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து அங்கிருந்த வளங்களைச் சுரண்டிவிட்டு அப்பாவி மக்களை [Civilians] லட்சக்கணக்கில் கொன்று குவித்துவிட்டு ஐந்து லட்சம் குழந்தைகளையும் கொன்றுவிட்டு (இது 2015 வரை உள்ள கணக்கு) மார்தட்டியது அமெரிக்கா. ஆனாலும் வீழ்ந்து போனது.

#Courier Charge

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?

**வாங்கிவிட்டீர்களா?**

உலகெங்கும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அரபுலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களெல்லாம் இந்த நூலிலிருந்து மேற்கோள் காட்டி எழுதவும் பேசவும் செய்தார்கள்.

விலை: 300/-

**9786214186**

Vergal Pathippagam | 8148129887



முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

(5:08)


அமெரிக்காவின் பொய் - போர்கள்- பிணங்கள் - 4

கான்ஸ்டன்டின் நோபிள் வெற்றி - 23

காவி மயமாகும் கல்வி - 30

திருச்சியில் முஸ்லிம்களை குறிவைக்கும் உளவுத்துறை - 33

மோடியின் பா.ஜ.க. தேசத் துரோக சட்டத்தை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறது? - 36

மகளிர் மன்றம் - 38

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 41

சிலுவைப் போர் 2.0 - 45

இந்தியாவின் நீதித்துறையை பெண்கள் நம்பலாமா? பில்கிஸ்பானு வழக்கு! - 47

இந்தியத் தேசியக் கொடியை வடிவமைத்த சுரையா..! - 50

நம்மை பீடித்துள்ள பிளேக் - 52

கஅபாவை இப்படியுமா கண்ணியப் படுத்துவார்கள் - 56

தலையங்கம் - 64

மருத்துவம் - 66



# வைகறை வெளிச்சம்

செப்டம்பர்-2022 ஸபர்-1444

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.40/-

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.480/-

வெளி நாடு: ரூ.5000/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

**20 ஆண்டுகளாக அமெரிக்காவை எதிர்த்து நின்ற தாலிபான்கள் - ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் பல வெற்றிகளைக் குவித்திருக்கின்றார்கள். அதில் குறிப்பிடத்தக்க வெற்றி, உலக மக்களின் கண்களைத் திறந்ததுதான். ஆமாம் அமெரிக்காவின் அன்றைய பொய்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன. அமெரிக்கா அவமானப்பட்டு நிற்கின்றது.**

# அமெரிக்காவின் பொய்கள் - போர்கள் பிணங்கள்

## 22 ஆண்டுகளுக்குப் பின்

இன்றைய உலகில் மிகப்பெரிய பொய்யர்கள் அமெரிக்கர்களும் அவர்களுக்குப் பக்க பலமாக நின்றவர்களும்தான் என்பது ஊர்ஜித மாகிவிட்டது. இந்நிலையில் யாரோ ஒரு பெரிய அதிகாரி உத்தரவிட்டதைப் போல் உலக அரங்கில் அமெரிக்காவின் பொய்கள் - தோல்விகள் இவை விவாதிக்கப்படுவதில்லை. பொது தளத்தில்.

இதை நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டு மென்றால், இதே பொய்யை வேறு ஏதாவது ஒரு நாடு சொல்லியிருந்தால் இந்த உலகம், என்ன பாடுபட்டிருக்கும்? அந்த நாட்டைப் பழிவாங்கிட வேண்டும் என்று கூறி, அந்த நாட்டின் மீது குண்டு மழைகளைப் பொழிந்து பல லட்சம் மக்களைக் கொலை செய்திருந்தால், என்ன நடந்திருக்கும்? பின்னர் குண்டுகளைப் போட்டு அப்பாவிகளை கொலை செய்ததற்குச் சொல்லப் பட்டவை, எல்லாம் பொய்யன தெரிய வந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

இவற்றையெல்லாம் நாம் மக்கள் மன்றத்தில் வைத்தாக வேண்டும். இதனை நாமனைவரும் செய்தாக வேண்டும். அதற்காக பல தகவல்களை இங்கே தருகின்றோம்..

**அறிமுகம்**

ஒவ்வொரு ஆண்டும் 9/11 நாள் என அறிவித்து, தீவிரவாதம் என்றால் இஸ்லாம்தான் என பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தவர்கள், தாலிபானின் - ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் வெற்றிக்குப்பின் அதைப் பற்றிப் பேசுவதில்லை, காரணம் தங்கள் பொய்கள் அம்பலமாகிவிட்டன.



# அறிமுகம்

நமது கண்களின் முன்னாலேயே நிகழ்த்திக்காட்டிய ஓர் பெரும் நிகழ்வு. அத்தனையும் "BIGLIES" பெரிய பொய்கள். அந்தப் பொய்களைக் கொண்டே முஸ்லிம்களுக்கெதிரான போர்கள் உலகெங்கும். அப்பாவிகள் பிணமானார்கள். எஞ்சியோர் அனாதையானார்கள். அண்டை நாடுகளுக்குக் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் தேடி ஓடும் அவலம்.

அனாதைகளாக அடைக்கலம் புகுந்தவர்களைக் கூட வெறுக்க அந்தந்த நாட்டு மக்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள் இப்படி....

"வருகிறார்கள், அநாதைகளாக உங்களை ஆக்கிரமிக்க" "உங்கள் உணவை உண்டுகொளுக்க என்றெல்லாம் பிரச்சாரம் செய்தார்கள். அந்த மக்களிடையே. அதனால் அபயம் தேடி வந்தவர்களை ஆபத்து எனப் பார்த்தார்கள் அந்த நாட்டு மக்கள். பதறினார்கள், வந்தவர்களை விரட்டினார்கள்.

ஏன் நம்மைத் தாக்கினார்கள்? நாம் ஏன் மடிகின்றோம்? நாம் ஏன் அபயம் தேடி அலைகின்றோம் என்பதையெல்லாம் அறிந்திடாமல் அந்த மக்கள் மடிந்தார்கள். அனைத்தையும் இழந்து நாடோடிகளாக அலைந்தார்கள்.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கியதும், தகர்த்ததும், "அல்கொய்தா" என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள்தாம் என்றார்கள் அமெரிக்காவும், அதற்குப் பக்கத் துணையாக வந்த நேட்டோ நாடுகளும் அல்கொய்தா என்றொரு பயங்கர பீதியை கிளப்பினார்கள்.

அந்த "அல்கொய்தாவை" அழிக்க ஆப்கானிஸ்தானையே அழிப்போம் என்றார்கள். படையெடுத்தார்கள், அழித்தார்கள். அப்பாவிகளைக் கொலை செய்தார்கள். கொன் றொழித்தார்கள். பிணமாகக் குவிந்தவர்களெல்லாம் முஸ்லிம்கள் என்பதால் மனதோடு மகிழ்ந்தார்கள். இந்த முரண்பாடுகள் முஸ்லிம்களின் பிணங்களை தின்னும் அமெரிக்காவுக்கு சற்றும் நெருடலைக் கொடுக்கவில்லை. ஆனால், அதே அல்கொய்தாவுக்கு லிபியாவின் உள்நாட்டுப் போரிலும் சிரியாவின் உள்நாட்டுப் போரிலும் உதவிகள் செய்தார்கள்.

இப்போதும் இவர்கள் அல்கொய்தா தலைவர் என இவர்களே சொல்லிக்கொண்டே ஐமான் ஜவஹிரியை கொன்றுவிட்டதாகப் புருடா விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஐமான் ஜவஹிரி கொல்லப்படுவது இது மூன்றாவது முறை.

அல்கொய்தா என்ற அமைப்பையே 500 மில்லியன் டாலர்களில் அமெரிக்காவால் உருவாக்கப்பட்டது என்கிறார் ரம்ஸ் பரோடி என்ற பத்திரிகையாளர் வரலாற்றாசிரியர். விரிவான கட்டுரை ஒன்றை "வைகறை வெளிச்சம்" இதழில் வெளியிட்டிருக்கின்றோம்.

பின்லேடன் ஷஹீத் அவர்களையும் கொன்றுவிட்டதாக ஒரு பொய்யைப் பரப்பினார்கள். பிணத்தையும் காட்டவில்லை. வீடியோக்களும் இல்லை. அனைத்தும் பொய். அனைத்தையும் இவர்கள் செய்த இடைவிடாப் பிரச்சாரத்தின் வழி மக்களை நம்ப வைத்தார்கள். இதற்கு உலக ஊடகங்கள் வாகாய் துணை போயின. ஒவ்வொரு முறை மக்கள் நம்பும்போதும், அப்பாவி மக்களைப் பிணங்களாகக் குவித்தார்கள்.

இப்படி மொத்த முஸ்லிம் உலகையும் பொய்யைச் சொல்லியே கபளீகரப்படுத்தி 2011-இல் ஏற்பட்ட அரபு எழுச்சியைக் காணாமலாக்கிவிட்டார்கள். அந்தக் கதையைக் கேளுங்கள். அவர்களின் ஆட்டம் ஆப்கானிஸ்தானில்தான் அடங்கிற்று. ●

**- MGM**



## அமெரிக்க இளைஞர்கள் அன்றும் - இன்றும்

இதில் நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அது அன்று இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டவுடன், அமெரிக்க இளைஞர்கள் கொதித்தெழுந்தார்கள். ஆப்கானிஸ்தானைத் தாக்கிட வாருங்கள் என அன்றைய அமெரிக்க அதிபர் "புஷ்" அழைப்பு விடுத்தவுடன், அணியணியாக அமெரிக்காவின் இராணுவத்தில் இணைந்தார்கள். .

காலப்போக்கில் நாம் நமது அதிபரும் அவருடைய எடுபிடிகளும் சொன்ன பொய்களின் கீழ்தான், ஒரு முடிவை எடுத்திருக்கின்றோம் எனக் கொதித்தெழுந்தனர். ஆனால் அவர்களால் ஆப்கானிஸ்தானிலிருந்து திரும்பி வந்திட இயலவில்லை. காரணம், நாலாபக்கங்களிலும் முஜாஹித்கள் சூழ்ந்து கொண்டனர். தங்களுடைய தவறுகளை உணர்ந்த போது அவர்கள் ஆதங்கப்பட்டார்கள், விரக்தியடைந்தார்கள், பைத்தியக்காரர்கள் ஆனார்கள். தற்கொலைகள் மூலம் தங்கள் தவறுகளுக்குத் தீர்வு தேடிக் கொண்டார்கள்.

இப்போது முஜாஹித்கள் அறுதி வெற்றியை அடைந்து விட்ட நிலையில் அமெரிக்க இராணுவத்தினர், நாம் நம்பி நின்றது முழு பொய்யைத் தான் என்பதை உணர்ந்தார்கள். தங்களுக்குத் தரப்பட்ட பதக்கங்களை தூக்கி வீசினார்கள். இப்படி 40,000 பேர் பதக்கங்களை வீசி எறிந்தார்கள்.

9/11 தாக்குதலை தாலிபான்கள் செய்யவில்லை என்பதை அன்று தொட்டே நாம் மிகவும் ஆழமாகவும், விளக்கமாகவும் மக்கள் மன்றத்தில் வைத்து வந்தோம். இதையே நாம் பல மேடைகளின் வழி மக்கள் மன்றத்தில் வைத்தோம். அவற்றின் தாரதம்மியங்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் புரிந்து கொள்ள வேண்டும்.

## 9/11 அமெரிக்காவின் தீவிரவாதமே... ஆதாரமில்லாமல் ஆயத்தமான அமெரிக்கா

2001 செப்டம்பர் - 11, அமெரிக்காவின் உயரமான கட்டடங்கள் மீது தாக்குதல்கள் நடந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் (2977) உயிரிழந்தனர். அன்று இதை 5000 பேர் எனப் பேசினார்கள். மொத்த உலகமும் அல்லோலகல்லோலப் பட்டது.

முஸ்லிம் நாடுகள் உட்பட உலகமே அமெரிக்காவின் மீதான இந்தத் தாக்குதலைக் கண்டித்தன. அல்லல்களுக்குள்ளான அமெரிக்கர்களுக்கு அனுதாபங்களைத் தெரிவித்தன.

அத்தோடு உலக நாடுகள் அனைத்தும் அமெரிக்கா எடுக்கும் எல்லாவிதமான நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்தன. எல்லா முஸ்லிம் நாடுகளும் ஈராக் உட்பட தங்கள் ஆதரவைத் தெரிவித்தன.

தாக்குதல்களுக்கு உள்ளான அமெரிக்காவுக்கு அனுதாபம், எதிர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு ஆகிய அனைத்தையும் முஸ்லிம் நாடுகள் தெரிவித்த பின்பும், இந்தத் தாக்குதல்களுக்கான பழியை முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் போடுவதை நிறுத்தவில்லை அமெரிக்கா.

அரசியல்தலைவர்கள் குறிப்பாக அறிக்கைகள் தரும்போது "நாங்கள் எந்த மதத்தோடும் இதை - இணைக்கவில்லை" என்று குறிப்பிட்டாலும் பொதுவான ஒரு பழி மறைமுகமாக இஸ்லாத்தின் மீது போடப்படுகின்றது. உலக மக்களை அநியாயங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் விடுவிக்க வந்த இஸ்லாத்திற்கும் இதுபோன்ற தாக்குதல்களுக்கும் கிஞ்சிற்றும் இடமில்லை.

திருக்குர்ஆன் வழங்கிடும் கட்டளைகளிலோ, இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியிலோ, நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் ஆட்சிக் காலங்களிலோ, கிலாஃபத்தின் கடைசிக் கட்டம் (1923) வரையுள்ள வரலாற்று நிகழ்வுகளிலோ இதுபோன்ற செயல்களுக்கு எங்கேயும் ஆதாரமில்லை.

எது இஸ்லாம் என்பதை வரையறுத்துத் தருகின்ற அடிப்படைகளில் ஆதாரமில்லாத போது இஸ்லாத்திற்கும் இது போன்ற செயல்களுக்கும் முடிச்சுப் போடுபவர்கள் காழ்ப்புணர்வுகளினால்தான் இப்படி செய்கின்றார்கள் என்பதே

*உண்மை. என்பதை நாம் தெளிவுபடுத்தினோம்.*

*முஸ்லிம்கள் இந்த உலக வாழ்க்கையை மட்டுமே இலட்சியமாகக் கொண்டு வாழ்பவர்களல்ல. மாறாக, அவர்கள் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையை இலட்சியமாகக் கொண்டவர்கள். மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையைத்தான் அவர்கள் "மறுமை" என்று அழைக்கின்றார்கள். அது நிரந்தரமான வாழ்க்கை.*

*மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் நரகத்திற்கு இட்டுச் செல்லும் எந்தச் செயலையும் அவர்கள் செய்ய முன்வரமாட்டார்கள். இந்த வாழ்க்கையில், அவர்கள் அப்பாவி உயிர்களைப் பறிப்பார்களேயானால், மறுமை வாழ்க்கையில் அவர்கள் நிரந்தரமான வேதனையை அனுபவிக்க வேண்டும். அதிலிருந்து அவர்கள் மீளவே முடியாது.*

**அல்லாஹ் கூறுகின்றான் :**

*"இதன் காரணமாகவே எவனொருவன் மற்றோர் ஆத்மாவைக் கொலைக்குப் பிரதியாகவோ அல்லது பூமியில் குழப்பத்தைத் தடை செய்வதற்காகவோ அன்றி, (அநியாயமாகக்) கொலை செய்கின்றானோ அவன், மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். அன்றி, எவன் ஓர் ஆத்மாவை வாழ வைக்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையுமே வாழ வைத்தவன் போலாவான்." (அல்குர்ஆன் - 5:32)*

**இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் :**

*"பெரிய பாவங்கள் எனப்படுபவை அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, ஒரு மனிதனைக் கொலைசெய்வது, பெற்றோருக்கு நிறைவேற்றிட வேண்டிய கடமைகளை நிறைவேற்றாமல் இருப்பது, தவறான தகவல்களைக் கொடுப்பது அல்லது தவறான சாட்சியம் வழங்குவது." (அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரழி) நூல் : புகாரி, நபிமொழி : 6871)*

**22 ஆண்டுகளுக்குப் பின்**

*ஆக அப்பாவிகளின் உயிர்களை கை வைக்க அல்லாஹ்வை நம்பிடும் யாருக்கும் அனுமதி இல்லை. இந்நிலையில் தீவிரவாதத்திற்கும் இஸ்லாத்திற்கும் எள்முனை அளவுகூட தொடர்பில்லை.*

## 9/11 க்குப் பின்

**அதாவது 1350 ஆண்டுகளுக்கு முன் இஸ்லாத்தின் எதிரிகள் போட்டத் திட்டம், இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே. வளர்ச்சியை தடுக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, இஸ்லாம் பின்னுக்கும் தள்ளப்படும். முஸ்லிம்களில் பலரே தங்களை முஸ்லிம்கள் எனச் சொல்லிடத் தயங்கிட வேண்டும். சில முஸ்லிம்கள் நாமே சரியில்லை நாம் எப்படி ஏனைய மக்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்லிட முடியும் எனப் பேசிட வேண்டும். அவர்களே இஸ்லாம் காலாவதியாகிவிட்டது என சொல்லிட வேண்டும் என்பனவாக இருந்தன**

**இது ஓரளவு நடக்கவும் செய்தது. அதாவது சில முஸ்லிம்கள் இஸ்லாத்திற்கெதிராகப் பேசவும் எழுதவும் செய்தார்கள். ஆனால் இஸ்லாமிய இயக்கத்தவர்கள்,**

**இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்கள் இடைவிடாமல், தங்கள் இஸ்லாமியப் பிரச்சாரத்தைத் தொடர்ந்தார்கள்.**

**இறுதியில் உலகில் குறிப்பாக ஐரோப்பாவில் வேகமாக வளரும் மார்க்கம் இஸ்லாம் என்றானது.**

**9/11க்கு பின் இஸ்லாத்தைக் குற்றம் பிடிக்கும் எண்ணத்தோடு ஆய்வு செய்தார்கள். ஆனால் இஸ்லாத்தின் போததனைகளால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஏற்றார்கள்.**

**ரம்ஸ் பரோடி என்ற உலகப் பிரசித்தி பெற்ற எழுத்தாளர், "உலகில் மக்கள் தொகை வளரும் அளவைவிட இஸ்லாம் வேகமாக வளர்கின்றது என்றார்". இன்று அமெரிக்கர்கள் சொன்ன தெல்லாம் பொய் என்றானதால், இஸ்லாத்தை ஏற்றவர்கள் நாம் சத்தியத்தில் தான் இணைந்தோம், என மகிழ்ச்சி அடைகின்றார்கள்.**

**ஆப்கானிஸ்தான் வெற்றிக்குப்பின் இந்த மார்க்கம் இன்னும் வேகமாக வளரும்.**

**மேலும் குற்றவாளிகள் வெறுத்த போதிலும், அல்லாஹ் பொய்யை அழித்து ஹக்கை உண்மையை - நிலைநாட்டவே (நாடுகிறான்). (அல்குர்ஆன் : 8:8)**

தீவிரவாதத்திற்கு இஸ்லாத்தில் சற்றும் இடமில்லை என்பதைத் தெளிவுபடுத்திய 22 ஆண்டுகளுக்குப்பின் இப்போதைய நிகழ்வுகள் அதை உண்மைப்படுத்தி இருக்கின்றன.

**நவீன சிலுவைப்போர்**

செப்டம்பர் 11, 2001ல் சரியாக 9:03 மணிக்கு அமெரிக்காவுக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதங்களையும், பொருட் சேதங்களையும், பொருள் இழப்புகளையும் கண்டு கண்கலங்காத நாடுகளே இல்லை. குறிப்பாக எல்லா முஸ்லிம் நாடுகளும் தங்களுடைய வேதனையை வெளிக்காட்டின. உலக முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்தார்கள். அத்தோடு நில்லாமல் அமெரிக்கா எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவிப்பதாகவும் முஸ்லிம் நாடுகள் அறிவித்தன. அமெரிக்காவின் அடாவடித்தனங்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட ஈராக்கும் அதில் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்தது.

உலக நாடுகள் அனைத்தும் ஒருமித்து தங்கள் கருத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில்



அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், தன்னுடைய கற்பனை எதிரி உசாமா பின்லேடனையும், அவர் தஞ்சம் புகுந்திருக்கும் ஆப்கானிஸ்தானையும் எதிர்க்கும் செயலை “நவீன சிலுவைப் போர்” (Modern Crusade) என அறிவித்தார். சிலுவைப் போர்களில் புஷ் வகையறாக்கள் எப்போதுமே வென்றதில்லை என்ற வரலாற்றையும் புஷ், மறந்துவிட்டுத்தான் இந்த அறிவிப்பைச் செய்தார். இந்த நவீன சிலுவைப் போரிலும் தோற்றே போனார்கள்.

இவர் இந்த அறிவிப்பைச் செய்தவுடன் பல முஸ்லிம்களும், இந்தியாவைச் சார்ந்த பல சீக்கிய அன்பர்களும் அமெரிக்க மக்களால் கொலை செய்யப்பட்டார்கள். (தி இந்து 23.9.2001)

உலகிலுள்ள ஒரே வல்லரசு அமெரிக்கா. அதன் அனைத்து அதிகாரங்களும் ஒரு சேரக் கைவரப் பெற்றவர் அன்றைய அமெரிக்க அதிபர் புஷ். அவர் பொறுப்பற்ற ஒரு சொல்லைச் சொல்லி ஒரு பெரும் போரை ஆப்கானிஸ்தானில் தொடங்கினார்.

அதிபர் புஷ்ஷின் அன்றைய அறிவிப்பு அவரது மனநிலையைத்தான் படம் பிடித்துக் காட்டிற்று. அதில் பல படிப்பினைகள் உண்டு. அவர் தனது கற்பனையில் இஸ்லாத்தையும், முஸ்லிம் நாடுகளையும் எதிரிகளாகக் கொண்டே இருக்கின்றார் என்பதையே அவர் தனது அவசரக் குடுக்கை அறிவிப்பின் மூலம் தெரிவித்துள்ளார்.

எது நடந்தாலும் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் பழி போடுவது என்பது ஜார்ஜ் புஷ்ஷின் அடிமனதில் இருக்கின்றது என்பது வெட்ட வெளிச்சமாகியது. அன்று இதனால்தான் அவர், தான் அதிபராக வீற்றிருக்கும் அமெரிக்காவின் மீது யார் தாக்குதல் நடத்தினார்கள் என்பதை கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. தன் கற்பனை எதிரியோடு போர்தொடுக்க ஆயத்தமாகினார். உண்மையைச் சொன்னால் காற்றோடு விமானச் சண்டைபோட தயாரானார்.

22 ஆண்டுகளுக்குப் பின் அவருடைய இராணுவத்தினரே, அவர் பொய் சொன்னார் என்பதை பிரகடனப்படுத்தி வருகின்றார்கள்.

**முஜாஹித்களின் வாய்மை**

நாங்கள்தான் தாக்கினோம் என்பதற்கோ

அல்லது எங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் உசாமாதான்தாக்கினார்என்பதற்கோஉங்களிடம் ஆதாரங்கள் இருந்தால் தாருங்கள்" என ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் கேட்டார்கள். இன்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆதாரங்கள் எதையுமே அமெரிக்காவினால் தரமுடியவில்லை. எடுத்தேன் கவிழ்த்தேன் என போர்ப் பிரகடனம் செய்தார். இப்போது அமெரிக்க மக்களுக்கே பதில் சொல்லிட இயலவில்லை.

உலக மக்களின் அனுதாபத்தைப் பெற அன்றைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் ஒரு அறிவிப்பைச் செய்து கொண்டார். அது, "நீதி தேடுகின்றோம்" என்பதே!

நீதி தேடுவதும், பழி தீர்ப்பதும் தெளிவான சாட்சியங்கள், நிரூபனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டும். இன்னுஞ் சொன்னால் நிரூபிக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையில்தான் குற்றவாளியை இனங்காண வேண்டும். அதன்பிறகே தண்டனையளிப்பதைப் - பற்றி பேசிட வேண்டும் என்றெல்லாம் முஜாஹித்கள் வைத்த கோரிக்கையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் "எந்த ஆதாரத்தையும் தரமாட்டேன், எதையும் நிரூபிக்கவும் மாட்டோம், ஆப்கானிஸ்தானையும் அதில் புகலிடம் தேடி அபயம் கண்ட (அமெரிக்காவின் முன்னாள் நண்பர், பிற்றை நாள் எதிரி) உசாமா பின்லேடனையும் கொலை செய்வேன்" என்று அறிவித்துக் கொண்டே இருந்தார். இதுவும் பெரும் தோல்வியில் முடிந்தது. (பார்க்க பெட்டி செய்தி-1)

தாலிபான் அரசின் செயல்களை முஸ்லிம் உலகம் உன்னிப்பாக கவனித்து வந்தது. அது தவறு செய்யத் தலைப்பட்டபோதெல்லாம் உலக இஸ்லாமிய அறிஞர்கள் அதன் கைகளைப் பிடிக்கத் தவறியதில்லை. அமெரிக்காவின் தலைவர்கள் அமெரிக்கர்களை ஏமாற்றிடுவதைப் போல் முஸ்லிம் அறிஞர்களை யாரும் ஏமாற்றிட இயலாது.

இஸ்லாமிய உலகின் முதுபெரும் அறிஞர் டாக்டர். யூசுஃப் அல் கர்ளாவி அவர்கள் நேரடியாகவே சென்று தாலிபானுக்கு அறிவுரை வழங்கினார்கள். இதற்கு பாமியாள் சிலை உடைப்பின் போது டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி அவர்கள் மேற்கொண்ட பயணங்கள் எடுத்துக் காட்டுகளாகும்.

வரலாறு முழுவதும் இஸ்லாமிய அறிஞர்கள் முஸ்லிம் ஆட்சியாளர்கள் தவறிழைக்கத் தலைபட்டபோது இதுபோல் தங்கள் கடமையை நிறைவேற்றி உள்ளார்கள்.

தாலிபான் தவறு செய்தபோது அதைத் தடுத்தவர்கள், தட்டிக் கேட்டவர்கள், "இப்போது எந்த அதிகாரத்தின் கீழ் ஆப்கானிஸ்தான் மக்களைத் தாக்கினீர்கள் எனக் கேட்கின்றார்கள்.


**கென்யா - பொய்**

பின்லேடனை ஒப்படைக்க வேண்டும் என்ற ஒப்பாரி, அமெரிக்காவிலிருந்து தொடர்ச்சியாக வந்தது. கென்யா, தான்ஸானியாவிலுள்ள அமெரிக்காவின் தூதரகங்கள் சில தகர்க்கப்பட்டன. அப்போதிருந்தே அமெரிக்கா இப்படியொரு வேண்டுகோளை வைத்து வந்தது.

இப்போது அமெரிக்காவின் பொய்கள் அம்பலப்பட்டுவிட்ட நிலையில், கென்யா, தான் ஸானியா ஆகிய இடங்களில் நடந்த தாக்குதல்களும் அமெரிக்காவின் கைவண்ணந்தான் என்பது தெளிவு. இன்று அமெரிக்கர்கள் தங்கள் தலைவர்களைப் பார்த்து எங்களிடம் பொய் சொன்னாய் அதனால் நாங்கள் எங்கள் சகோதரர்களை ஆப்கானிஸ்தானில் இழந்தோம் எனக் கூறும்போது இந்தப் பொய்யும் அடங்கும்.

அன்று இந்த வேண்டுகோளுக்கு பின்லேடனுக்கு அபயமளித்து வரும் ஆப்கானிஸ்தான் அரசு இப்படி பதில் சொன்னது :

"அமெரிக்காவுக்குத் தீவிரவாதி என்றால் பின்லேடன்தான். பின்லேடன் இப்போது தான் ஆப்கானிஸ்தானில் இருக்கின்றார் என்றில்லை. அவர் கடந்த 17 ஆண்டுகளாக இங்கே இருக்கின்றார். அவர் ரஷ்யாவுக்கு எதிராகப் போராடினார். அவர் ஏன் தீவிரவாதி? பாமர மக்களைக் கொன்றுவிட்டாராம். அவரை அழிக்கப்போகின்றோம் என்று கூறி 75 ஏவுகணைகளைப் பாமர மக்கள் மீத ஏவிற்று அமெரிக்கா. இதில் ஏதும் அறியாத அப்பாவி மாணவர்கள் 19 பேர் இறந்தார்கள். அன்று அப்பாவி மாணவர்களைக் கொன்றது அது காலப்போக்கில் பல லட்சம் என்றானது."



மேலும் அன்று ஆப்கானிஸ்தர் கூறியது :

"எங்கள் அப்பாவி மாணவர்களில் 19 பேரைக் கொலை செய்தார்கள் என்பதற்காக நாங்கள் 75 ஏவுகணைகளை அமெரிக்கா மீது ஏவுகின்றோம் என வைத்துக்கொள்ளுங்கள். அதற்குக் காரணம் அமெரிக்காவில் ஒரு தீவிரவாதி இருக்கின்றான் என நாங்கள் கருதுகின்றோம் என்று சொல்லு கின்றோம் என்றும் வைத்துக்கொள்ளுங்கள். அதில் 19 அமெரிக்க மாணவர்கள் இறந்தால் அமெரிக்கா சும்மா இருக்குமா?.."

"நாங்கள் ஒசாமாவுக்கு எதிராக ஆதாரமிருந் தால் தாருங்கள் 'என அமெரிக்காவைக் கேட்டோம். தந்தால் நாங்கள் எங்கள் நாட்டிலே அவரை விசாரித்துத் தூக்கு தண்டனை தருகின்றோம் என்று உறுதி அளித்தோம்.. ஆனால் அமெரிக்காவோ எங்கள் நீதித்துறையின் மேல் நம்பிக்கை இல்லையென்று சொல்லிவிட்டது. ஆனால், நாங்கள் மட்டும் அமெரிக்காவின் நீதித்துறையை நம்ப வேண்டுமா?"

தாலிபான்களின் சுழலும் தூதர் செய்யித் ரஹ்மத்துல்லாஹ் ஹாஷிமி அமெரிக்காவின் தென் கலிஃபோர்னியாவில் மார்ச் மாதம் 10,2001ல் கேட்ட 9 வினாக்கள் இவை.

தாலிபானின் இந்த நியாயமான வினாக் களுக்கு அன்று மட்டுமல்ல அமெரிக்கா இன்ற ளவும் எந்தப் பதிலையும் தரவில்லை. ஆனால் அமெரிக்கா அதன் ஆள்பலத்தையும் ஆயுத பலத்தையும் நம்பி போர்க்களம் கண்டு தோற்றுப் போனது.

**பிரிட்டீஸ் நாடாளுமன்றம்**

இதே கேள்விகளை தாலிபானும் பல உலக நாடுகளும் கேட்டிருக்கின்றன. அதில் பிரிட்ட னின் நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளால் எழுப் பப்பட்ட குரல்கள் கவனிக்கப்பட வேண்டியவை. எதிர்கட்சிகள் இப்படிக் கூறின...

"உறுதியான அத்தாட்சிகளின் அடிப்படை-யில்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். அந்த நடவடிக்கைகளும் ஆத்திரப் படாமல் ஆய்ந்து கவனமாக எடுக்கப்பட வேண்டும்" (The Hindu Sep-18,2001)

இப்படி எதிர்கட்சிகள் எடுத்து வைத்த நியாயமான நிதர்சனமான வாதங்களைப் பற்றி எந்தக் கவலையுமின்றி அமெரிக்காவை ஆதரித்தார் - பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேர்.

அன்றைய சீனாவின் அதிபர் ஜியாங் ஜெமிம் "அமெரிக்கா எடுக்கும் எந்த நடவடிக்கையானா லும் அது மறுக்க முடியாத ஆதாரங்களின் (Irrefu table Evidence) அடிப்படையில் அமைந்ததாக இருக்க வேண்டும்" என்று கூறினார்.

"ஐ.நா.வின் சேவைகளையும் முழுமையாகப் பயன்படுத்திட வேண்டும்" என்றும் சீனா கூறியது.

இதன் பொருள் : இதற்கு அரசியல் தீர்வுகள் ஏதும் உண்டா என்று பார்த்திட வேண்டும் என்பதே. ஆனால், புஷ் "இது நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நேரம். பேச்சுவார்த்தைகளுக் கான நேரமல்ல" என்று கூறினார். ஆனால், ஃபாலஸ் தீனப் பிரச்சனையில் "பேச்சு வார்த்தைகளைத் தவிர வேறு மார்க்கமே இல்லை" என 74 ஆண்டு களாக சொல்லி வருகின்றது அமெரிக்கா.

இந்தியாவிலும் அனைத்துக்கட்சி கூட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் இப்படிக் கூறியது....

"இதுபோன்ற யுத்திகள் நம்பகரமான, நியாயமான, அழுத்தமான, சர்வதேச சட்டங் களின் முன்பும் மக்கள் கருத்துக்களின் முன்பும் நிற்கக்கூடிய ஆதாரங்களின் அடிப்படையில் அமைத்திட வேண்டும்." (The Hindu,23.09.2001)

இதன்பிறகு பிரதமர் வாஜ்பாய், "இந்திய அரசால் எடுக்கப்படும் முடிவுகள் தேசிய நலனை அடிப் படையாகக் கொண்டு இருக்கும்" என்று தன்னை மாற்றிக் கொண்டார்.

(The Hindu,23.09.2001)

ஆனால் இரட்டை கோபுரங்களின் இடிந்த துகள்களை வாங்கி அமெரிக்காவைப் காப்பாற் றினார். மொத்தத்தில் அமெரிக்காவின் கற்பனை யில்தான் பின்லேடனும், ஆப்கானிஸ்தானும் எதிரிகள் அல்லாமல் நிரூபிக்கப்பட்ட உண்மை களின் சாட்சியங்களின் அடிப்படையில் அல்ல.

இன்று அமெரிக்காவின் தலை தாழ்ந்தது. நியாயத்தைப் பேசியவர்கள் வென்றார்கள். இது இனிவரும் நாட்களிலும் வரலாறாகும் என்பதால் அனைவரும் தங்கள் நெஞ்சங்களில் நிறுத்திட வேண்டும்.

அமெரிக்காவின் மீதான தாக்குதல்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று பின்லேடனும் தொடர்ந்து அறிக்கை விட்டார். இருந்தும் எதைப் பற்றியும் கவலையில்லை. அவரை உயிருடனோ, பிணமாகவோ அவர் எனக்கு வேண்டும் என பிணந்தின்னும் பசியால் புஷ் சீரினார். இது அமெரிக்க எதேச்சதிகாரத்தின் தெளிவான வெளிப்பாடு. இன்று பில்டேன் தேசியவாதி - புஷ் பொய்யன்.

**அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியது யார்..?**

"ஆதாரங்களைத் தரமாட்டேன். ஆனால், ஆயுதப் போர் ஒன்றை நடத்தியே தீருவேன்" எனக் கூறினார் அன்றைய அமெரிக்க அதிபர் புஷ். அமெரிக்காவின் ஆயுத பலம் அமெரிக்காவை அப்படி செயல்பட வைத்தது. இதனை முஸ்லிம் கள் செய்திருக்கவே மாட்டார்கள்.

காரணம் : இஸ்லாத்தில் இதுபோன்ற செயல் களுக்கு அனுமதியில்லை (இதனை முன்னுரையில் விளக்கியுள்ளோம்).

அடுத்து அமெரிக்காவில் வேகமாக வளர்ந்து வரும் மார்க்கம் இஸ்லாம். அங்கு முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை மிகவும் அழகாகச் செய்து வருகின் றார்கள். பல்வேறு காரணங்களாலும் அமெரிக்க மக்கள் இஸ்லாத்தில் இணைந்து வருகின்றார்கள். பில் கிளிண்டன் வீடுவரை இஸ்லாம் சென்றிருக் கிறது.

அவரது மகள் சில்ஷியா இஸ்லாத்தை ஆழமாகப் படித்து வருகின்றார். இரண்டு மனைவிகள் விவகாரத்தில் ஆலோசனையாகக் கூறியுள்ளார். இந்நிலையில் இது போன்றதொரு தாக்குதல் அங்குள்ள இஸ்லாமியப் பணியினை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிடும். ஆகவே அறிவுள்ள எந்த முஸ்லிமும் இதனை செய்ய மாட்டான்.,

அமெரிக்காவில் நடக்கின்ற இஸ்லாமியப் பணிகள் மட்டுந்தான் பாதிக்கப்படும் என்றில்லை. உலகெங்கிலும் நடக்கின்ற அமைதியான இஸ்லா மியப் பணிகள் அனைத்தையும் பாதிக்கும்.

ஏனெனில் இதுபோன்ற செயல்கள் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் மிகவும் தவறானதொரு எண்ணத்தை ஏற்படுத்தும்.

உலகில் வாழும் முஸ்லிம்கள் அனைவர் மீதும் ஒரு பயங்கரவாதச் சாயம் பூசப்படும். ஆக, உலகம் முழுவதும் இஸ்லாமியப் பிரச்சாரம் பின்னுக்குத் தள்ளப்படும். ஆனால் இவற்றில் எதுவும் நடக்கவில்லை மாறாக இஸ்லாத்தின் வளர்ச்சிக்கே பயன்பட்டது. இப்போதைய வெற்றி இன்னும் இஸ்லாத்தில் இணைவோர் எண்ணிக் கையை அதிகப்படுத்தும், வேகப்படுத்தும்.

இதுபோன்ற தாக்குதலால் எடுத்த எடுப்பி லேயே 2000 முதல் 5000 முஸ்லிம்கள் அழிவார்கள். - ஏனெனில் WTC என்ற உலக வர்த்தக மையத் தில் 5,000 முஸ்லிம்கள் வேலை செய்து கொண்டி ருந்தார்கள். குறைந்தபட்சம் 2,000 முஸ்லிம்கள் எப்போதும் பணியிலிருப்பார்கள். இப்படி 5000 முஸ்லிம்களை (குறையாமல் 2000முஸ்லிம்களை) எந்தக் காரணமும் இல்லாமல் கொலை செய்பவன் நிச்சயமாக மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் நரகத்தையே நிரந்தர வசிப்பிட மாக்கிக் கொள்வான். (ஏனைய உயிர்களுக்கும் இந்த விதி பொருந்தும் என்பதை அறிமுகத்தில் குறிப்பிட்டுள்ளோம்) ஆக, துளியளவு ஈமான் கொண்டவன் கூட இதைச் செய்திருக்க மாட் டான். உண்மையிலேயே இந்த இடிபாடுகளில் சிக்கி பல முஸ்லிம்கள் இறந்தும் இருக்கின் றார்கள். சரியான எண்ணிக்கை தெரியவில்லை. இவர்களை இறைவன் ஷஹீத், இறைவனின் வழியில் வீரமரணமடைந்தவர்கள் எனக் கொள்வான், சுவர்க்கத்தை தருவான்.

இந்த தாக்குதல் நடந்தவுடன் அமெரிக்காவில் சிகாகோ பகுதியில் கூடிய முஸ்லிம்கள், இப்படியும் ஒரு அச்சத்தை வெளிக்காட்டி இருக்கின்றார்கள்.

“அமெரிக்காவின் மேற்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் பல மதத்தீவிரவாதிகள் வாழ்கின்றார்கள். இவர்கள் முஸ்லிம்களைத் தாக்கிட தருணம் பார்த்து காத்துக் கிடக்கின்றார்கள். ஏதேனும் சிறு புகைச்சல் ஏற்பட்டால் கூட முஸ்லிம்களை தாக்கிட ஆரம்பித்து விடுவார்கள். முஸ்லிம்களின் உடமைகளைச் சேதப்படுத்தி விடுவார்கள். நிலைமை இவ்வாறிருக்க முஸ்லிம்கள் இதனைச் செய்து முஸ்லிம்களை அழிக்க எதிரிகளுக்கு வாய்ப்புகளை வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதில்லை.

(M. Atir All from Chicago, Fax Message 13.09.2001)

முதலில் பலியாகும் 5000 முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்கள் பெரும் உயிர்ச் சேதங்களுக்கும், பொருட் சேதங்களுக்கும் ஆளாகுவார்கள். இது நடக்கவும் செய்தது. இன்னும் அதாவது, 22 ஆண்டுகளுக்குப் பின்னும் தொடருகின்றது. இப்போது முஜாஹித்கள் பெற்றிருக்கும் வெற்றியும் அமெரிக்கர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வும் நிலைமையை மாற்றுமா? பார்ப்போம்.

அதிபர் ஜார்ஜ் புஷ்ஷைத்தான் அமெரிக்க முஸ்லிம்கள் அன்று தேர்தலில் ஆதரித்தார்கள். அவர்தான் வெற்றியும் பெற்றார். இதில் அமெரிக்க முஸ்லிம்கள் ஆசுவாசப்பட்டார்கள், மகிழ்ச்சியடைந்தார்கள் என்பதை உலக மக்கள் அனைவரும் அறிவார்கள். ஏனெனில் புஷ்-ஐ எதிர்த்து நின்றவர். அல்கோர் யூதர்களின் ஆதரவைப் பெற்றவர்.

ஆக, புஷ்ஷுடைய ஆட்சியை அங்குள்ள முஸ்லிம்களுக்கு எதிராக மாற்றிட எந்த முஸ்லிமும் விரும்பமாட்டான், யூதர்களைத் தவிர.

அதேநேரத்தில் முஸ்லிம்களைப் பிடிக்காதவர்கள், அமெரிக்க முஸ்லிம்களை அங்குள்ள குடிமக்களிடமிருந்தும் ஆட்சியாளர்களிடமிருந்தும் அந்நியப்படுத்த நினைப்பவர்களே இதனை செய்திருக்க முடியும்.


அப்போது முஸ்லிம்கள் அந்நியப்படுத்தப்படவில்லை. எதிரியாகவே ஆக்கப்பட்டுவிட்டார்கள். இதில் எதிரிகள் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். ஆகஸ்ட்-15, 2021 தாலிபாக்களின் வெற்றி. முஸ்லிம்களைத் தலைநிமிரச் செய்ததோடு, அவர்களின் எதிரிகளைத் தலைதாழ்த்தவும் செய்துவிட்டது.

இன்று இஸ்லாத்தை விளக்கிச் சொல்லும் பத்திரிக்கைகள் பல அமெரிக்காவிலிருந்துதான் வெளிவந்தன. இந்தப் பத்திரிக்கைகள் ஆங்கில மொழியில் வெளிவருவதால் அமெரிக்காவில் மட்டுமல்லாமல் உலகில் எல்லாப் பாகங்களிலும் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. உண்மையைச் சொல்வதானால் இந்த பத்திரிகைகளை உலகின் வேறெந்த பகுதியிலிருந்தும் வெளியிட முடிவதில்லை.

இதுபோன்ற ஆக்கப்பூர்வமான இஸ்லாமியப் பணிகளுக்கு நிரந்தர தளமாக அமையும் அமெரிக்காவை தாக்க எந்த முஸ்லிமும் முன்வரமாட்டான். 9/11க்குப் பின் இந்த பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. அவற்றுள் முக்கியமான பத்திரிகை IMPACT INTERNATIONAL. (பார்க்க பெட்டிச் செய்தி)

அதே நேரத்தில் இப்படியெல்லாம் இஸ்லாம் தளைக்க அமெரிக்கா தளமாக அமைகின்றதே என சஞ்சலப்படுவோர் இதனை செய்திருக்க நிரம்பவே வாய்ப்பிருக்கின்றது.

இப்படியெல்லாம் சொல்லி விடுவதால் அமெரிக்கா மீது முஸ்லிம்களுக்கு வருத்தங்களே இல்லை என்றில்லை. ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்



மீது யூதர்கள் கட்டவிழ்த்துவிடும் அநியாயங் களுக்கு அமெரிக்காவின் ஒப்புதல் உண்டு. இன்னும் சொன்னால் உதவிகளும் உண்டு, அமெரிக்காவின் பண உதவியால்தான் புதிய யூதக் குடியேற்றங்கள் கட்டமைக்கப்படுகின்றன.

இந்த ஆதரவு இஸ்ரேல் என்ற யூதநாடு உருவான நாளிலிருந்தே இருக்கின்றது. இஸ்ரேல் என்ற நாட்டுக்கு ஐ.நாவில் அங்கீகாரம் கிடைத் ததே அமெரிக்காவின் அடாவடியினால்தான். அதேபோல இன்னும் பலநூறு விஷயங்களில் அமெரிக்காவின் செயல்கள் முஸ்லிம்களை வேதனைகளுக்கு உள்ளாகியிருக்கின்றன.

இத்தனையுமிருந்தாலும் அமெரிக்கா வையோ, அமெரிக்க மக்களையோ இதுவரை ஃபாலஸ்தீனர்களோ அவர்களின் சார்பில் சண்டை யிடும் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் போன்ற அமைப்பு களோ தாக்கியதில்லை. அதேபோல் ஏனைய முஸ்லிம் நாடுகளும் அமெரிக்காவைத் தாக்க நினைத்ததில்லை, முனைந்ததுமில்லை.

ஏனெனில் ஃபாலஸ்தீனர்கள் பலர் அமெரிக் காவில் குடியிருக்கின்றார்கள், வேலை செய்கின் றார்கள். அங்கிருந்து கொண்டே ஃபாலஸ்தீன மக்களுக்காக இயக்கங்கள் நடத்தி வருகின்றார்கள். நிதிதிரட்டுகின்றார்கள். ஆகவே ஃபாலஸ்தீனர்கள் சுதந்திரமாக இயங்கும் நாடாக அமெரிக்கா இருக்கின்றது. அதேபோல் ஏனைய நாட்டு முஸ்லிம்களும் அமெரிக்காவில் இயங்கி வருகின்றார்கள்.

அமெரிக்காவில் பல ஃபாலஸ்தீன தலைவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். எடுத்துக் காட்டாக, அபூஜிஹாத் ஷஹீத் அவர்கள், அவர்களின் குடும்பம் இஸ்மாயில் அயராஜி அல்ஃபருக்கி ஷஹீத் அவர்கள், அவர்களின் குடும்பம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இங்கேயும் ஒன்று குறிப்பிடத்தக்கது. அது. இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் அமெரிக் கர்களோ, அமெரிக்காவின் உளவுத்துறையினரோ அல்ல மாறாக யூதர்களின் உளவுத்துறையான "மொஸாத்" தான் இதுபற்றிய தகவல்களை அவ்வப்போது வைகறை வெளிச்சத்தில் இடம்பெறச் செய்துள்ளோம்)

ஆக அமெரிக்காவை முஸ்லிம்கள் தாக்கிட எந்த முகாந்திரமும் இல்லை. அப்படித் தாக்குவதால் அவர்கள் பெரும் நஷ்டங்களையே சந்திப்பார்கள்.

இந்தத் தாக்குதல்கள் நடந்த அடுத்த நாளே இதனை ஃபாலஸ்தீனர்கள் செய்யவில்லை என்பதை இஸ்ரேலே அறிவித்தது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. (ஆதாரம்: The Hindu 12.09.2001)




அமெரிக்காவினால் பாதிக்கப்பட்டவர்கள் அநியாயத்திற்குள்ளானவர்கள் முஸ்லிம்கள் - மட்டும்தான் என்றில்லை. உலக நாடுகள் அனைத்தின் உள்விவகாரங்களிலும் அமெரிக்கா தலையிட்டு குழப்பி இருக்கின்றது. உலக நாடுகளின் ஆட்சியாளர்களை தன் கைகளுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்கின்றது. அல்லாதபோது (REGIME CHANGE) ஆட்சி மாற்றம் எனக் கூறி கலகங்களை விளைவிக் கின்றது.

உலக நாடுகளை அணுகுகின்ற போது அமெரிக் காவின் அணுகுமுறை எப்படி இருந்தது என்பதை அமெரிக்காவை சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் இப்படி குறிப்பிடுகின்றார்:

'அமெரிக்காவின் அணுகுமுறை ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்த உலகத்திற்கு முன்னாள் இரண்டு விஷயங்களை அமெரிக்கா முன்வைக்கின்றது. ஒன்று எங்களோடு சேர்ந்து விடுங்கள் அல்லது மரணத்தையும், அழிவையும் சந்தியுங்கள்' (Noam Chomsky in the Times of India. 24.09.2001).

# MNP / தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட் இவையும் - 9/11 தாக்குதலும்

2000ம் ஆண்டு MNP என்ற மனித நீதி பாசறையைத் தொடங்கினோம். அது இதில் இரண்டு பெருநாள்களுக்குப் பின்னரும் ஒரு பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தி வந்தோம். இப்படி வருடம் இரண்டு பெருநாள் சந்திப்புகள். இந்த நிகழ்ச்சிகள் சகோதர சமுதாயத்தவர்களை அழைத்து விருந்து வைத்து, இஸ்லாத்தை எடுத்துச் சொல்லும் நிகழ்வுகள். இந்த நிகழ்ச்சியில் ஒரு பெருநாள் விருந்தும் உண்டு. ஆயிரக்கணக்கில், சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் இவை.

நாம் இஸ்லாத்தை ஏன், சகோதர சமுதாயத்தவர்கள் ஏற்றிட வேண்டும் என்பதை முதலில் எடுத்துச் சொல்வோம். பின்னர் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களிடம் தங்கள் ஐயங்களைக் கேள்விகளாகக் கேட்க நேரம் ஒதுக்குவோம்.

இந்தக் கேள்வி நேரங்களில், தவறாமல் ஒரு கேள்வி எழும், அது நீங்கள் குண்டு வைக்கின்றிர்களே! என்பதுதான். நாம் அதற்கு, முஸ்லிம்கள் மீது சுமத்தப்படும் வீண் பழிகள்தாம் அவை என்பதைத் தெளிவு படுத்துவோம், இன்றைக்கு மக்களுக்குக் கிடைக்கும் அனைத்து விளக்கங்களையும், உண்மைகளையும் அன்றே எங்கள் நிகழ்ச்சி களில் கலந்து கொண்டவர்களுக்குச் சொல்லி வந்தோம்.

இந்த நிகழ்ச்சிகள் தமிழகமெங்கும் நடைபெற்று வந்ததால், தமிழகத்தில் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்த விளக்கங்கள் கிடைத்துக் கொண்டே இருந்தன. காலப்போக்கில் உண்மைகளை சகோதர சமுதாய்த்தைச் சார்ந்தவர்கள் புரிந்து கொண்டார்கள், ஏற்றுக் கொண்டார்கள். அதனால் பல வருடங்களாக இந்தக் கேள்வி வரவே இல்லை.

இதே நிகழ்ச்சிகளை நாங்கள் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் வழியாக பல வருடங்களாக நடத்தி வருகின்றோம். தாருல் இஸ்லாம் நடத்திய நிகழ்ச்சிகளிலும் இந்தக் கேள்விகள் எழவில்லை.

இஸ்லாத்திற்கு வருவோரின் எண்ணிக்கை பெருகியே வந்திருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்

*தனது அணியில் அங்கம் வகிக்காதவர்களை அழிப்பது என்பதுதான் அமெரிக்காவின் அணுகு முறை இது இப்போதைய நிலை என்றில்லை. இது அமெரிக்காவின் நிரந்தர நிலை இதனால் உலகின் பல்வேறு நாடுகளையும் அது பகைத்துக் கொண்டுள்ளது.*

*இந்தப் பகை நாடுகளின் பட்டியல் அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சுக்கு இலக்காகி மூன்று லட்சம் உயிர்களையும் அதற்குப்பின் ஒரு பெரும் தலைமுறையையும் இழந்தது ஜப்பான், ஆண்டு தோறும் இதற்கு விழா எடுத்து தனது இளைய தலைமுறையினருக்கு இதை நினைவுபடுத்தி வருகின்றது. இதற்காக ஜப்பானில் 'செம்படை' என்றொரு அமைப்பு இயங்கி வருகிறது. இதனால் ஜப்பானின் செம்படை இதைச் செய்திருக்குமோ என்ற ஐயமும் தொடக்கத்திலிருந்து எழுந்து தொடர்ந்து கொண்டிருந்தது. இப்போதும் அவர்களும் இல்லை என்பது தெளிவு.*

*அமெரிக்கன் குடிமக்கள் அனைவரையும் அமெரிக்கா மகிழ்ச்சியாக வைத்திருக்கின்றது என்று சொல்வதற்கில்லை. அங்கே வலது சாரிகள் இஸ்லாத்தை வெறுப்பவர்கள் வேகமாக வளர்ந்து வருகின்றார்கள்.*

*அமெரிக்காவை அதன் நிறவெறிக் கொள்கை ஆட்டிப்படைத்து வருகின்றது. அதன் அடக்கு முறைக்கு ஆட்பட்ட மக்கள் தினந்தோறும் கொதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அநியாயங் களைப் பொறுக்க இயலாமல் இஸ்லாத்தை அதிக அளவில் ஏற்று வருகிறார்கள். இதனால் இஸ்லாத்தை வெறுப்பவர்கள் யூதர்களோடு சேர்ந்து இதை செய்திருக்கலாம். இப்போதும் சூழ்நிலைகள் இதையே சுட்டிக்காட்டுகின்றன.*

*அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் தான் "பெண்டகன்" இந்தப் பெண்டகன் உலக அமெரிக்க ஆதிக்கத்திற்கு மிகவும் முக்கியமானது. இதில்தான் உலகைக் கண்காணிக்கும் நிறுவனங் களும் உலகில் அமெரிக்க ஆதிக்கத்தை நிர்வகிக்கும் நிறுவனங்களும் இருக்கின்றன. இதற் குள்ளால் என்னென்ன இருக்கின்றது என்பது முழுமையாக யாருக்கும் தெரியாது)*

*இதன் முக்கியத்துவம் கருதி இது கடுமையான-பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டது மட்டுமல்ல இதனை தற்காத்துக்கொள்ளும் கருவிகள் யாரும் இயக்காமலே ஆபத்தைக் கண்டறிந்து*

தாமாக இயங்கி தடுப்பவை, தாக்கிடுபவை. இந்த ஏற்பாட்டையும் கடந்து 9/11 தாக்குதல் நடந்திருக்கின்றது.

இத்தனை நுட்பம் நிறைந்த ஓரிடத்தைத் தாக்கிடுவது என்பது முஸ்லிம்களுக்கோ, தாலி பானுக்கோ, பின்லேடனுக்கோ இயலாத - ஒன்று. இந்த இடத்தின் அந்தரங்கங்களைத் தெரிந்த அமெரிக்காவின் உளவுத்துறை, அதன் கூட்டாளி இஸ்ரேலின் உளவுத்துறை ஆகியவற்றின் கை வண்ணமாகத்தானிருக்கும் இந்தத் தாக்குதல்.

அன்று அந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக அமெரிக்கா கூறும் இளைஞர்களை ஐந்து ஆண்டு களுக்கு முன்னரே மொஸாத் என்ற இஸ்ரேலிய உளவு நிறுவனம் கொலை செய்துவிட்டது. இது மகனை இழந்த தந்தை தந்த தகவல்.


**முஹம்மத் அட்டா இந்தத் தாக்குதலை நடத்தினாரா?**

அன்று மக்களை நம்ப வைத்திட இவர்கள் "முஹம்மத் அட்டா " என்பவரைக் குறிப்பிடு கின்றார்கள். அந்த அட்டாவைத்தான் மொஸாத் கொலை செய்துவிட்டது என்று அவர் தந்தை கூறியுள்ளார்.

இந்த முஹம்மத் அட்டா என்பவர் இஸ்ரேல் நாட்டில் ஒரு பஸ்ஸில் குண்டு வைத்தார் என்றும் இன்னொரு காரில் குண்டு வைத்தார் என்றும் இவற்றால்) அமெரிக்க உளவுத்துறையால் தேடப்பட்டு வருகின்றார் என்றும் கூறினார்கள். இவரை நீண்ட நாட்களாகவே அமெரிக்க உளவுத் துறை தேடி வந்ததாம். இதில் பல உண்மைகளை மூடி மறைக்கின்றார்கள்.

இந்த முஹம்மத் அட்டாவும். இன்னும் சிலரும் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்காக இஸ்ரேலிய உளவுத்துறையின் மொஸாதால் தேடப்பட்டு வந்தார்கள். பின்னர் இஸ்ரேலின் உளவு நிறுவனம் இவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது. அனைவரும் ஆச்சரியப்படக்கூடிய அளவில் சில வருடங்கள் கழித்து இவர்கள் இஸ்ரேலிய சிறைகளிலிருந்து விடுதலை செய்யப் பட்டு விட்டார்கள்.

இவர்கள் ஏன் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பது எவருக்குமே தெரியாது. இவர்கள் குற்ற மற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டார்களா? அமெரிக்காவின் உளவுத்துறையின் - எடுபிடி களாக ஆக்கப்படடு சொல்லும் இடத்தில் குண்டு வைத்திட வேண்டும் என விடுதலைச் செய்யப்பட்டார் களா? அல்லது 'இவர்கள் வேறு பணிகளுக்காக விடுதலை செய்யப் பட்டார்களா என்பது தெரியவில்லை.


முஹம்மத் அட்டா

இவர்கள் விடுதலை செய்யப்பட்ட நாட்களி லிருந்தே (முஹம்மத் அட்டாவையும்) அவரை சேர்ந்தவர்களையும் அமெரிக்க உளவுத்துறை தேடி வருவதாக கூறியது.

அமெரிக்காவின் மதிநுட்பம் வாய்ந்த உளவுத் துறையால் தேடப்படுபவர்கள், எப்படி ஆப்கா னிஸ்தானுக்குள் புகுந்தார்கள்? எப்படி விமானம் ஓட்டக் கற்றார்கள். எப்படி வியாபார விமானங் களுக்குள் புகுந்தார்கள்? எப்படி கடத்தினார்கள்? இலக்குகள் சரியாகத் தாக்கிடும் நுட்பங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தவர்கள் யார்?... உளவுத்துறையால் தேடப்பட்ட இவர்கள் எப்படி அமெரிக்காவில் அவ்வளவு சுதந்திரமாக உலா வந்தார்கள்?

இதற்கிடையில் முஹம்மத் அட்டா மொஸாத் என்ற யூத உளவு நிறுவனத்தால் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்கின்றாரே அவரது தந்தை அதற்கு அமெரிக்காவின் பதில் என்ன? 20 ஆண்டுகளாக எந்தப் பதிலுமில்லை, அவரைப் பற்றிய தகவலுமில்லை.

வல்லரசு அமெரிக்கா இன்றளவும் எந்த வலுவான ஆதாரத்தையும் தரவில்லை என்பது ஒரு புறமிருக்க, மறுபுறம் சில தடயங்களை சொல்லி மொத்த உலகத்தையும் திசைதிருப்பப் பார்த்தது. அவற்றுள் ஒன்று இதோ.

**உளவுத்துறை விட்ட புருடா?**

அமெரிக்க உளவு நிறுவனத்திற்கு (FBI) ஒரு தகவல் கிடைத்ததாம். அதில் கடத்தப்பட்ட விமானமல்லாத இன்னொரு விமானத்தில்

பயணம் செய்த ஒரு பயணி ஒரு தகவலைத் தந்தாராம் அவர், லோகன் (Logan) என்ற விமான தளத்தில் (இது அமெரிக்காவின் போஸ்டன் என்னும் இடத்திலுள்ளது) ஒரு இளைஞனை எதிர் கொண்டாராம். அந்த இளைஞன் மத்திய கிழக்குப் பகுதியைச் சார்ந்தவனாம். அங்கு ஒரு கார் நின்று கொண்டிருந்ததாம். அந்தக் காரில்தான் அவன் வந்தானாம். அந்தக் காருக்குள் சில அரபு மொழி நூல்களும், விமானத்தை எப்படி இயக்குவது - என்றொரு புத்தகமும் இருந்ததாம். மொட்டையாக இந்தத் தகவலைத் தந்தவர் இன்னொரு விஷயத்தையும் சொல்லியிருக் கின்றார். மிகவும் துல்லியமாக இது பற்றிக் குறிப்பிட்டிருந்தாராம்.

கதை எப்படி இருக்கின்றது? விமானம் எப்படி ஓட்டுவது என்பதை புத்தகத்தின் சில பக்கங் களைப் புரட்டி பார்த்தா தெரிந்து கொள்வார்கள்? உலக பயங்கரவாதத்தைச் செய்யும் திறமையும் அறிவுக் கூர்மையும் உடையவர் அந்தப் புத்த கத்தையும் தாங்கள் வந்த காரில் போட்டுவிட்டா செல்வார்?

அரபுமொழி, மத்திய கிழக்குப் பகுதி, இப்படி எல்லாம் சொல்லி பழியை இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் போடுவதற்கு அப்பட்டமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தானே இதிலிருந்து தெரிகின்றது.

இந்த நாடகம் இத்தோடு நிற்கவில்லை. அடுத்த காட்சிக்கு நகர்கிறது.

இவர்கள் விட்டுச் சென்ற காரில் இவர்களின் கடன் அட்டையையும் விட்டுச் சென்றார்களாம். அந்தக் கடன் அட்டையைப் பற்றிய விசாரணை யையும் மேற்கொண்டார்களாம். அது ஒரு மதுக்கடையில் கொண்டு போய் சேர்த்ததாம்.

அந்த மதுக்கடையை விசாரித்தார்களாம். அமெரிக்காவில் தாக்குதல் நடந்த நாளுக்கு இரண்டொரு நாளுக்கு முன்னால் இவர்கள் குடித்துவிட்டு மதுக்கடை மேனேஜருடன் சண்டை போட்டார்களாம். பில்லிலும் பணம் கட்டுவதிலும் பிரச்சினையாம்.

மதுக்கடையில் சண்டைபோடும் முழுக் குடிகாரர்களை இவர்கள் முஸ்லிம்கள் என முத்திரை குத்தினார்கள். அவர்களைக் கொண்டு நடப்பதா ஜிஹாத்? அல்லாஹ்வின் பாதைக்கு இவர்கள் லாயக்கானவர்களா?

மதிநுட்பமும், கூர்மையான செயல்திறனும் உடையவர்கள்தாம் அமெரிக்காவின் மீது அளந்து போட்டாற் போல் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும். அவர்கள் தங்கள் கடன் அட்டைகளை இங்கே போட்டுவிட்டுப் போகின்றவர்களாக நிச்சயமாக இருக்க மாட்டார்கள். இல்லை என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

சாதாரண திருடன் கூட தடையங்களைப் போட்டுவிட்டு திருடமாட்டான். ஆனால், உலகமகா தீவிரவாதிகள் இப்படியெல்லாம் செய்தார்கள் என உலகிலேயே மதிநுட்பம் நிறைந்ததாகக் கருதப்படும் அமெரிக்க உளவுத் துறை கூறுகின்றது. நம்ப வேண்டுமாம் நாம் இதை அன்று நம்பிய இராணுவ வீரர்கள் இன்று ஆத்திரப்படுகின்றார்கள். முட்டாள்களாக ஆகிவிட்டோம் என ஆதங்கப்படுகின்றார்கள்.

இவர்கள் விசாரணைக்கு முழு ஆதாரங்கள் கேட்க முடியாது. காரணம் அனைவரும் இறந்து விட்டதாக அறிவித்து விட்டார்கள்.

**அன்று விட்ட இன்னொரு புருடா?**

தாக்குதலுக்குப் பயன்படுத்திய விமானத்தி லுள்ள ஒரு பயணி விமானத்திலிருந்து கொண்டே தன்னுடைய தாயாரோடு பேசியிருக்கின்றார். அவர் அந்தப் பேச்சில் தான் பறந்து கொண்டி ருக்கும் விமானம் கடத்தப்படுவதாகக் கூறியிருக் கின்றார். தான் கத்தியால் குத்தப்படுவதாகவும், தான் தனது குடும்பத்தினரை நேசிப்பதாகவும் பேசியிருக்கின்றார். கடத்த முனைபவரின் சீட் நம்பரைக் கூட சொல்லியிருக்கின்றார். ஆனால் கடத்துபவர் எந்த நாட்டவரைப் போல் இருந் தார் என்பதையோ, அவரது இன நிற அடை யாளங்களையோ சொல்லவில்லை. இத்தனையும் நடந்த விமானத்தில் ஒன்று நடக்கவில்லை.

இந்த விமானங்களில் கடத்தும்போது தமிங்கை கொடுக்கும் பொத்தான் ஒன்று உண்டு. அதை விமான ஓட்டி தொடவே இல்லை. ஆக அமெரிக்கா முன்வைக்கும் எந்த ஆதாரமும் அறிவுக்குப் பொருந்துவதாக இல்லை. அன்று நம்பியவர்கள் முட்டாள்கள் ஆனார்கள் இன்று. (Source:Manar Tv, Sep 17-2001, Courtersy:G.K.)

இதனை யூதர்கள்தாம் செய்திருக்க வேண்டும் என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

**ஆதாரம் 1**

அமெரிக்காவில் சிகாகோ நகரில் கூடிய முஸ்லிம்கள் திட்ட வட்டமாக ஒரு செய்தியைச் சொன்னார்கள் என்பதை மேலே குறிப்பிட்டோம். அது உலக வர்த்தக மையத்தை முஸ்லிம்கள் தாக்கிட முனைந்தால், 2,000 முதல் 5000 முஸ்லிம்களின் பிணங்களின் மேல் நின்றுதான் நடத்திட வேண்டியதிருக்கும். ஆகவே எந்த ஒரு முஸ்லிமும் இதனைச் செய்யத் துணிய மாட்டான். இதனை முன்னரே தெளிவுபடுத்தினோம்.

**உலக வர்த்தக வளாகத்தில் 4000 யூதர்கள் வேலை செய்தனர். இந்த 4000 யூதர்களும் அன்று பணிக்கு வரவில்லை. அத்தனைபேரும் சொல்லி வைத்தாற்போல் "ஆப்சென்ட்" ஆகியிருக்கின்றார்கள்.**

இப்போது இப்படியொரு வினா எழுகின்றது. "அங்கே யூதர்களும் வேலை செய்து கொண்டிருப்பார்களே.... அவர்கள் இறக்க மாட்டார்களா? பல ஆயிரம் யூதர்களைக் கொலை செய்யும் ஒரு தாக்குதலை யூதர்கள் நடத்து வார்களா?"

இதில்தான் அதிசயமானதொரு செய்தி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. அந்த உலக வர்த்தக வளாகத்தில் 4000 யூதர்கள் வேலை செய்தனர். இந்த 4000 யூதர்களும் அன்று பணிக்கு வரவில்லை. அத்தனைபேரும் சொல்லி வைத்தாற் போல் "ஆப்சென்ட்" ஆகியிருக்கின்றார்கள்.

செய்தி ஆதாரம் - http//www.manartv.com<htp://www.manartv.com>

மனார் டிவி(17.09.2001) தரும் செய்தி ஒன்று இப்படிக் கூறுகின்றது.

"நியூயார்கிலுள்ள உலக வர்த்தக மையம் தாக்கப்பட்ட செய்தியை சர்வதேச செய்தி நிறுவனங்களின் வழி அறிந்தவுடன் (குறிப்பாக யூத செய்தி நிறுவனங்கள் இதை அறிவித்தவுடன்) யூதர்கள் இந்த இரண்டு வர்த்தக மையங்களிலும் உயிரிழந்த 4000 யூதர்களுக்கு அஞ்சலி செலுத்த வந்தார்கள். இப்போது மொத்தமாகவே உயிரிழந் தவர்கள் 2997 என்கின்றார்கள்.

ஆனால், அங்கே யாரும் யூதர்களைப் பற்றி பேசவில்லை. பின்னர்தான் கண்டுபிடிக்கப் பட்டது. அன்றைய தினம் (அனைவரும் ஆச்சரி யப்படும் அளவில்) எந்த யூதனும் வேலைக்கு வரவில்லை என்பது யூதர்கள் எவரும் இறந்ததாக யாரும் பேசிடவில்லை. எந்த யூதனும் காயமடைந்ததாகவும் இல்லை" ஆனால் மனார் டிவியின் செய்தியை தி கார்டியன் உட்பட மற்ற செய்தி நிறுவனங்கள் மறுத்தன.

இந்தச் செய்திகளின் அடிப் படையில் ஜோர்டானிலிருந்து வரும் அல் - வத்தன் என்ற பத்திரிகை இப்படியொரு செய்தியைச் சொன்னது :

"யூதர்கள் யாரும் அன்று உலக வர்த்தக மையத்தில் நுழையாததற்குக் காரணம் அவர்களுடைய உளவுத்துறை அவர் களுக்கு முன்கூட்டியே தந்த தகவல்தான் யூதர்களின் இந்தப் பொதுவான பாதுகாப்பு அமைப்பின் (General Security Apparatus) பெயர், "ஷபாக்" என்பதாகும்.

இந்நிலையில் அமெரிக்க அதிகாரிகளை வேறொரு ஆச்சரியம் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. அது எப்படி நம்மையும் மீறி யூத நிறுவனங்கள் அறிந்தன என்பதே! ஆனாலும் அவர்கள் யூதர்களை நோக்கி தங்கள் விரல்களை அசைக்சுக்கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது)



*எனினும் யூதர்களின் மேல் அமெரிக்கர்களுக்கு சந்தேகம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது போல் பாசாங்கு காட்டினார்கள். இப்போது உலக மக்கள் அனைவரும் அறிவர் 9/11 என்பது அமெரிக்க யூத உளவுத்துறைகள் வேலை என்பது.*

*மொத்த விவகாரத்திலும் யூதர்கள் தங்கள் மக்களுக்கோ, தங்கள் தலைவர்களுக்கோ அதிக சேதாரம் வராமல் பார்த்துக் கொண்டார்கள். உயிரிழப்புகள் அனைத்தும் அமெரிக்காவுக்குத் தான். பழி முஸ்லிம்கள் மீது.*

**ஆதாரம் - 2**

**ஷேரோன் விஜயம்** : *இந்த செய்தி யாடியட் அஹ்ரனாட்* (Yadiot Ahranot) *என்ற இஸ்ரேலியப் பத்திரிக்கையில் வந்த செய்தி இதுதான்:*

*“அமெரிக்காவின் மீது தாக்குதல் நடந்த அன்று. இஸ்ரேலின் பிரதமர் ஏரியல் ஷேரோன் நியூயார்க் வருவதாக இருந்தது. குறிப்பாக அவர் நியூயார்க் நகரின் கிழக்குப் பகுதிக்கு வந்து அங்கே ஒரு முக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதாக இருந்தது. அந்த நிகழ்ச்சி இஸ்ரேலுக்கு ஆதரவாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சிக்கு நீங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் வந்துவிடக் கூடாது என யூத பாதுகாப்பு அமைப்பான “ஷபாக்” கேட்டுக் கொண்டது.*

*நிகழ்ச்சியின் முக்கியத்துவம் கருதி இஸ்ரேலின் பிரதமர் ஏரியல் ஷேரோன் மீண்டும் “ஷபாக்” நிறுவனத்திடம் அதன் முடிவை மாற்றிக் கொள்ளும்படி வேண்டினார். ஆனால் “ஷபாக்” நிறுவனம் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷேரோனின் முடிவையே மாற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது.*

*முடிவில் அந்தக் கருப்பு நாளில் ஏரியல் ஷேரோனின் நியூயார்க் பயணம் நிறுத்தப்பட்டது. ஏரியல் ஷேரோன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியவில்லையே எனக் கவலையோடு இருந்தார். ஆனால், பின்னர் தான் அவரது கவலை கலைந்தது.*

*ஆக, இஸ்ரேலிய உளவுத்துறை இந்த ஏற்பாட்டில் முக்கிய பங்காற்றியுள்ளது என்பது தெளிவு. அதில் யூதர்களைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் கொஞ்சமும் தயங்கிடவில்லை என்பதும் தெளிவு.*

## அமெரிக்காவின் 9/11 க்குப்பின் இஸ்லாமியப் பத்திரிகை உலகம்

இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் பத்திரிகைகள், இஸ்லாமிய உலகில் நடக்கும் நிகழ்வுகளை நமக்குச் சொல்லும் பத்திரிகைகள், ஐரோப்பியர்களினால் அரங்கேற்றப்படும் இஸ்லாத்திற்கு எதிரான சதிகள், இவற்றை எல்லாம் உலக முஸ்லிம்களுக்கு எடுத்துச் சொல்லிடும் பத்திரிகைகள், இஸ்லாமிய நிர்வாக இயலில், வங்கி இயல் அதாவது இஸ்லாமிய பொருளாதார முறை, அரசியல் சிந்தனைகளில் முஸ்லிம் உலகில் ஏற்படும் மாற்றங்கள். இஸ்லாத்தின் ஒளியில் இந்த மாற்றங்களின் தரா தரங்கள் இவற்றையெல்லாம் உலக மக்களுக்குப் பொதுவாகவும், முஸ்லிம்களுக்குக் குறிப்பாகவும் சொல்லி வந்த பத்திரிகைகள் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தே வெளிவந்தன.

இந்தப் பத்திரிக்கைகளில் நினைவு கூறத் தக்கவை Impact International, Arabia Islamic World View, Inquiry, Focus என்பவை. இவையெல்லாம் இஸ்லாமிய நாடுகளிலிருந்து வெளிவந்திட இயலவில்லை. அதனால் ஐரோப்பிய நாடுகளிலிருந்தே தான் வெளிவந்தன.

காரணம், இந்தப் பத்திரிகைகள் மன்னர்களின் ஆட்சி, வம்சாவழி ஆட்சி ஆகியவற்றிக்கு எதிரானவை என்றாலும் முஸ்லிம் நாடுகளுக்கிடையே நடக்கும் நிகழ்வுகளையும் அவை நல்லவையோ கெட்டவையோ அவற்றையும் உலக மக்களுக்குச் சொல்லி வந்தன.

அதே நேரத்தில் இஸ்லாம் ஒரு கொள்கை அளவில் ஷரீயத் ஆட்சியையும், இஸ்லாமிய ஆட்சியையும் நிலைநிறுத்தும் அளவில் ஆக்கங்களையும் சிந்தனைகளை யும் வெளியிட்டன.

இவையெல்லாம் அரபு நாடுகளில் கோலோச்சிக் கொண்டிருந்த மன்னர்களுக்கும், வம்சா வழியாக ஆட்சியைக் கையில் வைத்துக் கொண்டிருந்த வர்களுக்கும் அச்சங்களை ஏற்படுத்தியது. எங்கே இந்தப் பத்திரிகைகள் தங்களுக்கு எதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்துவிடுமோ என அஞ்சினார்கள். அதனால் இந்த பத்திரிகைகளை அவர்கள் விரும்பவில்லை . ஆதலால் அரபு நாடுகளில் இருந்து கொண்டு இந்தப் பத்திரிகைகளை நடத்திட இயலவில்லை. ஆகவே, இந்தப் பத்திரிகைகள் ஐரோப்பிய நாடுகளிலிருந்துதான் வெளிவந்தன.

இவையெல்லாம் 9/11க்குப்பின் தீவிரவாத முத்திரை குத்தப்பட்டு நிறுத்தப்பட்டுவிட்டன. இப்போது சமூக வலைதளங்கள் வழிதான் ஓரளவுக்கு நமக்கு செய்திகள் வந்து சேருகின்றன.

**ஆதாரம் - 3**

அமெரிக்காவின் புலனாய்வுத் துறையான FBI இது சம்பந்தமாக 5 யூதர்களைக் கைது செய்துள்ளது. இந்த ஐந்து யூதர்களும் சம்பவம் நடந்த 4 மணி நேரங்களுக்குள் கைது செய்யப் பட்டார்கள். இவர்கள் தங்களுடைய கம்பெனி களின் மாடியில் நின்று உலக வர்த்தக மையத்தின் இரண்டு கட்டடங்கள் எரிந்து கொண்டிருப் பதை வீடியோ கேமராக்களில் பதிவு செய்து கொண்டிருந்தார்களாம். இவர்களின் நடத்தை களில் சந்தேகப்பட்டே அமெரிக்காவின் உளவு நிறுவனம் FBI இவர்களைக் கைது செய்தது. இவர்கள் நாங்கள் மகிழ்ச்சிகரமானதொரு நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் கொண்டிருந்தோம் எனக் கூறியது அமெரிக்காவின் உளவுத்துறையை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அமெரிக்கா தனது குட்டு வெளியாகிவிட்டது என்பதை அப்போதே உணர்ந்தது. ஆனால் அனைத்தையும் மூடி மறைத்து விட்டது. இப்போது அமெரிக்காவுக் காக போர்க்களத்தில் நின்ற வீரர்களே அவர் களுக்கு எதிராக மாறிவிட்டனர்.

**ஆதாரம் - 4**

இந்த தாக்குதல்கள் நடந்தவுடனேயே உலக மக்களுக்குச் செய்திகளை தருகின்ற அமெரிக்க நிறுவனங்கள் முஸ்லிம்கள் இதைச் செய்திருக் கிறார்கள் என்று நம்ப வைக்கும் விதத்திலேயே செய்திகளைத் தந்தன.

அமெரிக்காவில் செய்தி ஊடகங்கள் முழுக்க முழுக்க யூதர்களின் கைகளிலேயே இருக்கின்றன என்பதை உலக மக்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள்.

இவர்கள் தங்கள் தவறுகளை மறைப்பதற்கும் அதைவிட அவர்களின் பிரதான இலட்சியமாகிய முஸ்லிம்களின் மேல் பழியைப் போடவுமே இப்படிச் செய்தார்கள். இதில் எள்முனை அளவு கூட ஐயமில்லை. இது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

**ஃபாலஸ்தீன மக்கள்**

அமெரிக்காவின் மீது தாக்குதல் நடந்தது என்ற செய்தியோடு இணைந்த இன்னொரு செய்தி யையும் இவர்கள் காட்டினார்கள். அதுதான் ஃபாலஸ்தீனத்தில் சில பல முஸ்லிம்கள், குழந்தைகள் இதனைக் கொண்டாடியது போல் காட்டினார்கள். முஸ்லிம்கள் மகிழ்ச்சியடை சின்றார்கள் என்பதைக் காட்டிட பர்தா அணிந்த பெண்களைக் காட்டினார்கள்.

இப்படி மகிழ்ச்சியாய் ஃபாலஸ்தீன மக்கள் ஆடிப்பாடியது அமெரிக்கக் கட்டடங்களின் மேல் தாக்குதல் நடந்த சில நிமிடங்களுக்குள்ளா லேயே நடந்து விட்டதாகக் காட்டப்பட்டது.

ஆனால் அமெரிக்காவில் தாக்குதல் நடந்த காலை நேரம் ஃபாலஸ்தீனத்தில் அதே காலைப் பொழுது தானாம். எப்படி ஜோடனை? இரண்டு இடங்களுக்கும் இடையேயுள்ள கால வித்தியா சத்தை இவர்கள் கருத்தில்கொள்ள தவறி விட்டனர்.

இந்தச் செய்தியை அறிந்தவுடன் அவர்களை கேமராக்களுக்கு முன் ஆடவிட்டு புகைப்படம் பிடித்து அமெரிக்க செய்தி நிறுவனங்களுக்கு அவ்வளவு அவசரமாகத் தந்தது யார்?

நிச்சயமாக ஃபாலஸ்தீனர்கள் ஆடுவதை ஃபாலஸ்தீன முஸ்லிம்களோ இதர செய்தி நிறுவனங்களோ எடுத்து அமெரிக்காவின் (யூத செய்தி) நிறுவனங்களுக்குத் தந்திருக்கமாட்டா..

யூதர்களின் கொலை பாதக செயல்கள் ஏரியல் ஷேரோன் பிரதமர் ஆன நாளிலிருந்தே எல்லா எல்லைகளையும் தாண்டி நடந்தேறி வருகின்றன. குறிப்பாக குழந்தைகள் குறிவைத்துக் கொல்லப் படுகின்றார்கள்.

இந்நிலையில் இந்த செய்தி கேமராக்களுக்கு முன் அவர்கள் ஆடிப்பாடியிருக்க வாய்ப்பில்லை. எனினும் "செட் அப்பில்" உருவாக்கப்பட்ட இந்த ஆட்டம் பாட்டம் தொடர்ந்து தொலைக் காட்சிகளில் காட்டப்பட்டு வந்தன. இது உலக மக்களின் கருத்துக்களை முஸ்லிம்களுக்கெதிராக திருப்பிடும் முயற்சியே ஆகும்.

இதனைச் செய்வதில் கைதேர்ந்தவர்கள் யூதர்களே! அவர்கள் மிகத் திறமையாக World Opinion என்ற உலக மக்கள் கருத்தை முஸ்லிம் களுக்கெதிராக திருப்புவதில் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றார்கள். ஃபாலஸ்தீன மக்கள் மகிழ்ச்சியடைவதாக அமெரிக்க தொலைக் காட்சிகளில் காட்டிவிட்டு, அடுத்த நாளே ஃபாலஸ்தீனியர்கள் இதைச் செய்ய வில்லை என்று, அறிவித்துவிட்டார்கள். ஏனெனில் இவர்களின் அப்போதைய இலக்கு ஆப்கா னிஸ்தான் தான்.







காலப்போக்கில் முஸ்லிம்கள் மகிழ்ச்சியாக இருந்த அந்த நிகழ்வுகள்தாம் ஹுசைன் குவைத்திலிருந்து 1991இல் வெளியேறிய போது, குவைத் மக்கள் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டி வேலையில் பதிவு செய்யப்பட்டவை. (பாக்க பாக்ஸ்)

இத்தனையையும் இவர்களால் மிக எளிதாகச் செய்துவிட முடிகின்றது. காரணம் செய்தி ஊடகங்களை ஆட்டிப்படைப்பவர்கள் யூதர்கள்தாம். யூதர்களின் ஃபாக்ஸ் நியூஸ் Fox News - என்ற செய்தி நிறுவனந்தான் இதனை முதலில் காட்டியது.

அமெரிக்காவில் இஸ்லாம் வளர்ந்து வருகின்றது. முஸ்லிம்கள் தங்கள் சிறந்த பண்புகளால் எல்லா துறைகளிலும் வளர்ந்து வருகின்றார்கள். விரைவில் முஸ்லிம்கள் அமெரிக்காவின், அரசியல், பொருளாதாரம் போன்ற முக்கியத் துறைகளில் பங்காற்றிட முன்னே வந்துவிடுவார்கள். இதனைத் தடுக்க வேண்டும் என்று யூதர்களும், அமெரிக்க உளவுத்துறையும் தங்களது முயற்சிகளையும், பெரும் பணத்தையும் செலவு செய்து வருகின்றார்கள்.

எப்படியேனும் அமெரிக்கர்கள் முஸ்லிம்களின் மீதும், இஸ்லாத்தின் மீதும் பகையும் வெறுப்பும் கொள்ள வேண்டும் என விரும்பினார்கள். அப்போதைய அமெரிக்க அதிபர் தேர்தலில் அவர்கள் விரும்பிய அல்கோர் வெற்றி பெறாதது அவர்களுக்கு விரக்தியைத் தந்துள்ளது.

இப்படி நிலைமை கையை விட்டுப் போவதைத் தடுக்கவே இந்தச் செயலில் ஈடுபட்டார்கள். ஆனால் அனைத்தையும் கடந்து முஸ்லிம்கள் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் அமெரிக்காவின் அதிகார பீடத்தைப் பிடித்துவிட்டார்கள். இதற்கு இப்போதைய அமெரிக்க அதிபர் ஜோபைடனின் அமைச்சரவை சாட்சி, இனி யூதர்கள், வேறு வழிகளின் வழியாக வருவார்கள்.

**அதாரம்-6**

செப்டம்பர் 11, தாக்குதல் மிகவும் மதிநுட்பம் நிறைந்தது. இப்படி திட்டமிடவும் திட்டமிட்டபடி செயல்படவும் அமெரிக்காவின் பாதுகாப்பு நிறைந்த பகுதிகளை கணக்குப் பார்த்து தாக்கிடவும் யூதர்களால் மட்டுந்தான் முடியும். இந்தக் குறுமதி அவர்களுக்கு மட்டுமே உண்டு.

**அடிகுறிப்பு -** உலகெல்லாம் விமானங்கள் மோதி இரட்டை கோபுரங்கள் தகர்த்ததாகக் காட்டப்பெற்ற படங்களில் உலக வியாபார வளாகத்தின் 82ஆம் மாடிக்குமேல்தான் இடிந்தது. மீதம் உள்ள மாடிகள் உள்ளிருப்பு வேலைகள் வழியாகத்தான் இடிக்கப்பட்டன. இதனால் இடிபாடுகள், துண்டு துண்டாக விழவில்லை, மாறாக தூசியாகத்தான் இருந்தன. இந்தத் தூசிகளை அள்ளிக் கட்டி சீனாவுக்கும், இந்தியாவுக்கும் அனுப்பவிட்டார்கள்.

இதை வி. டி.ராஜசேகர் என்ற பத்திரிக்கையாளர் இப்படி கேட்கின்றார் :

“பின்லேடன், அவரோடு இருப்பவர்கள், இவர்களுக்கு இவ்வளவு பெரியதொரு தாக்கு தலை நடத்திடும் பலம் உண்டா ? இதில் பலர் ஈடுபட வேண்டும். (இதற்கு அதிகமான ஆட்கள் தேவை) பல மாதங்கள் திட்டமிடவேண்டும். பல மாதங்கள் சிறந்த நுணுக்கங்களில் எல்லோ ரையும் விஞ்சும் மதிபலம், உள்ளே இருப்பவர் களின் ஒத்துழைப்பு, அதேபோல் சர்வதேச தொடர்புகள்இவை அனைத்தும்தேவை. இதனை ஆப்கானிஸ்தானில் ஒரு குகையில் இருக்கும் பின்லேடனால் செய்திருக்க முடியுமா?”

(Dalit Voice,1-15, Oc-2001)

இத்தனையும் கைவரப் பெற்றவர்கள் யூதர் களே! இது அவர்களுக்கு மட்டுமே முடியும். ஆனால் ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் இவர் களின் அத்தனைக் கெடுபிடிகளையும் தாண்டி, சூழ்சிகளை முறியடித்து அறுதி வெற்றியை அடைந்து விட்டார்கள். இது முஸ்லிம்களுக்கும் இஸ்லாமிய உலகிற்கும் மிகப்பெரிய வெற்றி!

அத்தோடு 9/11 என்ற தீவிரவாத தாக்குதலை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் அல்ல, என்பதையும் தெளிவுபடுத்திவிட்டார்கள்.

### ஆதாரம்-7

### யூதர்களின் முன் அனுபவம்

1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் நாள் அமெரிக்காவின் ஒக்லஹாமா என்னுமிடத்தில் ஒரு குண்டு வெடித்தது. இதில் அடுக்கு மாடி களைக் கொண்ட கட்டடம் ஒன்று தரைமட்ட மானது. இதில் 13 குழந்தைகள் உட்பட 120 பேர் இறந்தார்கள். 600 பேர் காயமடைந்தார்கள். குண்டு வெடித்தது என்றவுடன் தொலைக்காட்சி யும் இன்னுமுள்ள மக்கள் தொடர்புக் கருவி களும் “முஸ்லிம் தீவிரவாதிகள்தாம் இதைச் செய்திருக்க வேண்டும்” எனச் செய்திகளைப் பரப்பின.

இரண்டு மணி நேரத்திற்குள் அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் குற்றவாளி களாக நின்றார்கள்.

சில யூதத் தலைவர்கள் போர்ப் பிரகடனங் களையும் இப்படிச் செய்தார்கள் :

“இந்த முஸ்லிம்கள் அனைவரையும் வெளி யேற்றிட வேண்டும். அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளை (அரபு நாடுகளை) அழித்தொழிக்க வேண்டும். அங்கிருந்துதான் இந்தத் தீவிரவாதி கள் வருகின்றார்கள். கிளின்டன் இன்னும் என்ன செய்ய வேண்டும் ஏன் சும்மா இருக்கின்றார்?”

இப்படித் தொலைக்காட்சியில் யூத செய்தி யாளர் ஸ்டீவன் எமரால்ட் (Steven Emerald) கர்ஜித்தார். இன்னொருவர் அனைத்து அமெரிக் கர்களும் வெகுண்டெழும் அளவில் “குழந்தை களைக் கொலை செய்பவர்கள்” (Baby Killers) என்று முஸ்லிம்களை அழைத்தார்.

இன்னொருவர் “மூன்றாவது உலக மகா போர் ஆரம்பமாகிவிட்டது. அமெரிக்காவுக்கும் அரபு நாடுகளுக்கும் போர்” என்றார். அனைத் தையும் வீழ்த்தி அறுதி வெற்றியை அந்த முஜாஹித் களுக்குக் அல்லாஹ் கொடுத்தான்.

### ஐ.நா. சபையும் 9/11 தாக்குதலும்

ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்க தாக்கு தலை மையமாகக் கொண்டு, பல உலக முஸ்லிம் களை, தீவிரவாதத்தின் பிரதிநிதிகளாகத்தான் பாவித்தது. இது அமெரிக்கா கொடுத்த அழுத்தத் தினால் மட்டுமல்ல. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அவை (Unilled Nations Socurity Council) இதே பார்வையைக் கொண்டே வாழ்ந் தது. ஏனெனில் ஐ.நா சபையின் பாதுகாப்புக் குழு உறுப்பு நாடுகளில் தாம் இஸ்லாமோஃபோபியா உச்சத்தில் உள்ளது. அதனால் ஐக்கிய நாடுகள் சபையில் பல தீர்மானங்கள் கொண்டு வரப் பட்டன. அவற்றுள் மிகவும் முக்கியமானது.

உலக நாடுகள் அனைத்தும் தங்கள் நாட்டில் தீவிரவாதத்திற்கு எதிராக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டும் என்பதே! அந்தத் தீர்மானம் தான், தீர்மானம் எண் 1373. இது உலகெங்கும் ஐ.நாவின் உறுப்பு நாடுகள் முஸ்லிம் களை கொடுமைப்படுத்திட வழி திறந்து விட்டது, ஐக்கிய நாடுகள் சபையின் இந்தத் தீர்மானத்தால் உலக முஸ்லிம்கள் சந்தித்த துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் அளவே இல்லை. இரயில் நிலையங்கள், பஸ் நிறுத்தங்கள் இவற்றிலெல்லாம் முஸ்லிம்கள் தனிமைப்படுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டார்கள்.

பல நாடுகள் தங்கள் நாட்டில் ஒரு தீவிர



*வாதத்தை தங்கள் உளவுத்துறையைக் கொண்டே நிகழ்த்தி பழியை முஸ்லிம்கள் மேல்போட்டு, அதன்பின் தீவிரவாத தடுப்புச் சட்டங்களை இயற்றின. அவற்றை அப்பாவி முஸ்லிம்களைச் சிறைபிடிக்கவும், சித்திரவதை செய்யவும் பயன்படுத்தின.*

*பிரான்ஸ்-ல் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதல், நம் நாட்டில் (9/11ஐ தொடர்ந்து) டிசம்பர் 13, 2001 ஆம் ஆண்டில் காஷ்மீரின் (STF) என்ற சிறப்பு செயல்படையும், டெல்லி காவல் துறையின் துணை ஆணையர் ராஜ்பிர் சிங்கும் (அப்போதைய உள்துறை அமைச்சர் அத்வானிக்கு மிகவும் நெருக்கமானவர்) இணைந்து ஏற்பாடு செய்த நாடாளுமன்ற தாக்குதல், அதனைப் பயன்படுத்தி கொண்டுவரப்பட்ட "பொடா" சட்டம் இவையெல்லாம் சில.*

*இப்படி சட்டங்கள் இயற்றப்பட்டு செய்யாத குற்றங்களுக்கெல்லாம் முஸ்லிம்களைப் பழி சுமத்தி முஸ்லிம் இளைஞர்களைச் சிறை பிடித்து சித்திரவதைச் செய்தார்கள்.*

*விசாரணை கைதிகள் என்றும், முடிவுறா புலன் விசாரணை, நீதி விசாரணை என்றெல்லாம் இழுத்தடித்து அந்த அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் தங்கள் இளமையைத் தொலைத்த பின் தான் நிரபராதிகள் என நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டார்கள்.*

*20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் என சிறையில் தங்கள் உலக வாழ்க்கையை இழந்தவர்கள் ஏராளம்! ஏராளம்!*

*இவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் சிறையில் பட்ட சித்திரவதைகள் இவையெல்லாம், இப்போது இலக்கியங்களாகக்கிடைக்கின்றன. மொத்தத்தில் பல ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள், இந்தியாவிலேயே நொந்து நசுங்கிப் போயின. இதில் தங்கள் மகன்களுக்கு ஏற்பட்ட அவலங்கள் தாழாமல் மாரடைப்பால் மரணித்த தாய்மார்கள், தந்தைகள், மனைவியர்கள் இவர்களின் எண்ணிக்கை எண்ணி மாளாது.*

**இப்போது தாலிபான்கள் பெற்ற வெற்றி உலக மக்களிடம், முஸ்லிம்கள் அப்பாவிகள் என அறிவித்துள்ளது. இஸ்லாம், தீவிரவாத மார்க்கம் இல்லை என்பதையும் முஸ்லிம்கள் தீவிரவாதத்தின் பிரதிநிதிகள் அல்ல என்பதையும் பிரகடனப்படுத்தியுள்ளன.**

**அத்தோடு முஸ்லிம்களால் அத்தனை இழிமொழிகளையும் தாங்கிக்கொண்டு அநியாயக்காரர்களுக்கு, ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நிற்க முடியும், வெறுங்கையோடு வெல்ல முடியும் என்பதையும் காட்டியிருக்கின்றார்கள்.**

**அல்ஹம்துலில்லாஹ்!**

**உலக மக்கள் இதிலிருந்து நிறைவான பாடத்தைப் பெறுவார்கள் என எதிர்பார்ப்போம். ஐ.நா. தன் தவறை உணரும். உலகெங்கிலும் அமெரிக்க தீவிரவாதத்தை தடுக்க சட்டங்களைக் கொண்டுவரும் என எதிர் பார்ப்போம்.**

**– இன்ஷா அல்லாஹ்!**

**- MGM**



# கான்ஸ்டன்டின் நோபிள் வெற்றி

## நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு

### நாடக வடிவில்

**நபி (ஸல்) அவர்கள் ரோமானியர்களின் தலைநகரம் கான்ஸ்டன்டின் நோபிளை முஸ்லிம்கள் வெற்றி கொள்வார்கள் என முன்னறிவிப்பு செய்தார்கள். இந்நகரம் இன்று இஸ்தான்புல் என அழைக்கப்படுகிறது. இது துருக்கி நாட்டில் அமைந்துள்ளது.**

*இந்நகரத்தை கி.பி. 1453 மே மாதம் 29 அன்று 22 வயதே நிரம்பிய உஸ்மானிய (Ottoman) சுல்தான் மெஹ்மூத்-II, (Mehmet-II) வெற்றி கொண்டார்.*

*கிட்டத்தட்ட 2 மாத முற்றுமைக்குப் பின், உஸ்மானிய படைகளின் கடும் உயிர் சேதத்திற்குப் பின் வெற்றி கொள்ளப்பட்டது. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பாலஸ்தீன் பூமியை ஆண்ட ரோமானிய வம்சத்தின் பைசாந்திய பேரரசின் தலைநகரமாக விளங்கியது கான்ஸ் டன்டின் நோபிள்.*

*இதை வென்று அவ்வூருக்கு சென்ற கட்டு கோப்பான உஸ்மானிய (Ottoman) படை சாமானிய, பொதுமக்களின் எதிர்ப்பை சந்திக்க வேண்டி வந்தது. அம்மக்கள் வீட்டில் பயன்படுத்தும் எளிய பொருள்களை ஆயுதங்களாக்கி எதிர்ப்பு காட்டினார்.*

*மேலும், சிலர் பிரம்மாண்டமான வழிபாட்டுத்தலமான "ஹகியா சோஃபியா"வில் அச்சத்துடன் தஞ்சமடைந்தனர்.*

*இவ்விரு நிகழ்வையும் சுல்தான் மெஹ்மத்-II எவ்வாறு எதிர்கொண்டார், தீர்வு கண்டார் என்பதை வரலாற்று ஆதார பின்னணி மற்றும் இஸ்லாமிய சட்டம், கலாச்சாரம், பண்பாட்டின் ஊடே "இவ்வாறுதான் சுல்தான் அவையில் இதற்கான ஆலோசனை நடந்திருக்க வாய்ப்பு உண்டு" என்ற எதார்த்தத்தை கொண்டு நாடகமாக தரப்பட்டுள்ளது.*

**காட்சி-1**

*கோட்டை சுவர்களை தாண்டி வெற்றிகரமான உஸ்மானிய சுல்தான் மெஹ்மத்-IIன் படைகள் கான்ஸ்டன்டின் நோபிள் நகரத்திற்குள் பிரவேசித்தல். இப்படைகள் அந்நகர பொதுமக்களின் கடும் எதிர்ப்பை சந்தித்தல்.*

**படைத்தளபதிகள் :** *அரசே, கான்ஸ்டன்டின் நோபிள் நகர மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து கடும் எதிர்ப்பை காட்டுகின்றனர். கற்கள், கொதிக்கும் எண்ணெய், தீகங்குகள் போன்றவைகளை*

கொண்டு நம் படை வீரர்களை தாக்குகின்றனர்.

**மெஹ்மூத்-II** : அப்படியா! இதை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். அப்பொழுதுதான் ஊருக்குள் அமைதி ஏற்படும். வாருங்கள். ஆலோசனை செய்வோம். முக்கியமாக, நமது இஸ்லாமிய சட்ட நிபுணர்களை மௌலவிகளான மதகுருமார்களையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்.

அரசரின் போர்க் கூடாரத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

**படைத்தளபதி-I** : **ஜகனாஸ் பாஷா** (இவர் கிறிஸ்த்துவத்திலிருந்து இஸ்லாத்தை தன் மத நம்பிக்கையாக ஏற்றவர்)

அரசே! இந்நகரத்தை நாம் எரித்து விடுவோம். ஏனெனில் இவ்வாறு எரித்துப் பொசுக்குவது இந்நகரத்திற்கு புதிதல்ல. கத்தோலிக்க சிலுவை படையும், ரோமானிய அரசர்களும் இவ்வூரை எரித்துத் தண்டித்துள்ளனர்.

**படைத்தளபதி-II** : **ஐஷக் பாஷா** (இவரும் இஸ்லாத்தை ஏற்ற கிறிஸ்தவர்)

ஆம் சுல்தான்! இதனால் நமக்கான எதிர்ப்பு சடுதியில் நின்றுவிடும். அதே நேரத்தில் நமக்கு எதிராக ஜீசஸ், நாடுகளை அணிதிரட்டும் கிறிஸ்தவ மத தலைமையிலான வாடிகன் போப்புக்கும் எச்சரிக்கையாக இருக்கும்.

**சுல்தான் மெஹ்மூத்-II** : இவ்வாறு செய்வது பாவச் செயல். கிறிஸ்தவர்களை பின்பற்றுவது நமது வேதத்தின் அறிவுரைபடி தவறாகும். வழி தவறியவர்களை பின்பற்றிட முடியாதல்லவா!

பின் மௌலவியை நோக்கி, மௌலானா தங்களின் மேலான ஆலோசனையை வழங்குங் கள். இஸ்லாம் என்றால் பிறர் நலன் நாடுவதே என மனித குலத்தின் இறுதி தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறி சென்றுள்ளார்கள்.

இவ்வாறான இக்கட்டான நேரத்தில் இவ்வூரையம், மக்களையும் காக்க வேண்டும். அதே சமயத்தில் நமது படை வீரர்களையும், நம்மையும் காத்துக்கொள்ள வேண்டும்.

**மௌலவி-I : அக்ஷம்செட்டின் -** ஆம் சுல்தான்! சரியாக சொன்னீர்கள். படைத் தளபதிகள் அவர்களுக்கே உரிய ராணுவ யுக்தியிலான ஆலோசனையை அளித்துள்ளார்கள். நாங்களோ, நமது மத நம்பிக்கை கூறும் "மனிதத்"தை கூறுவோம். தாங்கள் நம்மிரு பிரிவினரின் ஆலோசனைகளையும் கணக்கிலெடுத்து முடிவு காண வேண்டும்.

**சுல்தான் :** ஆம், நான் ராணுவ முடிவுக்கும், நாட்டு மக்களை நிர்வாகம் செய்யும் ஆட்சி ஒழுங்கு முறைக்கும் பொறுப்பானவன்.

**மௌலவி-II : கவுஷம்செட்டின் -** இந்த அகிலத்தையும், அதில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஒரே இறைவன்தான் படைத்தான். அதில் மனிதர்களையும் அவன்தான் படைத்தான். மனிதர்கள் அறியாமையால் மதங்களால் பிரிந்து கிடந்தாலும், அந்த ஓர் இறைவனே அனைவரையும் படைத்தான். இதை தான் முஸ்லிம்களாகிய நாம் நம்பிக்கை கொண்டு வாழ்கிறோம். இந்த இறைவன் அரபி மொழியில் "அல்லாஹ்" என்று அழைக்கிறோம். இவ்வாறு அனைத்து மொழிகளும் இறைவனை குறிப்பிட வார்த்தையை கொண்டுள்ளன. ஆனால், மற்ற சமூகங்களோ இந்த உண்மையை உணராமல் நம்மை எதிர்க்கின்றனர். அவர்களையும் படைத்த இறைவனைதான் நாம் வணங்கி வருகிறோம்.

ஆதலால் அனைவரையும் படைத்த அல்லாஹ்வின் இறுதி வேதமே மனிதர்களுக்கான அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு தருகிறது.

**மௌலவி-I** : காலங்காலமாக, நகரங்கள் வெற்றி கொள்ளப்படும்போது, அந்நகரங்களின் எதிர்ப்பை முடிவுக்கு கொண்டுவர ஜனங்களை வெட்டி சாய்ப்பதும், நகரத்தை எரிப்பதும் நடந்தேறி வருகிறது.

இப்படியான சூழல் இங்கு நடந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் இவ்வாலோசனை கூட்டத்தை கூட்டியுள்ளீர்கள்.

இது ஒரு இக்கட்டான பிரச்சினைதான். நமது நபி (ஸல்) அவர்கள்,

**"மண்ணில் உள்ளவர்களை நேசியுங்கள். விண்ணில் உள்ளவன் உங்களை நேசிப்பான்" என்றார்கள். (திர்மிதி)**

அதுபோல நமது திருமறைக்குர்ஆன்,

**"எவர் ஒருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக் கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழவைத் தோரை போலாவார்." என்கிறது. (5:32)**

**"அவர்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாத வற்றை ஏசாதீர்கள்" என்றும் கூறுகிறது. (6:108)**

**"அவர்கள் (இஸ்லாமிய அரசில் உள்ள முஸ்லிம் அல்லாத குடிமக்கள்) நம் அடைக் கலத்தில் உள்ளவர்கள். எனவே அவர்களின் உயிர் நம் உயிர் போன்றது. அவர்களின் சொத்து நம் சொத்து போன்றது" என நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் உறுதிபட கூறியுள்ளார்கள். (அபூதாவூத்)**

*ஆக, இவ்வூர் மக்கள் நம்மவர்கள். நம் மதத்தை சாராதவர்கள் என்பதால் துன்புறுத்த முடியாது. பலஹீனமானவர்களிடம் அன்பும், இரக்கமும் காட்ட நமது வேதம் நம்மை பணிக்கிறது.*

*இம்மக்கள் போர் பயிற்சி பெற்ற இராணுவ வீரர்கள் அல்ல. சாமானிய பொதுமக்கள். இதில் பெண்களும், குழந்தைகளும், போரில் கலந்து கொள்ள முடியாத ஆண்களும், முதியவர்களும், நோயாளிகளும் உள்ளனர். இப்பொழுது இவர்கள் காட்டும் எதிர்ப்பு "அவர்கள் தங்கள் பூமியின் மீதான பினைப்பின்" காரணமாகவே காட்டு கின்றனர்.*

*ஆகவே, மன்னிப்பு வழங்கலாம். அப்படி ஒன்று நடந்தால் அவர்களின் உள்ளங்கள் வெற்றி கொள்ளப்படலாம். இதுவே எங்களது ஃபத்வா (தீர்ப்பு)*

**படைத்தளபதிகள் :** *(ஒரே குரலில் எதிர்ப்பு காட்டுகின்றனர்)*

*ஜெருசலத்தை மீட்டெடுத்தார் சுல்தான் சலாஹூத்தீன் அய்யூபி. சரணடைந்த அவ்வூர் வெள்ளை கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு மன்னிப்பளித்தார். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றியதோடு, அவ்வூரை விட்டு வெளி யேறிய கிறிஸ்தவர்களுக்கு பொன்னும், பொருளும் கொடுத்து அவர்களின் பயண சிரமத்தை எளி தாக்கினார். பெருந்தன்மையைக் காட்டினார்.*

*பின்பு என்ன நடந்தது என்பதை வரலாறு பேசுகிறது. வெளியேறிய வெள்ளை கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் படைகளும், பொதுமக்களும் அருகில் இருந்த டைர் (Tyre) என்ற கிறிஸ்தவ ஆட்சி பகுதியில் குடியேறினர். பெரும்படையாக அணி திரண்டனர். சுல்தான் சலாஹூத்தீன் மன்னிப்பையும், பெருந்தன்மையையும் அவருடைய ஏமாளித்தனத்தின் வெளிப்பாடாக கருதினர். இதை துருப்புச் சீட்டாக பயன்படுத்தி ஜெருசலம் அரசுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்தனர்.*

*கத்தோலிக்கர்களுக்கு நன்றி விசுவாசம் என எதுவும் இல்லை. இதனால் அக்கா நகரத்தை இழந்தார் சலாவுத்தீன்.*

*அக்கா நகரம் சிலுவை படையால் முற்றுகை யிடப்பட்டது. இது இரண்டு வருடங்களாக தொடர்ந்தது. அந்நகரத்தின் கோட்டைக்குள் இருந்த சலாஹூத்தீன் படைகளும், பொதுமக் களும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டனர். பிறகு அக்கா நகரத்தை சிலுவையிடம் ஒப்படைத்து விட்டு வெளியேற சமாதான உடன்படிக்கை அக்கா நகர முஸ்லிம்கள் வேண்டினர்.*

*இதற்கு பகரமாக பாதுகாப்பாக பெண்களும், குழந்தைகளும், முதியோர்களும், படை வீரர்களும் மொத்த மக்களும் பாதுகாப்பாக வெளியேற சிலுவைபடையிடம் வேண்டி நின்றனர் முஸ்லிம்கள். அதன் பிறகு அக்கா நகரத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என முஸ்லிம்கள் தரப்பில் அதன் படைத்தளபதி பேச்சுவார்த்தை நடத்தினர்.*

*இப்பேச்சுவார்த்தையில் ஜெருசலத்தின் அனைத்து கிறிஸ்தவர்களும், அவர்களின் படை வீரர்கள் உட்பட மன்னிக்கப்பட்டு பாதுகாப்பாக வெளியேற முஸ்லிம்கள் செய்த உதவியை கோடிட்டுக் காட்டி அவ்வாறே இப்பொழுது கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிடம் நடந்துகொள்ள கோரிக்கை வைக்கப்பட்டது.*

*நயவஞ்சகத்துடன் நடந்துகொண்டது சிலுவைப்படை. முஸ்லிம்களின் கோரிக்கையை ஏற்பதாக நம்பவைத்து, உறுதி கொடுத்த சிலுவைப் படையினர் அக்கா நகர கோட்டை கதவுகள் திறந்தவுடன் உள்ளே சென்றனர்.*

*முதல் சிலுவை போரில் ஜெருசலத்தை ஆக்கிரமித்த போப்பின் சிலுவைப்படை எவ்வாறு ரத்தக் குளியலுடன் கைப்பற்றியதோ, அதே போன்று அக்கா நகரத்தில் படுகொலை செய்தனர். இரக்கம் காட்டவில்லை. இத்தனைக்கும் ஜெருசலம் சலாஹூத்தீனால் ரத்தமின்றி கைப்பற்றிய வருடத் திற்கும், அக்கா நகர முஸ்லிம் படுகொலைக்கும் தோராயமாக வெறும் 2 வருடங்கள்தான் வித்தி யாசம். அதிக காலம் எடுக்கவில்லை. அதே தலை முறை மன்னிப்பை பெற்று, அதே கிறிஸ்தவ*



தலைமுறைதான் அக்கா நகரில் முஸ்லிம்களின் படுகொலையை நிகழ்த்தியது. போர் தர்மங்களை மதிக்கவில்லை அவர்கள்.

சலாஹூத்தீனின் பெருந்தன்மைக்கு காரண மான திருக்குர்ஆனின் போதனைகளை நிராகரிப் பவர்கள் இந்த வழிகெட்ட கிறிஸ்தவர்கள். அவர்களின் வேதம் அன்பையும், இரக்கத்தையும் போதனை செய்வதாக கூறிக்கொண்டே, இப் பெரும் படுபாதகக் கொலைகளை செய்தனர். சமாதானத்தை மதிக்கவில்லை.

பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், படை வீரர்கள் என அனைவரும் நிராயுதபாணிகளாக் கப்பட்டு வெட்டி சாய்க்கப்பட்டனர். இந்த பைபிளின் வாரிசுகள் ரத்தக் குளியல் வரலாற் றுக்குச் சொந்தக்காரர்கள்.

ஆகவே, இவர்களை அவர்களின் வாழ்வில் பண்பாடு, வழிமுறைகளை கொண்டே தண்டிக்க வேண்டும். இங்கு குர்ஆனின் வழிகாட்டுதல் இவர்களுக்கு பொருந்தாது.

மேலும் கான்ஸ்டன்டின் நோபிள் தண்டிக்கப் படுவது புதிதல்ல. சுமார் 200 வருடங்களுக்கு முன் இதே கத்தோலிக்க படை கான்ஸ்டன்டின் நோபிளை தாக்கி கொள்ளை அடித்தனர். ஹகியா சோஃபியா தேவலாயமும் விட்டுவிடப் படவில்லை. பின்பு நகரின் ஒரு பெரும் பகுதியை எரித்து தீக்கிரையாக்கினர்.

**மெஹ்மத்-II** : (கையை உயர்த்தி நிறுத்தச் சொல்லி சைகளை காட்டிபடி)

படைத்தளபதிகளே! நீங்கள் உஸ்மானிய ஆட்சிக்கு கிடைத்த பொக்கிஷங்கள். ராணுவ நியதியின்படி தாங்கள் வழங்கிய ஆலோசனை எனக்குள் எச்சரிக்கை மணியை அடிக்கிறது.

ஆனாலும் இந்நகர மக்களையும், நகரத்தை யும் அழித்து உஸ்மானிய சுல்தான் ஆட்சியின் பலத்தை காட்ட வேண்டிய அவசியமில்லை.

வாடிகன் மத தலைமையால் அணிதிரட்டப் பட்ட அரசுகளின் தொடர் துரோகங்கள் என் தந்தையையும், என்னையும் மிகவும் தொந்தரவு செய்துள்ளது. நாம் நமது மக்களின் பாதுகாக் கவும், நிலத்தை பாதுகாக்கவும் இங்கு போர் செய்து பாதுகாப்பை உறுதி செய்துள்ளோம்.

இந்நகரம் மூன்று புறம் கடலால் சூழப் பட்டுள்ளது. இவர்களால் எங்கும் தப்பிக்க முடியாது. இதன் மக்கள் தொகை மிக சொற்பம். அதிகாரிகளையும், அவர்களையும் தூண்டிவிட்ட வாடிகன் போப்பின் ஆட்களையும் தண்டிப்பதை விட்டுவிட்டு, இவர்களின் மீதான கோபத்தை, கான்ஸ்டன்டின் நோபிள் நகர பொதுஜனத்தின் மீது நாம் காட்ட முடியாது.

கிறிஸ்தவர்கள் வழிகேடர்கள் என்பதை நாம் ஏற்றுள்ளோம். அவர்களின் போர் தர்ம நெறியை நாம் அரங்கேற்ற முடியுமா? அதற்கு ராஜதந்திரம் அனுமதிக்கத்தான் செய்கிறது.

இருப்பினும் சொற்ப தொகையினரான இவ்வூர் மக்கள், கடலால் சூழப்பட்ட இம்மக்கள் தப்பித்து நமக்கு எதிராக அணிதிரள வாய்ப் பில்லை என்பதையும் நாம் அறிவோம்.

ஆதலால் நான் இதுவரை கைது செய்த கான்ஸ்டன்டின் நோபிள் பைசாந்திய அரசின் படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகளை மன்னிக்கிறேன். அவர்களுக்கு அன்பளிப்புகளை கொடுத்து நம்பிக்கை விதைக்கப் போகிறேன். (Ai) இதை நடைமுறைப்படுத்தும்படி உங்களுக்கு உத்தரவிடுகிறேன்.

மன்னிக்கப்பட்ட படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகளை நகர தெருக்களுக்கு அனுப்பி உஸ்மானிய சுல்தானின் பொதுமன்னிப்பை அறிவிக்கச் செய்யுங்கள்.

தங்கள் படைத்தளபதிகளின் வார்த்தையை இவ்வூர் மக்கள் மதிப்பார்கள். நம்பிக்கை கொள் வார்கள் என எதிர்பார்க்கிறேன். இதனால் மக்கள் எதிர்ப்பு நிறுத்தப்படலாம். இதை உடனடியாக செய்து முடியுங்கள் தளபதிகளே!

**படைத்தளபதிகள் மற்றும் மதகுருக்கள் :** ஆகட்டும் மன்னா. தங்கள் மேலான உத்தரவை நிறைவேறுகிறோம்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டன்டின் நோபிள் படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகள் மன்னிக் கப்பட்டு, பரிசு பொருட்கள் கொடுக்கப்பட்டு கண்ணியப்படுத்தப்பட்டனர். அவர்களின் இனமான இவ்வூர் மக்களும் இவ்வாறே கண்ணி யத்தை அடைய கான்ஸ்டன்டின் நோபிள் படைத் தளபதிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அவர்களும் ஆவலுடன் நகர வீதிகளில் சுல்தானின் பொதுமன்னிப்பு அறிவிப்பை அறிவித்தனர்.

இந்த மனிதாபிமான செயலால் கிரேக்க கிறிஸ்தவ பொது ஜனம் ஆச்சரியத்தில் மூழ்கியது. எதிர்ப்பை நிறுத்தினர். சுல்தானின் படைகளுடன் நேசமாக பழகினர்.

இருப்பினும் ஹகியா சோஃபியா என்ற பிரமாண்டமான தேவாலயத்தில் தஞ்சமடைந்த பெண்களும், குழந்தைகளும் காயப்பட்ட வீரர்களும், அக்கட்டிடத்தை விட்டு வெளியே மறுத்துவிட்டனர்.

**காட்சி-2**

**படைத்தளபதி-I** : மன்னா! தாங்கள் கூறியதை போன்று, மன்னிப்பு வழங்கப்பட்டதால், இவ்வூர் மக்கள் எதிர்ப்பை கைவிட்டு நம்மை வரவேற் கிறார்கள். நகரத்தின் பல பகுதிகளில் அமைதி திரும்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் சில பகுதிகள் வெகு விரைவில் அமைதி பெறும்.

**மெஹ்மத்-II** : நல்லது, நம்முடைய காரியங்களில் இறை பொருத்தத்தை நாடுவோம்.

**படைத்தளபதி-II** : மன்னா ! நகரில் எதிர்ப்பு குறைந்து சகஜ நிலைக்கு திரும்பினாலும், ஹகியா சோஃபியா தேவாலயம் உட்புறமாக பூட்டப் பட்டுள்ளது. அங்கு மக்களுடன் படை வீரர் களும் பதுங்கியுள்ளனர் என்பதாக செய்திகள் வருகின்றன. இது ஆபத்தில் முடியலாம்.

**மெஹ்மூத்-II**: அங்கேயும் மன்னிப்பு செய்தியை அறிவியுங்கள் அனைத்தும் நலமாக முடியும்.

**படைத்தளபதி-II** அறிவிப்பு செய்தாகிவிட்டது மன்னா. ஆனால், பதுங்கியுள்ளவர்கள் தேவலா யத்தின் கதவை திறக்கவில்லை. மறுப்பதாக தெரிகிறது.

**மெஹ்மூத்-II** : நானே வருகிறேன்.

குதிரையின் மீதேறி தேவலாயத்திற்கு விரைகிறார் மன்னர். மீண்டும் பொது மன்னிப்பு அறிவிக்கப்படுகிறது. தேவாலயத்திலிருந்து எந்த பதிலும் இல்லை. சுல்தான் ஆலோசனைக் கூட்டத்தை கூட்டுகிறார்.

**படைத்தளபதி-II** : தேவாலயத்தில் உள்ளோர் சரணடையவில்லை என்றால் காலங்காலமாக பின்பற்றப்படும் போர் மரபு பின்பற்றப்பட வேண்டும். அதன்படி தேவாலயம் தீக்கிரை யாக்கப்பட வேண்டும். பிறகு இக்கட்டிடம் வரலாற்றில் இடம் பெறப்போவதில்லை. காலப் போக்கில் மக்கள் மறந்திடுவார்கள்.

**மௌலவி-I** : எந்த ஒரு மத நம்பிக்கை யாளர்களும், தங்களுடைய கடைசி புகலிடமாக ஆக்கிக்கொள்வது வழிபாட்டுத்தலங்களைதான். இந்த வழிபாட்டுத்தலங்கள் அவர்களுக்கு மன அமைதியை தருகின்றன. அது புனித தலமாக

இல்லாமல் இருந்தாலும் சரியே.

காலங்காலமாக நடைமுறையில் உள்ள வழக்கத்தைத் தான் இந்நரக கிறிஸ்தவ மக்கள் பின்பற்றியுள்ளனர்.

நமது நம்பிக்கை வேறாக இருக்கலாம். ஆனாலும், மனித நாகரிகத்தில் ஆன்மிகத்திற்கு முக்கியத்துவம் உண்டு. ஆன்மிக இடங்களுக்கு பொருத்தமான காரணமின்றி சேதாரம் விளை விப்பது மனித நாகரிகத்திற்கு ஆபத்தை விளை விப்பதாகும். நாம் நிதானமாக தான் முடிவெடுக்க வேண்டும். ஏனெனில் பதுங்கியுள்ளதாக நாம் கருதும் அவர்கள், தேவாலயத்திலிருந்து நம்மை தாக்கவில்லை. அப்படியே தாக்கினாலும் கால அவகாசம் கொடுத்தே சரணடைய செய்ய வேண் டும். அவர்களின் நிலை எதுவொன்றாக இருந் தாலும் கால அவகாசம் கொடுத்தால் நல்லது.

**மெஹ்மூத்-II** : மதகுருவே! நாம் கால அவகா சத்தை கைகொள்ளல் முடியாது. காலதாமதம் பல சங்கடங்களையும், குழப்பங்களையும், இழப்பு களையும் ஏற்படுத்தலாம். நாம் துரிதமாக நடவடிக்கை எடுத்து அமைதி நில செய்திட வேண்டும்.

**மௌலவி-II**: மன்னா! இப்பொழுது அல்லாஹ் வின் கருணைகொண்டு திருக்குர்ஆனின் வசனம் ஒன்று நினைவில் வருகிறது.

".... மனிதர்களில் சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும், கிறிஸ்தவ ஆலயங்களும், யூத கோவில்களும், அல்லாஹ்வின் திருநாமம் அதிகமதிகம் கூறப் படும் பள்ளிவாசல்களும் இடிக்கப்பட்டுப் போயி ருக்கும். தனக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான்..."

**நெருப்பால் தண்டனை வழங்குவதற்கு நெருப்பின் அதிபதியை தவிர (அல்லாஹ்வைத் தவிர) வேறு யாருக்கும் உரிமை கிடையாது. (அபூதாவூத்)**

**மடங்களில் உள்ள துறவிகளை கொல்லா தீர்கள். வணக்கஸ்தலங்களில் உள்ள மக்களைக் கொள்ளாதீர்கள். (அபூதாவூத்)**

ஆக, தாங்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மெஹ்மூத்-II** : அல்ஹம்துலில்லாஹ்! எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே விடை கிடைத்து விட்டது.

படைத்தளபதிகளே! நம்முடைய முஅத்தீன் யார்? அவரை அழைத்து வாருங்கள். நான் நமது மதகுரு நினைவுபடுத்திய "வழிபாட்டுத்தலத்தின் விதியை" கூறும் புனித குர்ஆனின் அறிவுத்தல்படி உத்திரவிட வேண்டும்.

முஅத்தின் அழைத்து வரப்படுகிறார்.

**முஅத்தின்:** மன்னா! அஸ்ஸலாமு அலைக்கும்,

**மெஹ்மூத்-II** : வஅலைக்கும் அஸ்ஸலாம். தாங்கள் வரவு நல்வரவாகட்டும். உஸ்மானிய ஆட்சிக்கு நல்வரவாகட்டும்.

**முஅத்தின் :** உத்தரவிடுங்கள் அரசே! ஆர்வத் துடன் காத்திருக்கிறேன்.

**மெஹ்மூத்-II** : முஅத்தீனே! ஹகியா சோஃபியா கிறிஸ்தவ ஆலயத்தில் பொதுமக்களும், படை வீரர்களும் பதுங்கியுள்ளதாக அறிகிறேன். அது அச்சத்தினாலா அல்லது நம்மை அச்சுறுத்தவா என்பதை அறியமுடியவில்லை. காரணம் எதுவா கினும் பொதுமன்னிப்பு செய்தி அறிவித்தும், அவர்கள் தேவாலயத்திலிருந்து வெளியே வரவில்லை. ஆதலால் அவர்களின் உயிர், உடை மைகள் காக்கப்படும் என்ற நமது உறுதி மொழியில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட, சில நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

நம் படைத்தளபதிகள் தங்களை பாதுகாப்ப தோடு அத்தேவாலயத்திற்கு அழைத்துச் செல்வார்கள். தாங்கள் அத்தேவாலயத்திலிருந்து இஸ்லாமிய தொழுகைக்கான "பாங்கோசை" கொடுக்க வேண்டும். இதனால் நமது பரிசுத்த எண்ணம் வெற்றி பெறலாம். இம்மக்கள் நமது மத அனுஷ்டானங்களை நன்கறிந்தவர்கள். நமது மதத்தின் பண்பாட்டை அறிந்த இவர்கள், நம்மை பற்றி சந்தேகம் கொண்டிருக்கலாம்.

இந்த "பாங்கோசை" நமது வழிபாட்டு தலங்களில் கொடுக்கப்படுவது. இதை கேட்டும் அம்மக்கள் ஹகியா சோஃபியா, பள்ளிவாசலாக மாறிவிட்டதை புரிந்துகொண்டு, தேவாலயத் தின் கதவுகள் திறக்கப்படலாம். ஏனெனில் இச்செயல் பள்ளிவாசலில் படுகொலைகள் நடக் காது என்பதை உணர்த்தக் கூடியது. முஸ்லிம்கள் மதிக்கும் ஒரு இடத்தில் முஸ்லிம்கள் படுகொலை

*செய்யமாட்டார்கள் என்ற உணர்வால் அவர்கள் சரணடையலாம் அல்லவா!*

**சொல்லுங்கள், பாங்கோசை கொடுங்கள்.**

*முஅத்தீன் பாங்கோசை கொடுத்துக் முடிக்கிறார். சில நிமிடங்களில் தேவாலயத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. சுல்தான் உள்ளே சென்றார். அவர்களை காண்கிறார். அம்மக்கள் அச்சத்தால்தான் தஞ்சமடைந்துள்ளனர் என்பதை அம்மக்களின் முகபாவனைகளால் புரிந்து கொள்கிறார். அவர்கள் பாய்வதற்குப் பதுங்க வில்லை என்பதை அறிந்து கொண்டார். அம்மக் களிடம் மனம்விட்டு பேசுகிறார். அவர்களுடைய உயிர், உடைமை பாதுகாக்கப்படும் என்றும், வாடிகனின் தூண்டுதலால் ஒழிக்கப்பட்ட ஆர்த் தோடக்ஸ் கிறிஸ்தவ மத தலைமை உயிர்ப்பிக் கப்படும் என்றும் வாக்குறுதியளிக்கிறார். தஞ்ச மடைந்த மக்கள் நம்பிக்கைப் பெற்றனர். மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். தேவாலயத்திலிருந்து வெளியேறினர். இப்பொழுது காான்ஸ்டன்டின் நோபிள் சுல்தானின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.*

*ஆதாரம் -*


A) (i) Iestor Iskander of the fall of Constanti nople about the Document. - hongman world History wps.pearsoncustom.com

(https://wps.pearsoncustom.com/wps/media/abject/2427/2486120/chap_assets/documents/doc9_4.html)

(ii) The sege and the fall of constantinople in 1453, P-521, Historiagraphy, Topography and Military Studies by - Maries Philippides and watter K. Hanak

B) *பாலஸ்தீன வரலாறு பாகம்-1*

by *பேராசிரியர்* M.H. *ஜவாஹிருல்லாஹ் பதிப்பகம், புத்தொளி பதிப்பகம் முதற்பதிப்பு, பிப்-2005, பக்-117,118*

C) A History of Byzantium by - Timothy E. Gregory, P-337.


## Lee tv Networkக்கு வாழ்த்துகள்.!


NEW MEDIA என்கிற தளத்தில் இஸ்லாமிய யூடியூப் சேனலான லிணிணி TV NETWORK ஒரு லட்சம் Subscriberகளை கடந்து வெற்றிகரமாக சென்று கொண்டிருப்பதை அறிந்தோம்.அல்ஹம்துலில்லாஹ்.

நிறைய குறும்படங்கள் மூலம் இஸ்லாத்தின் வாழ்வியல் கொள்கைகளை தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துரைத்து கொண்டிருக்கிறார்கள். மிக முக்கிய மாக இந்து முஸ்லிம் ஒற்றுமையை பறைசாற்றும் வகையில் நிறைய குறும்படங்களை வெளியிட்டு, நாட்டின் பிரிவினைவாதிகளின் சதிகளை முறியடிக் கும் பணிகளையும் ஆர்வமாக செய்து வருகிறார்கள்.

நமது வைகறை வெளிச்சம் குழுவோடு மிக நீண்ட காலமாக நட்போடு இருந்து வருகிறார்கள். ஆர்வ முடன் நம்மிடம் தகவல்கள் மற்றும் ஆலோசனை களை பெற்றுக்கொள்வார்கள்.

டிஜிட்டல் தாஃவா சென்டர் என்றொன்றை தொடங்கி, அதில் தமிழகத்தில் தாஃவா செய்யும் அனைவரையும் ஒன்றினைத்து அழைப்பு பணிகளை யும் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களின் இந்த பொன்னான பணி தொடரவும், இன்னும் அவரது சேனல் மென்மேலும் வளரவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானக!

வைகறை வெளிச்சம் சார்பாக Lee Tv NetWorkக்கு எங்களது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்.






ஜாதிய கட்டமைப்பு குறித்தும் சமூகத்தில் நிலவும் பாகுபாடுகள் குறித்தும் பாட புத்தகங்களில் கூறப்பட்டிருந்த பகுதிகளை நீக்கியுள்ளது தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT). இந்த மாற்றங்கள் கடந்த எட்டு ஆண்டுகளில் பிஜேபி ஆட்சிக்கு வந்தபின் நடந்தவை.

எந்த பகுதிகள் எல்லாம் மாற்றப் பட்டுள்ளன என்ற அட்டவணை NCERT க்குள் சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. அவற்றோடு ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள வரலாறு, அறிவியல் விஞ்ஞானம், சமூகவியல் பாடங்களை ஒப்பிட்டுள்ளனர் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை குழுவினர். தாழ்த்தப்பட்ட ஜாதி மக்களும், சிறுபான்மையினர்களும் எதிர் கொள்ளும் ஏற்றத்தாழ்வுகள் குறித்த உதாரணங்களை பாடப் புத்தகங்களில் இருந்து நீக்கியுள்ளதை அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். 'நீதிமிக்க சமூகத்தை கட்டமைக்கும் உணர்வை' ஏற்படுத்திட இவையெல்லாம் 2007 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டவை.

கோவிட் காலங்களில் பாட சுமைகளை குறைப்பதற்காக இந்த நீக்கங்கள் செய்யப் பட்டதாக NCERT கூறுகிறது. எனினும் கடந்த காலங்களிலும் ஜாதிகள் குறித்த பாடங்களில் கூறப்பட்டிருக்கும் கருத்திற்காக சர்ச்சையில் சிக்கி உள்ளது NCERT.

காங்கிரஸ் ஆட்சியின் போது சட்ட மேதை அம்பேத்கர் அவர்களின் கார்ட்டூன் 11 ஆம் வகுப்பு அறிவியல் விஞ்ஞானம் பாட புத்தகத்தில் இடம் பெற்றதற்காக நடந்த போராட்டத்தை தொடர்ந்து அது நீக்கப்பட்டது. பாட புத்தகங்களில் ஜாதியை குறித்து 'தேவையற்ற கவன குவிப்புகள்' உள்ளதாக கூறி கடந்த வருடம், பிஜேபி தலைவர் வினய் சஹஸ்ரபுத்தேவை தலைமையாக கொண்ட அணி அறிக்கை ஒன்றை நாடாளுமன்ற கல்வி குழுவிடம் அளித்தது.

சில முக்கியமான மாற்றங்கள் நடந்த பகுதிகளை கீழே காணலாம்.

**ஜாதிய அமைப்பு**

ஆறாம் வகுப்பு வரலாறு பாட புத்தகத்தில் (நமது கடந்த காலம் I) வரும் வர்ணங்கள் குறித்த பகுதிகள் பாதியளவு குறைக்கப்பட்டுள்ளன. அரசு, அரசர்கள், முந்தைய குடியரசு அத்தியாயங்களில் இருந்து பிறப்பின் அடிப்படையில் வர்ணங்கள் மக்களை எப்படி வகைபடுத்துகின்றன, தீண்டத்தகாதவர்கள், வர்ண அமைப்பு முறையை மறுதலித்தல் இவற்றை பற்றிய வரிகள் நீக்கப் பட்டுள்ளன.

**நீக்கப்பட்ட வரிகள்**

பிறப்பின் அடிப்படையிலே இப்பிரிவுகள் தீர்மானிக்க பட்டுள்ளது என்பதை மதகுருக்கள் மேலும் கூறினர். உதாரணமாக, ஒருவரின் தாயும் தந்தையும் பிராமணராக இருந்தால், அவரும் பிராமணராகவே பிறப்பார். அவ்வாறே மற்றவர்களும். பின்னர், சிலரை தீண்டத்தகாதவர்கள் என்று வகைப்படுத்தினர். கைவினை தொழில் செய்பவர்கள், வேட்டையாடுபவர்கள், இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கும் தகனம் செய்வதற்கும் உதவி புரிபவர்கள் இந்த பிரிவை

சேர்ந்தவர்கள். இவர்களை தொட்டால் தீட்டு என்று மதகுருக்கள் கூறினர். பிராமினர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த வர்ண அமைப்பு முறையை பலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆறாம் வகுப்பு வரலாறு பாடப்புத்தகத்தில் இருந்து ஆசிரம நிலை - மனித வாழ்வின் நான்கு நிலைகள் பற்றிய பின்வரும் வரிகள் நீக்கப்பட்டுள்ளன. ஆசிரம முறையின்படி ஆண்கள் தங்கள் வாழ்நாளில் சில பகுதிகளை தியானத்தில் கழிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொதுவாக பெண்கள் வேதங்களை படிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் தங்கள் கணவன்மார்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரம நிலையை பின்பற்ற வேண்டும்.

ஆறாம் வகுப்பு வரலாறு பாட புத்தகத்தில் புராணங்கள் என்ற தலைப்பில் வரும் பெண்களும் சூத்திரர்களும் வேதங்களை ஓதுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்ற குறிப்புகள் நீக்கப்பட்டுள்ளன. வேதங்கள் எளிமையான சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளன. அதனை யாவரும் கேட்கலாம். வேதங்களை படிப்பதற்கு அனுமதிக்கப்படாத பெண்களும் சூத்திரர்களும் அதனை கேட்கலாம். மாற்றி அமைக்கப்பட்ட பாட புத்தகத்தில் அதனை யாவரும் கேட்கலாம் என்ற வரிகளோடு முடிக்கப்பட்டுள்ளன.

ஆறாம் வகுப்பு அறிவியல் விஞ்ஞானம் பாட புத்தகத்தில் பன்மைத்துவமும் பாகுபாடும் (Diversity and Discrimination) என்ற தலைப்பின் கீழ் வரும் பாகுபாடுகள் குறித்த கருத்துகள் பெருமளவில் நீக்கப் பட்டுள்ளன.

ஜாதிகள் சம்பந்தமான விதிகள் நிறுவப்பட்டு விட்டன. அதன்படி, தீண்டத் தகாதவர்கள் என அழைக்கப்படுவோர் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொழிலை தவிர மற்ற தொழில்களை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். உதாரணமாக, கிராமங்களில் குப்பைகளையும் இறந்த விலங்குகளின் உடல்களையும் அப்புறப்படுத்துவதற்கு சிலரை நிர்பந்திக்கின்றனர். ஆனால் அதே சமயம், அவர்கள் உயர்ந்த ஜாதிகளை சேர்ந்தவர்களின் வீடுகளுக்குள் அனுமதிக்கப் படுவதில்லை. கிணறுகளில் தண்ணீர் எடுக்க அனுமதிக்க படுவதில்லை. கோவில்களில் நுழைய கூட அனுமதிக்கப்படுவதில்லை. வகுப்பறைகளில் இவர்களின் குழந்தைகள் மற்ற ஜாதியை சேர்ந்தவர்களின் குழந்தைகளோடு அருகில் உட்காரக் கூடாது.

மற்றொரு பத்தியில் வரும் கீழே தரப்பட்டுள்ள வரிகளும் நீக்கப் பட்டுள்ளன.

"ஜாதிய அடிப்படையிலான பாகுபாடு தலித்களை சில குறிப்பிட்ட பொருளாதார ரீதியான நடவடிக்கையில் அவர்கள் பங்கெடுப்பதை மட்டும் தடுக்கவில்லை, மாறாக, மற்றவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதையும், கண்ணியமும் அவர்களுக்கு வழங்கப்படுவதையும் தடுக்கின்றது."

12 ஆம் வகுப்பு சமூகவியல் பாட புத்தகத்தில் சமூக ஏற்றத் தாழ்வுகளும் விலக்கல்களும் ( Social inequality and exclusion) என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டிருந்த தீண்டாமை எப்படியெல்லாம் நடைமுறைப்படுத்த படுகின்றது என்பதை பற்றிய விளக்கங்களும் நீக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1) விவசாயம், துப்பரவு, தோல் சம்பந்தப்பட்ட தொழில்கள் இதுபோன்ற குலத்தொழில் களையே தலித்கள் செய்வர். அதிகமான கூலிகளை பெற்று தரும் வைட் காலர் (White collar) பணிகள் அவர்களுக்கு கிடைப்பது அரிது.

"A Dalit is likely to be con fined to traditional occupations

such as agricultural labour, scavenging,or leather work,with little chance of being able to get high-paying white-collar or professionalwork."

2) அதே நேரத்தில், சில அடிபணிந்து நடக்கும் தொழில்களில் தலித்களை மட்டுமே கட்டாயப் படுத்தி ஈடுபடுத்துவதும் தீண்டாமையின் ஒரு அங்கம். உதாரணமாக, மத விழாக்களில் மேளங்களை முழங்க நிர்பந்திப்பது.

எல்லோர் முன்னிலையில் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்ளும் அடிபணிந்து நடந்திடும் வேலைகளை செய்து விடுவது தீண்டாமை நடைமுறையில் ஒரு முக்கிய பகுதியாகும். வேறுபாடுகளை வெளிப்புறத் தோற்றங்களில் திணித்திடும் நடைமுறைகளும் (உதாரணமாக தலைப் பாகையை தலையில் இருந்த எடுத்து கைகளை கட்டிக்கொண்டு நின்றிடுதல், காலணிகளை கைகளில் சுமந்து செல்லுதல், தலை குனிந்து நிற்றல், சுத்தமான வெண்ணிற ஆடைகள் அணிவதை தவிர்த்திடுதல் இன்னும் இதுபோன்ற செய்கைகள்) இழிவுகளையும் அவமானங்களையும் வழக்கமாக்கிடும் நடைமுறைகளும் தீண்டாமையின்

பொதுவான அம்சங்கள்.

சமூக செயற்பாட்டளாரான ஹர்ஷ் மந்தர் எழுதிய 'Unheard Voices: Stories of Forgotten lives' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட துப்புரவு தொழில்களில் ஈடுபடும் தலித் மக்களின் துயரங் களை விளக்கிடும் பகுதிகளும் நீக்கப்பட்டுள்ளன.

The excrement only piles up at each seat, or flows into open drains.It is Narayanamma's job to collect it with her broom onto a flat, tin plate, and pile it into her basket. When the basketis filled, she carries it on her head to a waiting tractor-trolley parked at a distance of half a kilometre. And then she is back, waiting for the

next call from the toilet..."

பன்னிரண்டாம் வகுப்பு சமூகவியல் பாட புத்தகத்தில் 'சமூக மாற்றமும் இந்தியாவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும்' என்ற கடைசி அத்தியா யத்தில் சமூக இயக்கங்களின் வழியே தலித்துகளும் இதர பிற்படுத்தப்பட்டவர்களும் கவனம் பெறுவது குறித்து உயர் ஜாதியினரின் கூற்றையும் நீக்கியுள்ளனர். உயர் ஜாதிகளை சேர்ந்த சிலர் "அரசாங்கம் அவர்களை கண்டுகொள்ள தேவை யில்லை ஏனெனில் எண்ணிக்கையில் அவர்கள் சிறுத்தொகையினரே" என்று எண்ணுகின்றார்கள். அதே பாட புத்தகத்தில் உயர் ஜாதியை சேர்ந்த பெண்களைக் காட்டிலும் தலித் பெண்கள் எவ்வாறு மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு ஆளா கின்றனர் என்பதை பற்றிய வரிகளும் நீக்கப்பட் டுள்ளன.

ஏழாம் வகுப்பு அறிவியல் விஞ்ஞானம் பாட புத்தகத்தில் சமூக அரசியல் வாழ்க்கை- பகுதி || இல் சமத்துவம் என்ற அத்தியாயத்தில் கூறப்பட்ட நான்கு கற்பனை கதைகளும் நீக்கப்பட்டுள்ளன.

அவை மாணவர்களை வீட்டு உதவியாளர் களாகவும், தலித் ஆசிரியராகவும், முஸ்லிம் தம்பதியாகவும் நடிப்பதற்கு கேட்டுக் கொள்ளப் படுவார்கள். இவர்கள் அனைவரும் சமூக பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டவர்கள்.

**சிறுபான்மையினர்கள் மீதான பாகுபாடுகள்**

முஸ்லிம்கள் தங்கள் பெண் குழந்தைகளின் கல்வியில் ஆர்வம் காட்டிடுவது இல்லை என்ற பழைய பல்லவியை பாடுதல், அது எந்தளவுக்கு உண்மைக்கு மாற்றமான கூற்று என்பதை விளக் கிடும் வரிகளும் ஆறாம் வகுப்பு பாடபுத்தகத்தில் சமூக அரசியல் வாழ்க்கை-|| என்ற பகுதியில் பன்மைத்துவமும் பாகுபாடும் என்ற அத்தியா யத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

12 ஆம் வகுப்பு சமூகவியல் பாடபுத்தகமான இந்திய சமூகம் என்ற பகுதியின் கலாச்சார பன்மைத்துவத்தின் சவால்கள் என்ற அத்தியா யத்தில் ஹிந்து வகுப்பவாதிகளின் எழுச்சியி னாலும் அவர்கள் அரசியல் அதிகாரத்தை கைபற்றியதாலும் அரசாங்கம் சிறுபான்மை- யினரை பாதுகாத்திட எடுக்கும் நடவடிக்கை களில் அவர்கள் எவ்வாறு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்பதை விளக்கிடும் குறிப்பு களும் நீக்கப்பட்டுள்ளன.

அதே அத்தியாயத்தில், எண்ணிக்கையில் அதிகமாக இருப்பவர்கள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல் அதனால் சிறுபான்மையினர் களிடம் ஏற்படும் தாக்கங்கள் குறித்த பின்வரும் வரிகளும் நீக்கப்பட்டுள்ளன. "ஜனநாயக அரசிய லில், தேர்தல்களின் வழியாக, பெரும்பான்மை யாக இருப்பவர்கள் அரசியல் அதிகாரத்தை அடைவது எப்பொழுதுமே சாத்தியம். இது எதனை உணர்த்துகிறது என்றால் மத, கலாச்சார சிறுபான்மையினர்கள் அவர்கள் பொருளாதார, சமூக நிலைகள் எப்படி இருந்தாலும் சரி, அவர்கள் அரசியல் ரீதியாக அமுக்கப்படுவார்கள். பெரும்பான்மையாக இருப்பவர்கள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி விடுவார்கள் என்ற பயத்தை அவர்கள் எதிர்கொள்ள வேண்டும். அதுமட்டுமில்லாமல், மாநில நிருவாகத்தை கொண்டு தங்களுடைய மத, கலாச்சார நிறுவனங் களை நசுக்கி விடுவார்கள். மேலும், தங்கள் தனித்தன்மையான அடையாளங்களை விட்டுவிட சொல்லி நிர்பந்திக்கபடுவோம் என்ற அச்ச உணர்வை எதிர் நோக்கியும் வாழவேண்டும்."

வகுப்பவாத பிரச்சினை தங்கள் பகுதியில் ஏற்பட்ட பின், முஸ்லிம் பெண் ஒருவர் அவருடைய கலாச்சார ஆடையை அணிவதை தவிர்த்து விட்டு ஜீன்ஸ் அணிய கேட்டு கொள்ளப் பட்டார். அவருடைய நேரடி அனுபவங்களும் 8 ஆம் வகுப்பு அறிவியல் விஞ்ஞானம் பாட புத்தகத்தில் (சமூக அரசியல் வாழ்க்கை-|||) இருந்து நீக்கப்பட்டுள்ளன.

தகவல்: Indian Express, June 19, 2022, Key deletions on caste, minorities in revised school textbooks

**- அபூஹாசின்**



திருச்சியில்

# முஸ்லிம்களை குறிவைக்கும் உளவுத்துறை

## உயர்நீதிமன்றம் சொன்ன திடுக்கிடும் உண்மை!



வழக்கறிஞர் கமருத்தீன் (திருச்சி)

தமிழகம் முழுவதும் ஒரு பிரச்சனையை தற்போது நான் பார்த்து வருகின்றேன். நமது தமிழக உளவுத்துறையைச் சார்ந்த சிலர், சமூக பிரச்சனைகளை பேசக்கூடிய, அதற்காக போராடக்கூடிய முஸ்லிம் இளைஞர்களை குறிவைத்து, அவர்களுக்கு முறையான சம்மன் கூட அளிக்காமல், விசாரணைக்கு அழைத்து செல்கிறார்கள்.

அதன்பிறகு அவர்களுக்கு கவுன்சிலிங் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அவர்களது குடும்பங்களை மிரட்டி, யாருக்கும் தெரியாமல் சென்னையிலுள்ள காவல் அலுவலகங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு இரண்டு, மூன்று நாட்கள் சட்டவிரோதமாக தங்க வைக்கப்படு கிறார்கள். அங்கே அவர்களுக்கு காவல்துறை கவுன்சிலிங் வகுப்புகளை நடத்துகிறது. அதன் பின் அவர்களை அனுப்பிவிடுகிறது.

இப்படி அழைத்து செல்லப்பட்ட சில முஸ்லிம் இளைஞர்கள் மீது, சமூக வலைதளங் களில், மத மோதல்களை தூண்டும் விதமாக பதிவுகளை போட்டார்கள், வாட்ஸ்ஆப் ஸ்டேட் டஸ்களில் மத மோதல்களை ஏற்படுத்தும் விதமாக பதிவுகளை போட்டார்கள் என்று சில வழக்குகளும் பதிவாகியுள்ளதாக கேள்விப்பட் டோம். அந்த வழக்குகள் NIAக்கு மாற்றப்பட்டு, அவர்கள்மேல் UAPA வழக்கு தொடுக்கப்பட்டு, பல நாட்கள் சிறைவாசத்திற்கு பின் விடுவிக்கப் பட்டுள்ளார்கள்!

தற்போது நமது உயர்நீதிமன்றம் சில தினங் களுக்கு முன்பு “ஊபா - UAPA” சட்டத்தில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு பெயில் வழங்கி யுள்ளது. உயர்நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பானது தற்போது பலரது கவனத்தை பெற்றுள்ளது.

மதமாற்றத்தில் ஈடுபட முயன்றபோது சிலரை கொலை செய்ய திட்டம் தீட்டியதாக சில இளைஞர்களும், ஒரு பெண்மணியும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கோயம்புத்தூரின் செல்வபுரம் காவல் நிலையத்தில் இந்த வழக்கு பதிவாகியுள்ளது.

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சதாம் ஹூஸைன் என்ற இளைஞருக்கு, நமது உயர்நீதி மன்றம் பெயில் வழங்கியுள்ளது. அந்த பெயில் (bail) உத்தரவில் ஒரு முக்கியமான விஷயத்தை உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

“இந்த இளைஞர்கள் எந்தவிதமான கொலை பாதக செயலையும் செய்யவில்லை. யாரும் அவர்கள் மீது புகாரளிக்கவில்லை. காவல்துறை

தான் சந்தேகத்தின் பெயரில் இவர்களை கைது செய்துள்ளது. அதன் பின் காவல்துறை அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியுள்ளது. அதில், அவர்கள் பயங்கரமான அருவாள்களை வைத்திருந்ததாக கூறி அவர்கள் மீது, "ஆயுதக் குற்றச் சட்டம் - Arms Offence Act 1959 போடப்பட்டுள்ளது.

அதனுடன் கூடுதலாக இந்த வழக்கில் "ஊபா - UAPA" சட்டத்தையும் இணைத்திருக்கிறார்கள். அதாவது உயர்நீதிமன்றத்தின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமேயானால்,

"There was no complaint from any person and nobody was injured in this case. Therefore, in the opinion of this court, the provisions of Unlawful Activities (Prevention) Act have been included only in order to deny/delay the appellant from getting bail from the court."


"குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு பெயில் கிடைப்பதை நிறுத்தி வைக்க அல்லது கால தாமதப்படுத்தும் நோக்கத்திலேயே இந்த வழக்கில் "ஊபா - UAPA" சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றபடி குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீது "ஊபா - UAPA" சட்டத்தை போட எந்த முகாந்திரமும் இல்லை."

**என்ன நடந்தது இந்த வழக்கில்?**

IS-ஐ சார்ந்த சுரேஷ் என்கிற காவல்துறை அதிகாரி சதாம் ஹூசைன் மற்றும் இந்த வழக்கோடு சம்மந்தப்பட்ட சிலரை கவுன்சிலிங் வகுப்பு எனும் பெயரில் சட்டவிரோதமாக அழைத்து சென்று, மூன்று நாட்கள் எங்கெங்கோ அலைக்கழித்துவிட்டு, பின்னர் மேற்கூறிய வழக்கில் கைது செய்ததாக பொய்யாக ஜோடித்திருக்கிறார்.

இங்கே நாம் ஒரு விஷயத்தை நன்றாக கவனிக்க வேண்டும். ஒரு வழக்கில் "ஊபா-UAPA" சேர்க்கப்பட்டுவிட்டால், அந்த வழக்கை NIA விசாரிப்பதற்கான எல்லா அதிகாரமும் கிடைத்துவிடும். இந்த UAPA மற்றும் NIA -க்கு எதிராக ஆளும் திமுக அரசு தேர்தலுக்கு முன்பும், பின்பும் பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

இப்போது தமிழக காவல்துறை நமது முதல்வரின் நேரடி கண்காணிப்பின் கீழ்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்படி இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய காவல்துறை UAPA சட்டத்தை




முஸ்லிம் இளைஞர்கள் மீது தவறான நோக்கத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காவல்துறையின் இந்த முஸ்லிம் விரோதப் போக்கு தமிழக அரசின் கொள்கை முடிவிற்கே எதிரான செயலாகத்தான் பார்க்க முடிகிறது. தமிழக அரசு தெளிவாக சொல்கிறது, NIAக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், எங்களது மாநில சுயாட்சி தத்துவத்திற்கு எதிரானது. எங்களிடம் சிறப்பான காவல்துறை உள்ளது. CBCID போன்ற நிறுவனங்கள் உள்ளது. எங்கள் பிரச்சனைகளை நாங்களே சிறப்பாக கையாள்வோம் என்று.

ஆனால் முதல்வரின் நேரடி கண்காணிப்பில் இயங்கிக்கொண்டிருக்கின்ற காவல்துறையே UAPA சட்டத்தை முஸ்லிம் இளைஞர்களுக்கு எதிராக பயன்படுத்தி வழக்குகளை NIAக்கு மாற்றி வருகின்றது.

மேற்கூறிய உயர் நீதிமன்ற தீர்ப்பும் இதனை உறுதிப்படுகிறது. தீர்ப்பின் 23வது பத்தியில் சொல்லியிருப்பதை கவனியுங்கள்;

"Moreover, a perusal of the materials available on record reveals that the State police has referred the case to be investigated by the National Investigation Agency, however, said proposal was rejected by the National Investigation Agency which speaks much about the case of the prosecution."

"அதாவது, தமிழக காவல்துறை இந்த வழக்கை NIA விசாரிக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. ஆனால் NIA இந்த வழக்கை விசாரிக்க மறுத்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது."

ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் இந்த விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி, தமிழக

காவல்துறையில், உளவுத்துறையில் இருக்கக் கூடிய முஸ்லிம் விரோதப்போக்காளர்களை, கருப்பாடுகளை இனம்கண்டு அவர்கள் மீது துரிதமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**சதாம் உசேன் வழக்கை திறம்பட நடத்தியவர் வழக்கறிஞர் எஸ்.முஹம்மது அலி ஜின்னா அவர்களுக்கு சமுதாயத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

மேலும் உயர்நீதிமன்றம் பெயில் வழங்கிய இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள், குறிப்பாக கோயம்புத்தூர் செல்வ புரம் காவல் நிலையத்தை சார்ந்த காவல் அதிகாரிகள் மீதும், சட்ட விரோதமாக முஸ்லிம் இளைஞர்களை அழைத்து சென்று கவுன்சிலிங் வகுப்புகளை வழங்கிய IS சுரேஷ் என்பவர் மீதும் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இப்படி செய்தால் மட்டுமே இந்த ஆட்சி சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பான ஆட்சி என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் விதைக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வழக்கறிஞர். கமருத்தீன் அவர்கள் வைகறை வெளிச்சம் சேனலுக்கு அளித்த பேட்டியிலிருந்து

திருச்சியிலிருந்து நமது நிருபர்.




**அடிக்குறிப்பு**

தமிழக உளவுத்துறையைச் சார்ந்த சுரேஷ் என்பவர் முஸ்லிகளுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றார் என்பதை ஏற்கனைவே பலமுறை நமது வைகறை வெளிச்சம் மாத இதழில் எழுதி வந்துள்ளோம். (கூடுதல் தகவல்களுக்கு பார்க்க, ஜனவரி 2022 இதழ் மற்றும் பிப்ரவரி 2022 இதழ்)

கொரோனா காலத்தில் "தினமலர் நாளிதழின் திருச்சி பதிப்பில், "முஸ்லிம்கள் கொரானா ஜிஹாத்" செய்கிறார்கள் என்ற அபத்தமான செய்தி ஒன்று தினமலர் பெரிய செய்தி ஒன்றை வெளியிட்டது. அப்படி வந்த அந்த செய்திக்கு எதிராக "தாருல் இஸ்லாம் சட்டக் குழுமம் மற்றும் இதர குழுமங்களும் இணைந்து "தினமலர் நாளிதழுக்கு எதிராக வழக்கு தொடுத்தது. அப்போது தினமலர் நாளிதழ் "எங்களுக்கு உளவுத்துறைதான் இந்த தகவலை தந்தது என "டீக்கடை பெஞ்ச்" பகுதியில் வெளியிட்டது." அப்போதிலிருந்தே உளவுத்துறையில் முஸ்லிம் விரோதப்போக்கில் செயல்படும் அந்த கருப்பாடு யார் என்ற ஐயம் எங்களுக்கு இருந்து வந்தது. சமீபத்தில் திருச்சியில் மேற் கண்ட வழக்கு சம்மந்தமாக நாம் நடத்திய கள ஆய்வின் போது, அந்த IS சுரேஷ் தான் என்று தெரிய வந்தது. ஆகவே இது விஷயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் போது இவற்றையும் கவனத்தில் கொள்ளுமாறு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்.

நாம் இதற்கு முன்னால் பல தளங்களின் வழியாகவும் நமது ட்யூப் வழியாகவும் நாம் இப்பொழுது இருக்கின்ற தளபதி மு.க.ஸ்டாலின் அரசுக்கு எதிராக முஸ்லிம்களை திருப்புவதற்கு உளவுத்துறை முழுவீச்சில் வேலை செய்து கொண்டிருக்கிறது. அதற்காக 1000-க்கு மேற்பட்ட நபர்களை நியமித்துள்ளது என்பதை முதலமைச்சர் கவனத்தில் கொள்ளவேண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

# மோடியின் ப.ஜ.க.



# தேசத் துரோக சட்டத்தை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறது?

The law of sedition - தேசத்துரோக சட்டம் என்பது, பிரிட்டீஷ் காலனியாதிக்கத்தை எதிர்த்து போராடிய இந்திய சுதந்திர போராட்ட வீரர்களுக்கு எதிராக பிரிட்டீஷ் அரசால் இயற்றப்பட்ட சட்டமாகும்.

பாலகங்காதர திலகர் மற்றும் காந்தி போன்றவர்கள் இந்த சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் மிகவும் பிரபலமானவர்கள். ஆனால் தற்போதைய சுதந்திர இந்தியாவிலும் இந்தச் சட்டம் கைவிடப்படாமல் நடைமுறையில் தான் உள்ளது. அதுவும் 2014ல் மோடி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பிறகு தேசத்துரோக வழக்குகள் அதிகரித்து வருவதை காண்கிறோம்.

உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி என்.வி.ரமணா அவர்கள், 2021 ஜூலையில் எடிட்டர்ஸ் கில்ட் ஆஃப் இந்தியா தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த போது, "தேசத் துரோக சட்டம் என்பது பிரிட்டீஷ் அரசாங்கத்தால் நமது சுதந்திரத்தை முடக்குவதற்காக உருவாக்கப்பட்ட சட்டம். இந்த சட்டம் மகாத்மா காந்தி, திலகர் போன்றோர் மீதே பயன்படுத்தப்பட்டுள்ளது. சுதந்திரமடைந்த 75 ஆண்டு கால இந்தியாவிற்கு இந்தச் சட்டம் தேவையா?" என்று இந்தச் சட்டத்தை விமர்சித்திருந்தார். (ஆதாரம் : The Hindu - July 15 - 2021)

2019 மற்றும் 2020 ஆண்டுகளின் உள்துறை அமைச்சகம் (MHA) மற்றும் NCRB வெளியிட்ட ஆவணங்களை உற்று நோக்கும் போது, 2014 ஆண்டிற்கு பிந்தைய மோடியின் ஆட்சியில் தேசத் துரோக வழக்குகள் வேகமாக அதிகரித்துள்ளதை காணலாம்.

2010-ம் ஆண்டில் இருந்து 2020 வரை சுமார் 10,938 தனிநபர்கள் மீது 816 தேசத்துரோக வழக்குகள் பதியப்பட்டுள்ளன. அதில் 65% சதவிகிதத்திற்கு மேலான வழக்குகள் மோடி ஆட்சிக்கு வந்த பின்பு போடப்பட்டவை. பெரும்பாலும் எதிர்க்கட்சி தலைவர்கள், கல்லூரி மாணவர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் போன்றவர்களின் பெயர்களே அதிகமாக இந்த வழக்குகளில் இடம் பெற்றுள்ளது.

1) கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஆக்ராவில் மூன்று கஷ்மீரி இளைஞர்கள் மீது தேசத்துரோக வழக்கு பதியப்பட்டது. காரணம் ஜி20 கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை பாகிஸ்தான் தோற்கடித்ததை கொண்டாடும் விதமாக சமூக வலைதளங்களில் பதிவிட்டதற்காக!

2) உத்திரப்பிரதேசத்தின் ஹத்ராஸில் 19 வயது பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட நிகழ்வுக்கு நீதிகேட்டு போராடிய 23 நபர்கள் மீது 22 தேசத்துரோக வழக்குகள் பதியப்பட்டன.

3) 2019 புல்வாமா தாக்குதல் நடந்த பிறகு 27 தேசத்துரோக வழக்குகளில் 44 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 26 வழக்குகள் பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் இருந்து பதிவு செய்யப்பட்டவை. கைது செய்யப்பட்ட

நபர்கள், பாகிஸ்தானுக்கு ஆதரவாக சமூக வலை தளங்களில் பதிவிட்டதாகவும், இந்தியாவிற்கு எதிராக செய்திகளை பதிவு செய்ததாகவும் குற்றங்கள் சுமத்தப்பட்டன.

4) CAA போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது 25 தேசத்துரோக வழக்குகள் பதியப்பட்டன. அதில் 22 வழக்குகள் பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் இருந்து பதியப்பட்டவை. இதில் 3754 தனி நபர்கள் பாதிக்கப்பட்டனர்.

5) 2018ம் ஆண்டு சமூக ஊடகங்களில் பிரதமர் நரேந்திர மோடி, என்.பிரேம் சிங் மற்றும் ஆர்.எஸ்.எஸ். போன்றவற்றை விமர்சித்து பதிவிட்டதற்காக பத்திரிகையாளர் "வாங்கெம்" தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார்.

2014ம் ஆண்டு 47 வழக்குகளும்,
2015ம் ஆண்டு 30 வழக்குகளும்,
2016ம் ஆண்டு 35 வழக்குகளும்,
2017ம் ஆண்டு 51 வழக்குகளும்,
2018ம் ஆண்டு 70 வழக்குகளும்,

2019ம் ஆண்டு 93 வழக்குகளும் தேசத் துரோக சட்டத்தின் கீழ் பதிவாகியுள்ளன.

NCRB-ன் ஆய்வறிக்கையின் படி 2016 முதல் 2019 வரையில் பதியப்பட்ட தேசத்துரோக வழக்குகளின் எண்ணிக்கை 160% சதவிகிதம் அதிகரித்துள்ளது.

ஆனால் 2016ல் 33% சதவிகித வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குற்றம் நிரூபிக்கப் பட்டனர். 2019ல் குற்றம் நிரூபிக்கப்பட்டவர் களின் சதவிகிதம் 3% ஆக சரிந்துள்ளது. இதில் 22 வழக்குகளில் குற்றத்தை நிரூபிக்க ஆதாரம் இல்லை என்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 2 வழக்குகள் பொய்யாக போடப்பட்டவை.

மேலும் இந்த தேசத்துரோக வழக்குகளின் முதல்தகவல்அறிக்கைகளை(FIR) ஆய்வு செய்யும் போது, Unlawful Activities Prevention Act (UAPA), Prevention of Damage to Public Property Act, Epidemic Diseases Act போன்றவைகளும் அதில் இணைக்கப்பட்டுள்ளன.

YSR காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஒருவரின் பேச்சுக் களை இரண்டு செய்தி நிறுவனங்கள் வெளியிட் டன. அந்த பேச்சுக்கள் "குற்றங்களை தூண்டும் விதமாக" இருப்பதாக கூறி தேசத்துரோக வழக்கு பதியப்பட்டது. இந்த வழக்கை மே 2021ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம், மூன்று நீதிபதிகள் தலை மையில் விசாரித்தது. அப்போது IPC பிரிவு 124A-இன் கீழ் தேசத்துரோக குற்றத்திற்கான வரம்புகளை வரையறுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. (ஆதாரம்: AamodaBroadcasting Company & Anr vs State of Andhra Pradesh)

மோடியின் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் 405 தனி நபர்கள் மீது அமைச்சர்களையும், அரசையும் விமர்சித்ததற்காக தேசதுரோக வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இதில் 149 பேர் மீது மோடியை விமர்சனம் செய்தது, மோடியை சிறுமைபடுத்தும் விதமாக குறிப்புகள் எழுதியது ஆகியவற்றுக்காகவும், 144 நபர்கள் மீது யோகி ஆதித்யநாத்தை விமர்சித்ததற்காகவும் பதியப் பட்டுள்ளன. உ.பி-யில் 2010-ம் ஆண்டிலிருந்து போடப்பட்ட 115 வழக்குகளில் 77% சதவிகித வழக்குகள் யோகி ஆதித்யநாத் முதலமைச்சரான பிறகு போடப்பட்டவை.

தேசத்துரோக வழக்கு அதிகமாக பதிவாகி யுள்ள 5 மாநிலங்களில் பீஹார், உத்திர பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா ஆகிய நான்கு மாநிலங் களில் பா.ஜ.க. ஆட்சியில் உள்ளது. பா.ஜ.க ஆட்சியில் இல்லாத தமிழகமும் இந்த வரிசையில் அடங்கும். 2010லிருந்து பத்து வருடங்களில் 139 தேசத்துரோக வழக்குகள் தமிழகத்தில் பதிவாகி யுள்ளன. அதில் 80% சதவிகிதம் கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள் மீது பதியப்பட்ட வழக்கு களாகும்.

2014க்கு பிறகான இந்தியாவில் தேசத்துரோக வழக்குகளை பதிவு செய்வதற்கான வரம்புகளாக, "போராட்டங்களில் ஈடுபவது, போராட்ட கோஷங்களை தாங்கியிருக்கும் போஸ்டர்களை வைத்திருத்தல், சமூக வலைத்தளங்களில் போடப் படும் பதிவுகள், மோடி அரசுக்கு எதிரான முழக்கங் களை எழுப்புதல்" போன்றவைகளாக உள்ளது.

2014க்கு பிந்தைய மோடியின் ஆட்சியில் தேசத்துரோக சட்டம் குறித்தான ஆய்வுகளை உற்று நோக்கும் போது, ஒன்றிய பா.ஜ.க அரசு கண்மூடித்தனமாக தேசத்துரோக சட்டத்தை பொதுமக்கள் மீது பயன்படுத்தியுள்ளதை காண முடிகிறது. பெரும்பாலும் அற்ப காரணங் களுக்காக பொதுமக்களை துன்புருத்துவதற்கான கருவியாக இந்தச் சட்டத்தை கையாண்டுள்ளதை தெளிவாக அறியமுடிகின்றது.

எந்த நோக்கத்திற்காக பிரிட்டீஷ் அரசாங்கம் இந்தச் சட்டத்தை இயற்றியதோ, அந்த நோக்கத் தின் அடிப்படையில் சுதந்திர இந்தியாவில் அரசையும், அரசின் செயல்பாடுகளையும் விமர் சித்தால், கேள்வி கேட்டால் தேசத்துரோக குற்றத் திற்கு ஆளாகிவிடுவோம் என்ற அச்ச உணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றது மோடியின் பா.ஜ.க ஒன்றிய அரசு.

(ஆதாரங்கள் : The Wire, The Hindu)
- Jasmine Fathima Bsc., B.ed.,

# இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம்

- சவுமியா (முன்னாள் இந்து)

இதுதான் உண்மை என்று உங்களுக்கு தெரிந்துவிட்டது. உங்களுக்கு முன்னாள், உங்களது முகத்திற்கெதிராக அந்த உண்மை வந்து நிற்கும் போது அதை ஏற்றுக்கொள்ளாமல் எவ்வளவு நாள் ஓடுவீர்கள். எவ்வளவு நாளைக்கு அதை உங்களால் மறுக்க முடியும்?

அந்த உண்மைக்கு பதிலளிக்க உங்களுக்கு தடையாக இருக்கும் அனைத்து சங்கிலிகளையும் உடைக்கும் ஒரு தருணம் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு வரும். வல்லமை பொருந்திய இறைவனின் அந்த அழைப்புக்கு பதில் கொடுக்கும் விதமாக, அவனது உண்மையான பாதையை ஏற்றுக்கொள்ளும் உண்ணதமான தருணம் அது.

இஸ்லாம். சத்தியம் இதுதான் என்று தெரிந்த பின்னர், யாருக்கும் அஞ்சாமல் அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். சமூக அழுத்தம், குடும்பங்களின் எதிர்ப்பு என எதுவாக இருந்தாலும் நீங்கள் சத்தியத்தில் உறுதியாக நிற்பீர்கள். நிற்க வேண்டும்.

எனக்கு அந்த நாள் நன்றாக நினைவிருக்கிறது. நான் கண்ணாடி முன் நின்று எதையோ பற்றி கேள்வி கேட்டுக்கொண்டிருந்தேன். எதையோ தேடிக்கொண்டிருந்தேன்.

நான் ஒரு இந்து. அதனால் எனக்கு இறை நம்பிக்கை இருந்தது. அது ஆயிரம் வடிவங்களில் இருந்தது. இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து பொருட்களும் வழிபடத் தகுதியானவை தான். இறைவனின் சக்தி அவன் படைத்த ஒவ்வொரு பொருட்களிலும் இருக்கிறது. ஒரு கல், மரம், நதி என என் குடும்பத்தார்கள் எனக்கு சொல்லிக்கொடுத்தபடி எல்லாமும் எனக்கு கடவுள் தான். இப்படியான ஒரு பல தெய்வ வழிபாட்டு முறையில் இருப்பதில் பெருமை கூட பட்டிருக்கிறேன்.

### இஸ்லாம் குறித்து எனது பார்வை

என்னுடைய கடந்த காலத்தில் இஸ்லாத்தை நான் மிகவும் வெறுத்தேன். முஸ்லிம்களின் கடந்த கால வாழ்வியல் நிலையைவிட உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பதாக நான் நினைத்தேன். என்னைப் பொருத்தவரை முஸ்லிம்களின் நம்பிக்கைகள் அனைத்தும் காலாவதியானவை, பொருத்தமற்றவை, நியாயமற்றவை. கொடூரமானவை.

இஸ்லாத்தை குறித்து இப்படியான ஒரு பார்வை நான் கொண்டிருந்தது என்னுடைய தவறல்ல. பெரும்பான்மையாக இஸ்லாம் குறித்து தவறான, எதிர்மறையான கருத்துக்கள் தான் எங்களைப் போன்றவர்களுக்கு வந்து சேரும். அவைகளை கொண்டு இப்படியான ஒரு பார்வைதான் உருவாகும்.



என்னுடைய பள்ளிப் பருவங்களில் என்னுடன் படித்த வகுப்பு தோழர்கள் பெரும் பாலும் முஸ்லிம்கள்தான். வகுப்புகளில் சும்மா இருக்கும்போது நாங்கள் இஸ்லாம் குறித்தும், முஸ்லிம்கள் குறித்தும் விவாதிப்போம். பெரும் பாலும் 9/11க்கு பின் இந்துத்துவ பாசிஸ்டுகள் இந்தியாவில் நடத்திய முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள் குறித்துதான் பேசிக்கொள்வோம்.

இந்தப் பேச்சுகளின் போது, இஸ்லாத்தின் ஏகத்துவக் கொள்கை, இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள், இஸ்லாத்தில் பெண் களுடைய அந்தஸ்து என பலவாரியாக விவாதிப் போம். இஸ்லாம் குறித்து நான் அறிந்து வைத் திருந்த சில கட்டுக்கதைகளையும் விவாதிப் போம். நான் தவறாக விளங்கிக் கொண்டிருப் பவைகளை அவர்கள் எனக்கு விளக்கி அவற்றை அகற்ற முயல்வார்கள்.

அவர்களின் விளக்கங்கள் எல்லாம் எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. நான் அப்போதும் "பல தெய்வ வழிபாட்டுக்கு சொந் தக்காரி" என்பதில் பெருமை கொண்டிருந்தேன். ஆனால் வெளியில் என்னை, "நான் ஒரு மதச் சாற்பற்றவளாக" காட்டிக் கொண்டிருந்தேன்.

**இந்து மதத்தில் ஏகத்துவமா?**

இந்து மதம் ஏகத்துவத்தை தான் போதிக் கிறது. சிலைகளை வணங்குவது பாவம் என்ற நம்பிக்கையை, கொள்கையை கொண்ட, "ஆர்ய சமாஜ்" என்ற இந்து இயக்கத்தோடு என்னை இணைத்துக் கொண்டேன். அதன்பிறகு பல தெய்வங்களை வணங்கும் முறையை விட்டொழித்தேன். கோவில்களுக்கும் செல்வதில்லை.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் நான் என்னை மீண்டும் அதே சிலந்திவலையில் கண்டேன். ஆம்! ஆர்ய சமாஜ் என்ற இந்து இயக்கத்தில் பலதெய்வ வழிபாடு இல்லை. ஏகத்துவம் தான் என்றாலும் அங்கு பலவாறான சடங்குகள், நெருப்பை வணங்குவது என பல வழிபாடுகள் இருந்தன.

மேலும் இந்துமதத்தின் வேதங்கள், ஸ்மிருதி கள் எல்லாம் என்னை குழப்பத்தில் ஆழ்த்தியது. அவைகள் எல்லாம் தத்துவார்த்தமாக இருந்ததே தவிர! மனிதனின் எதார்த்த வாழ்க்கைக்கு, நடைமுறை வாழ்க்கைக்கு தேவையான எந்த தீர்வும் அதில் இல்லை.

**இஸ்லாம் - இந்து மதச் சட்டங்கள்**

சட்டப்படிப்புக்காக கல்லூரியில் சேர்ந்தேன். அப்போது இஸ்லாம் குறித்தும் அதன் ஷரியத் சட்டங்கள் குறித்தும் எனக்கு சில தெளிவுகள் கிடைத்தன. திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை, குடும்பவியல் சட்டங்கள் குறித்து, இந்துச் சட்டம் மற்றும் இஸ்லாமிய சட்டங்கள் குறித்தும் படிக்க நேரிட்டது.

இவைகள் குறித்த இந்துச் சட்டங்கள் பல்வேறு குழப்பங்கள், கருத்து வேறுபாடுகள் மற்றும் உறுதியின்மை ஆகியவற்றால் சிக்கியிருந் தது. ஆனால் இஸ்லாமிய சட்டங்கள் மிகத் தெளிவாகவும், துல்லியமாகவும், உறுதித் தன்மை யுடனும் இருந்தது.

**இஸ்லாமும் நானும்**

இதன்பின் இஸ்லாம் குறித்த என்னுடைய கருத்து முற்றிலுமாக மாறிவிட்டது. இஸ்லாம் குறித்து இன்னும் அதிகமாக தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. இஸ்லாம் குறித்து எனக்கு சொல்லும் என்னுடைய நண்பர்களிடத்தில் பலமணி நேரம் பேசிக் கொண்டிருப்பேன்.

இணையதளங்களில் இஸ்லாம் குறித்து பல்வேறு கட்டுரைகளை வாசிக்கத் தொடங் கினேன். இஸ்லாம் குறித்து விவாதிக்கப்படும், பேசப்படும் இடங்களுக்கு எல்லாம் சென்று கலந்து கொண்டேன். இவைகளுக்கு பின் இஸ்லாம் குறித்த எனது பார்வை முழுமையாக மாறி இருந்தது. எனது முஸ்லிம் நண்பர்களுடன் நான் பேசும் போது அது பிரதிபலித்தது.

ஆனால் அந்த முஸ்லிம் நண்பர்கள் என்னை எச்சரித்தனர். "இந்துக்களை மூளைச்சலவை செய்து இஸ்லாத்திற்கு மாற்றுகின்றனர்" என்று சொல்லும் குழுக்களை குறித்து என்னை எச்சரித் தனர். இவைகள் எனக்கு அச்சத்தை ஏற்படுத்தின. மேலும் நான் இஸ்லாத்தை நோக்கி நகர்வதை என் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு பிடிக்காததால் நான் அவர்களை ஏமாற்றுவதாக உணர்ந்தேன்.

ஆனால் நான் முன்பே சொன்னது போல, "உண்மை நம் கண் முன்னால் வந்து நிற்கும்

போது அவற்றை விட்டு நம்மால் எவ்வளவு தூரம் ஓட முடியும்? அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள தைரியம் வேண்டும். திருக்குர்ஆன் இப்படிச் சொல்கிறது;

"நம்பிக்கை கொண்டோரே! உங்களுக்கோ, பெற்றோருக்கோ, உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் நீங்கள் நீதியை நிலைநாட்டு வோராகவும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுவோ ராகவும் ஆகி விடுங்கள்! (வாதியோ, பிரதிவாதியோ) செல்வந்தனாக இருந்தாலும், ஏழையாக இருந்தா லும் அவ்விருவருக்கும் அல்லாஹ்வே பொறுப் பாளன். நீதி வழங்குவதில் மனோ இச்சையைப் பின்பற்றாதீர்கள்! நீங்கள் (சாட்சியத்தைப்) புரட்டி னாலோ, புறக்கணித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான். *(4:135)*

நம்முடைய தவறான உணர்ச்சிகள், எண்ணங்கள் எப்போதும் நாம் சரியானதை செய்வதிலிருந்து நம்மை தடுக்கும். அந்த நாள் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. என்னுள் இருந்த எல்லா அச்சங்களும் நீங்கின. நான் இப்போது இஸ்லாத்திற்கு மாறவில்லை என்றால் என்னால் எப்போதும் மாற முடியாது என்று தோன்றியது. இந்த பொருள்வாத உலகின் சிக்கல் களுக்குள்ளேயே நான் சிக்கிக் கொண்டிருந் திருப்பேன்.

எனது இந்த முடிவு என்னுடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு தெரியாமல் இருந்தா லும் நிச்சயமாக ஒரு நாள் இன்ஷா அல்லாஹ் அவர்களிடம் நான் தெரிவிப்பேன். அப்போது எனது இந்த முடிவை அவர்கள் மதிப்பார்கள் என்று நம்புகிறேன். அல்ஹம்துலில்லாஹ்!

நான் இப்போது ஒரு முஸ்லிம். அல்குர் ஆனையும், முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களையும் முழுமையாக அறிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். தினமும் ஐந்து வேளை தொழுகின்றேன். இன்ஷா அல்லாஹ் இனி என் வாழ்வில் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வழியில் முழுமையாக நடப்பேன்.

எனது இந்த முடிவில் நான் உறுதியாக இருக்கவும், மேலும் பலமாக இருக்கவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன். அஸ்ஸலாம்!

ஆதாரம் : https://www.islamreligion.com

**- அஷ்ரப் அலீ**






18-8-2022 அன்று மேட்டுப்பாளையத்தில் "கஷ்மீரில் பாதி விதவைகள்" கருத்தரங்கம் சிறப்பாக நடந்து முடிந்தது.

தொடர்



# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

*ஆகஸ்ட் மாத தொடர்ச்சி....*

*ஆயினும் காவல்துறை இடைமறித்து கேட்ட சாட்டிலைட் போன் லஷ்கரே தொய்பா இயக்கத்தை சேர்ந்தவருடையது தான் என்பதற்கான எந்த விதமான தீர்க்கமான சாட்சியங்களும் இல்லை.*

## 21) அல்பத்ர் தீவிரவாதிகள் 11 வருடங்களுக்கு பின்னர் விடுதலை

*இர்ஷாத் அலி என்பவரும் மோரிஃப் கமர் என்பவரும் டெல்லி காவல்துறை சிறப்பு பிரிவினருக்கும் ஐ.பி எனப்படும் மத்திய உளவுத்துறையினருக்கும் 2001ஆம் ஆண்டு முதல் தகவல் ஒற்றர்களாக பணியாற்றி வந்தனர். டெல்லி காவல்துறை சிறப்பு பிரிவினருக்கும் ஐ.பி எனப்படும் மத்திய உளவுத்துறையினருக்கும் இவர்களுக்குமான உறவு 2005ம் ஆண்டு வாக்கில் கசந்துபோனது.*

*ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் கோரிக்கையின்படி இவர்கள் காஷ்மீர் கிளர்ச்சியாளர்கள் இயக்கத்தில் ஊடுருவ மறுத்ததே இதற்கான காரணம். டிசம்பர் 2005 இல் இந்த இரண்டு பேரும் காணாமல் போனார்கள். உள்ளூர் காவல் நிலையத்தில் இவர்களின் உறவினர்களால் காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்காக புகாரும் இந்தியாவின் குடியரசு தலைவர் உட்பட பல உயர் அதிகாரிகளுக்கு டெலிகிராம்களும் அளிக்கப்பட்டன.*

*9, பிப்ரவரி, 2006 அன்று சிறப்பு பிரிவு காவல்துறை அலி மற்றும் கமரை, அவர்கள் ஜம்முவில் இருந்து திரும்பும் போது கைது செய்ததாகவும், அவர்கள் அல் பத்ர் இயக்க போராளிகள் என்றும் அவர்களிடமிருந்து ஆர்.டி.எக்ஸ், டெடனேட்டர்கள் மற்றும் சைனா மாடல் கைத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாகவும் கூறியது.*

*மோரிஃப் கமரின் சகோதரர் டெல்லி உயர் நீதிமன்றத்தில் இவ்வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற கோரி மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனு நிலுவையில் இருந்த நிலையில் சிறப்பு பிரிவினர் விசாரணை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். ஆனால் உயர்நீதிமன்றம் இவ்வழக்கில் ஏதோ பிரச்னை இருப்பதை மோப்பம் பிடித்து இவ்வழக்கை சி.பி.ஐ ஆழமாக விசாரணை நடத்த உத்தரவிட்டது.*

*நவம்பர் 2008இல் சி.பி.ஐ. வழக்கின் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது. அதில் டெல்லி சிறப்பு பிரிவு அதிகாரிகளுக்கும் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை அதிகாரிகளுக்கும் உளவு பார்த்து தகவல் தந்து கொண்டிருந்த அலி மற்றும் கமருக்கு எதிராக அவர்கள் ஒரு போராளிகள் குழுவில் சேர்ந்து உளவு பார்க்க மறுத்த காரணத்திற்காக பொய்யான வழக்கு பதியப்பட்டுள்ளது என்ற தீர்மானத்திற்கு சி.பி.ஐ. வந்திருந்தது. இதனை உறுதிப்படுத்தும் கைபேசி அழைப்பு விவரங்களின் பதிவுகளையும் சமர்ப்பித்தது. அத்துடன் தப்பிழைத்த சிறப்பு செல் அதிகாரிகள் மற்றும் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைத்தது.*

*எனினும், விசாரணை நீதிமன்றம் அலி மற்றும் கமரை சி.பி.ஐ–இன் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இவ்வழக்கில் இருந்து விடுவிக்க மறுத்துவிட்டது. அது முழு விசாரணையை நடத்தியது. அதுவும் சிறப்பு பிரிவினர் தாக்கல்*

செய்த குற்றப்பத்திரிகையின் அடிப்படையில். இறுதியாக அது டிசம்பர் 2016–இல் அந்த இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங் கியது. ஆனால் அந்த இருவரின் மதிப்புமிக்க 11 ஆண்டுகள் வீணாக துடைத்து அழிக்கப்பட்டு விட்டது.

### 22. விடுதலை போதுமா? நீதிமன்றம் நற்சான்றிதழ் வழங்குகிறது, சமூகம் வழங்குவதில்லை

துரதிருஷ்டவசமாக, விடுதலை செய்யப்பட்டு விட்ட பின்னரும், இந்த அப்பாவி இளைஞர் களின் வாழ்க்கை மற்றவர்களின் வாழ்க்கையை போன்று இருப்பதில்லை. காரணம் இந்த சமூகம் அவர்களை சந்தேகத்துடனேயே நோக்குகிறது. குற்றம் சாட்டப்பட்டு விடுதலை செய்யப்பட்ட வர்களின் வாழ்க்கை விடுதலைக்கு பின்னர் இயல்புக்கு திரும்பிவிடும் என்று மக்கள் சொல்வது சுலபம். அது உண்மையல்ல. ஒருமுறை அவர்கள் காவல்துறையினரால் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்ட பின்னர் இந்த சமூகம் அவர்களை கிட்டத்தட்ட சமூக புறக் கணிப்பு செய்ய ஆரம்பித்து விடுகிறது. அவர் களின் நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் அவர்களை விட்டு ஒதுங்கி தங்கள் முதுகை காட்ட ஆரம்பித்து விடுகின்றனர். அவர்களை அந்த வழக்கில் இருந்து விடுவித்த பின்னரும் அல்லது விடுதலை செய்த பின்னரும் இந்த நிலை மாறுவதில்லை. அவர்களுக்கு வேலை கிடைக் காது. இதன் காரணமாக கடுமையான சமூக, பொருளாதார பிரச்னைகளை எதிர் கொள்கி றார்கள். தீவிரவாதம் எனும் களங்கம் அவர்கள் வாழ்க்கை முழுதும் அவர்களை வேட்டையாடு கிறது. நீதிமன்றம் அவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கிய போதிலும் இந்த சமூகம் வழங்குவ தில்லை.

### 23. அப்பாவி முஸ்லிம் இளைஞர்களும் அவர்களின் குடும்பத்தினரும் எப்படி ஈடு செய்யப்பட வேண்டும்?

பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு ஈடு செய்யவோ அல்லது அவர்களின் மறுவாழ்வுக் காகவோ எந்த திட்டமும் செயல்முறைகளும் அரசாங்கத்திடம் கிடையாது. மெக்கா மஸ்ஜித், ஹைதராபாத் போன்ற சில வழக்குகளில் பாதிகப்பட்டவர்கள் சில இழப்பீடுகளை தற்காலிகமாக பெற்றுள்ளார்கள். அதுவும் சில சமூக நல நிறுவனங்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களின் கடுமையான முயற்சிக்கு பின்னர் பெற்றுள்ளார்கள். ஆனால் இது போதுமானதா? பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தார்கள் அடைந்த வலியையும் வேதனை யையும் எப்படி அரசாங்கம் ஈடு செய்யும்? சில இலட்சங்கள் இதனை சரி செய்து விடுமா? அவர்களுக்கு பல மாதங்கள் நரக வேதனையை வழங்கிய காவல்துறை அதிகாரிகளை பற்றி என்ன சொல்வது? சட்டத்தை, மனித உரிமை களை, சமூக சுதந்திரத்தை காற்றில் தூக்கி தூர எறிந்துவிட்டு கண்மூடித்தனமாக, தாராளமாக இவர்களை காவல்துறை காவலுக்கு அனுப்பி வைத்த நீதித்துறையை பற்றி என்ன சொல்வது? திரைச்சீலைக்கு பின்னால் மறைந்து இருந்து கொண்டு காவல்துறை மீதும் நீதித்துறை மீதும் ஆளுமை செலுத்தி தாங்கள் செய்ததையே இவர்களையும் செய்ய வைக்கும் கண்ணுக்கு தெரியாத சக்திகளை பற்றி என்ன சொல்வது? பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனுபவித்த மன ரீதியான, உடல் ரீதியான, பண ரீதியான, சமூக ரீதியான, உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கு இந்த அரசாங்கம் ஓரளவிற்கு தரக்கூடிய இழப்பீடு என்னவென்றால் போதுமான அளவிற்கு அவர்களுக்கு பொருளா தார உதவிகளும் புனர்வாழ்விற்கான உதவிகள் செய்வதுடன் இவ்வழக்குகளை மறு விசாரணை செய்வதும், உண்மையான குற்றவாளிகளை சட்டத்தின் முன்னர் நிறுத்துவதும் அந்த உண்மை குற்றவாளிகளை வேண்டுமென்றே பாதுகாத்து அப்பாவிகளை இவ்வழக்கில் சிக்க வைத்த காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு வழக்கு தொடர்வதும் தான்.

### 24. தொடர்ச்சியான விடுதலைகள், உண்மை குற்றவாளிகளின் தீவிர கவலைக்கான காரணம்

இந்த விடுதலைகள், மிக அதிகமான கால தாமதத்திற்கு பின்னர் தான் நடந்தேறின என்ற போதினும் பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இது ஒரு கொண்டாட்டத்திற்கான நிகழ்வு. ஆனால் இந்த விடுதலைகள் உண்மையான குற்றவாளிகளுக்கும் சதிகாரர்களுக்கும் அதாவது ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள




அதன் கைக்கூலிகள், பிராமணிஸ்ட் குழுக்களுக் களிடம் கவலைகளை ஏற்படுத்தின. அடுத்தடுத்து கொடுக்கப்படும் இந்த விடுதலைகள் இதற்கு முன்னர் நடத்தப்பட்ட விசாரணை குறித்து மிகப்பெரிய சந்தேகங்களை எழுப்பிவிடும்.

இதற்கு முன்னர் அஜ்மீர் ஷரீஃப், மக்கா மஸ்ஜித், சம்சவ்தா எக்ஸ்பிரஸ் மற்றும் மாலே கான் 2006 வழக்குகளில் நடந்தது போன்று மறுவிசாரணை ஒரு சுதந்திரமான நிறுவனத்தின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை உருவாக்கி விடும். அவ்வாறு மறுவிசாரணை நடத்தப்பட்டால் நாடெங்கும் நடந்த குண்டு வெடிப்புகள், அந்த பழிகளை முஸ்லிம்கள் மீது போடுதல் ஆகியவற்றிற்கு காரணமான இவர் களின் தேச அளவிலான தேசவிரோத சதித் திட்டங்களை வெளிப்படுத்தி விடும்.

## 25. தப்பிக்கும் வழி : எப்படியாவது குற்றவாளி என தண்டனை பெற்றுத்தருதல்

ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் இதர சதிகாரர்களுக்கும் இந்த குழப்பமான சூழ்நிலை யில் இருந்து வெளிவர இருந்த ஒரே வழி சில முக்கியமான குண்டுவெடிப்பு வழக்குகளில் இவர்கள் சிக்க வைத்த அப்பாவிகளுக்கு எப்படி யாவது தண்டனையை பெற்று தந்து விடுவது தான். நீதிமன்ற செயல்முறைகளை திரித்து, நீதிபதிகளுக்கு தவறாக வழி காட்டுவதன் மூலமே இதனை செய்ய இயலும். இவர்கள் இதனை மும்பை புறநகர் இரயில் குண்டு வெடிப்பு வழக்கு 2006, ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் குவியல் (அவுரங்காபாத்) வழக்கு 2006, ஜெர்மன் பேக்கரி வழக்கு (புனே) 2010, தில்சுக்நகர் (ஹைதராபாத்) குண்டுவெடிப்பு வழக்கு 2013 போன்ற வழக்கு களில் சிறப்பாக செய்தார்கள். அவர்கள் குற்றம் சாட்டிய நபர்களுக்கு தண்டனையை பெற்றுத் தந்தார்கள்.

அவர்கள் அப்படி என்ன செய்தார்கள்? அவர்கள், எப்படியோ அந்த நீதிமன்றங்களை குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து வற்புறுத்தி பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்கள், மீட்கப்பட்ட, கையகப்படுத்தப்பட்ட பொருட்களின் திரிக்கப்பட்ட பஞ்சநாமா, ஏற் கெனவே நம்பகத்தன்மை குறித்து குற்றசாட்டுகள் முன் வைக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்கள் அளித்த அறிக்கைகள், உருவாக்கப்பட்ட, பயிற்சி அளிக்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியங்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் உபயோகித்ததாக கூறி அவர்கள் மீது திணிக்கப்பட்ட பொய்யான ஈமெயில் ஐடிகள், கைபேசிகள் மற்றும் அவர்களின் அழைப்பு விவர பதிவுகள் போன்ற பொய்யான, புனையப்பட்ட சாட்சியங்களை




ஏற்றுக் கொள்ளும்படி செய்தார்கள்.

அதேபோல், அறிவியல் பூர்வமான மறுக்கவே முடியாத ஆதாரங்களான குற்றம் சாட்டப்பட்டவர்கள் எங்கிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தும் அவர்களின் உண்மையான கைபேசி அழைப்பு விவரங்கள், இரயில்களின் எண்கள் மற்றும் இரயில்களின் நேரங்கள் குறித்த இரயில்வே துறையின் கணினி மயப்படுத்தப்பட்ட அட்டவணைகள் போன்றவற்றை நீதி மன்றங்கள் ஏற்றுக் கொள்ளாவண்ணம் செய்தார்கள். அதேபோல் புரியாத புதிராக நீதிமன்றங்கள் மிக முக்கிய ஆதாரங்களான அதிக அளவிலான ஆயுதங்களும், வெடிப்பொருட்களும் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், சில குண்டு வெடிப்புகள் நடந்த இடங்களில் கிடைக்கப்பட்ட சிம்கார்டுகளின் விவரங்கள், வெடி குண்டுகளை ஏற்றிக் கொண்டு சென்ற வாகனங்களை துரத்தி சென்றது, வழி மறித்து பிடித்தது போன்ற முக்கியமான பணிகளை மேற்கொண்ட அதிகாரிகளின் கைபேசி அழைப்பு விவர பதிவுகள், முக்கியமான கண்ணால் கண்ட சாட்சியங்களான இரயிலில் பயணித்த பயணிகள், டாக்ஸி டிரைவர்கள் போன்றவர்களின் கைபேசி அழைப்பு விவர பதிவுகள் போன்றவற்றை சமர்ப்பிக்க வலியுறுத்தவில்லை. இந்த உண்மைகள், நீதிமன்ற தீர்ப்புகளை குறித்து அலசும் அடுத்துவரும் 5 முதல் 8 வரையிலான அத்தியாயங்களில் விவரமாக விவாதிக்கப்பட்டுள்ளது.




## 26. வலதுசாரி தீவிரவாதிகள் தொடர்புடைய வழக்குகளில் தலைகீழ் கொள்கை – பலமான சாட்சியங்கள் இருந்த போதினும் விடுதலை

இதற்கு அப்படியே மாற்றமாக, புலனாய்வாளர்கள், அரசு தரப்பு வழக்கறிஞர்கள், நீதிமன்றங்கள் நேர்எதிர் கொள்கையை வலது சாரி இயங்கங்களான ஆர்,எஸ்.எஸ்., பஜ்ரங்தள், அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம் போன்ற இயக்கங்களின் நபர்கள் தொடர்புடைய வழக்குகளில்முன்னெடுத்தனர். அவ்வழக்குகளில்முக்கியமான சாட்சியங்கள் பதிவுகளில் கொண்டு வரப்படவில்லை அல்லது ஒருவேளை கொண்டு வரப்பட்டாலும் விசாரணையில் அவை முழுமையாக புறக்கணிக்கப்பட்டன. முஹம்மதியா மஸ்ஜித் (பர்பானி) குண்டுவெடிப்பு வழக்கு 2003, மெக்கா மஸ்ஜித் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு வழக்கு 2007 போன்றவை அத்தகைய வழக்குகள். அவை அத்தியாயம் 9 மற்றும் 10இல் விவாதிக்கப்பட்டுள்ளன.

– இன்ஷாஅல்லாஹ் அடுத்த இதழில்

ஆங்கிலம் : JOHN FEBBER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




**முன்னோட்டம் !**

*அன்பார்ந்த வாசகர்களே!*

இந்தப் பகுதியில் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் எப்படியெல்லாம் இஸ்லாத்தின் எதிரிகள் போர் தொடுத்து வருகின்றார்கள் என்பதை அவர்களின் சொற்களாலேயே சொல்லி வருகின்றோம்.

இதில், உலகில் இஸ்லாம் மீண்டும் தலையெடுத்துவிடாமல் இவர்கள் எப்படியெல்லாம் தடுத்து வருகின்றார்கள் என்பதை விரித்துரைத்தோம்.

இஸ்லாமிய ஆட்சி மீண்டும் வந்துவிடும் என்றொரு சூழல் துனிசியாவில் வந்தபோது அதனைத் தட்டிக் கழித்தார்கள். அதில் இவர்கள் எத்துணை கேவலமாக நடந்துகொண்டார்கள் என்பதைத் தெளிவாக தொகுத்துரைத்தோம்.

அதேபோல் அல்ஜீரியாவிலும் இவர்கள் ஆடிய ஆட்டங்களையும் தட்டிக் கவிழ்த்த இஸ்லாமிய ஆட்சியையும் விரித்துரைத்தோம்.

எகிப்தில் இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டு வந்த இஹ்வானுல் முஸ்லிமுன் இயக்கத்தவர்களை எப்படிக் கொலை செய்தார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

ஆகவேதான் நாம் அடித்துக் கூறினோம். இவர்கள், உலகில் எங்கும் இஸ்லாமிய ஆட்சி வந்திட விட மாட்டார்கள்.

காரணம், இஸ்லாமிய ஆட்சி பூமியில் எங்கேனும் வந்துவிட்டால், அதன் அருமைப் பெருமைகளை மக்கள் கண்டு கொள்வார்கள். அதன்பின் மக்கள் வேறு கொள்கைகளின் பக்கம் போக மாட்டார்கள். மக்கள் இஸ்லாத்தில் அணி அணியாக இணைந்திடுவார்கள்.

அதன் கொள்கைகள், அவற்றின் நடைமுறை திட்டங்கள் இவையெல்லாம் மனிதர்களிடையே ஓர் ஒப்பற்ற சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் சமூக வாழ்வில் நிலைநாட்டிக் காட்டிடும்.

நம் நாட்டின் தீண்டாமை ஒடுக்குமுறை



இவற்றால் அல்லுறும் மக்கள், அதேபோல் ஐரோப்பாவின் நிறவெறிக் கொள்கைகளால் நித்தம் நித்தம் செத்து மடியும் கறுப்பின மக்கள் இவர்களெல்லாம் இஸ்லாத்தில் இணைந்திடு வார்கள்.

மேலை நாடுகளில் உடைந்து உருக்குலைந்து போகும், சமுதாய வாழ்க்கை அவற்றால் நிம்மதி இழந்து நிலைகுலைந்து நிற்கும். மக்க ளெல்லாம் இஸ்லாத்தில் குடும்ப அமைப்பின் பக்கமும் ஷரீஅத் சட்டங்களின் பக்கமும் விரைந்து வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதனால் மொத்த ஐரோப்பாவும் இஸ்லாமிய மயமாகிவிடும். இதனை உணர்ந்துதான், அமெரிக் காவின் உளவுத்துறை, ஷரியா அமெரிக்காவை அச்சுறுத்தும், மிகப்பெரிய ஆபத்து என அறிக்கை சமர்ப்பித்தது.

அமெரிக்கா உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு எனவும், அது உலகெங்கும் ஜனநாயகத்தை பரப்பிடுவதையும், நிலை நாட்டுவதையும், இலட்சியமாகக் கொண்டதாகவும் காட்டிக் கொள்கின்றது.

இஸ்லாம் தலையெடுத்து, தழைத்து நிலை நாட்டிடப்படுமேயானால், அமெரிக்காவின் ஜனநாயக பம்மாத்துக்கள் எடுபடமாட்டா!

இதையும் அமெரிக்காவின் உளவுத்துறை சமர்ப்பித்த 'டீம்-B' என்ற அறிக்கையில் அமெரிக்காவே சுட்டிக் காட்டியுள்ளது. 'டீம்-B' அறிக்கை இஸ்லாத்தையும், ஜனநாயகத்தையும் ஒப்பிட்டுப் பேசும்போது, இப்படிக் கூறிற்று...

Islam is more than Democracy இஸ்லாம் ஜனநாயகத்தைவிட விசாலமானது. எந்த வகையில் பார்த்தாலும் இஸ்லாமே வெல்லும். அதனால் அதனை வீழ்த்திக் காட்டிட அத்தனை வழிமுறைகளையும், பின்பற்றுகின்றார்கள். ஆயிரக்கணக்கான சதித்திட்டங்கள், அத்தனை யும் ஆராய்ச்சி என்ற பெயரில் கோடிக்கனக் காணப் பணம் திரட்டப்பட்டு செலவு செய்யப்படு கின்றது. ஆயிரக்கணக்கான படை வீரர்களும், அதிநவீன ஆயுதங்களும் பயன்படுத்தப்படு கின்றது.

அப்பாவிகள், அவர்கள் முஸ்லிம்கள் என்பத னாலேயே கொன்றொழிக்கப்படுகின்றார்கள். கோடிக்கணக்கான மக்கள் தங்கள் வசிக்கும் மிடங்களைவிட்டு விரட்டப்படுகின்றார்கள். அவர்கள், தங்கள் சொந்த நாட்டிலும் அண்டை நாடுகளிலும் அகதிகளாக ஆக்கப்படுகின்றார்கள்.

இந்த கொடுமைகளையும், குரூரங்களையும் நியாயப்படுத்திட பொய்களை புதிது, புதிதாகக் கண்டுபிடித்துப் பிரச்சாரம் செய்து கொண்டே இருக்க வேண்டியதிருக்கின்றது. அதை 24x7 செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அவற்றின் தொடர்ச்சியை இனி காண்போம்,

ஜான் பெஃப்பர் எழுத்துக்கள் வழியாக.

இன்ஷா அல்லாஹ்.
சிலுவைப் போர் 2.0 தொடரும்.





# இந்தியாவின் நீதித்துறையை பெண்கள் நம்பலாமா?

## பில்கிஸ்பானு வழக்கு!

**“பில்கிஸ் பானுவை கற்பழித்து, அவருடைய குழந்தைகளைக் கொலை செய்து, கைக் குழந்தையை வெட்டிப் போட்டு, இப்படி கொலை செய்த குரூர குற்றவாளிகளை குஜராத் அரசு விடுதலை செய்தது தவறு. முன்னாள், இன்னாள் ஆளுமைகள், நீதிபதிகள் 134 பேர் உச்ச நீதிமன்றத்திற்கு எழுதிய கடிதம்.”**

### குற்றவாளிகளை மீண்டும் சிறையிலடைக்க வேண்டும் எனப் பிரகடனம்

*2002 குஜராத் இனப்படுகொலைகளின் போது நடந்த மேற்சொன்ன குரூர குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை பிணந்தின்னும் குஜராத் அரசு தண்டனை குறைப்பு என்ற பெயரில் சிறையிலிருந்து வெளியே விட்டது. இவர்களில் பெரும்பாலானோர் பிராமிணிஸ்ட்டுகள் என்கின்றார் ஒரு பா.ஜ.க. சட்ட மன்ற உறுப்பினர்.*

*மேலே நாம் குறிப்பிட்ட 134 பேரும் எழுதிய கடிதம் பின்வருமாறு...*

*“நாங்கள் இந்தக் கடிதத்தை உச்ச நீதிமன்றத்திற்கு ஏன் எழுதுகின்றோம் என்றால், நடந்து விட்ட குஜராத் அரசு செய்த மிகப்பெரிய தவறை திருத்திடும் அதிகார எல்லை உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே இருக்கின்றது என்பதால்தான்! குஜராத் அரசு செய்திருப்பது சாதாரண தவறல்ல, குரூர மான இமாலயத் தவறு. இதனால் நாங்கள் நொந்து போனோம். வெட்கப்படுகின்றோம். குற்றத்தில் ஈடுபட்டவர்கள் அழுத்தமான அரசியல் செல்வாக்கு உடையவர்கள். அதனால் இந்த வழக்கை குஜராத் காவல்துறையைக் கொண்டு விசாரிக்காமல் மும்பையைச் சுற்றி மத்திய புலனாய்வுத் துறையைக் கொண்டு விசாரித்தார்கள்.*

*அதேபோல் வழக்கை குஜராத் நீதிமன்றங்களில் நடத்தினால் நீதி நிச்சயமாக கிடைக்காது என்பதனால் வழக்கை மராட்டிய மாநிலத்தில் நடத்தினோம். இத்தனை பெரிய நகர்வுகளுக்குப் பின்னால்தான் நீதியைப் பெற்றோம், குற்றவாளிகளைத் தண்டித்தோம். இந்தக் கொலை பாதகர்களை விடுவித்திட அமைக்கப்பட்ட 10 பேர் கொண்ட ஆலோசனை குழுவில் ஐந்து பேர் பாரதீய ஜனதா கட்சியின் உறுப்பினர்கள். மீதிபேர் இதுபோன்ற குழுக்களில் தாமாகவே (Ex Officer)*

இடம் பெறுவார்கள். இது அந்தக்குழுவின் நடுவுநிலை அற்றது என்பதைக் காட்டுகின்றது. அதன் முடிவுகள் பாரபட்சம் கொண்டவை என்பதால் பளிச்சென அறிவிக்கின்றது.

**“இப்படிப்பட்ட பட்டவர்த்தனமான, அநியாயங்கள் - இந்தக்குரூரமான கொலைகாரர்களின் விடுதலையில் நடத்திருப்பதால், அந்த முடிவையும், அதைத் தொடர்ந்த ஆணையையும் ரத்துச் செய்தி வேண்டும். அவர்களை மீண்டும் சிறையிலடைத்திட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனை காலத்தை அவர்கள் நிறைவு செய்திட வகை செய்திட வேண்டும்.”**

**குஜராத் அரசின் இந்த முடிவு பில்கிஸ் பானுவையும் அவரது குடும்பத்தையும் மட்டும்தான் மீளாத்துயரில் ஆழ்த்தும் என்றில்லை. மாறாக, நாடெங்கிலும் உள்ள பெண்களின் மனதில் பாதுகாப்பற்ற நிலையை, பீதியை ஏற்படுத்தும்.**

இந்தக் கடிதத்தில் 134 பேர் கையெழுத்திட்டிருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள்

1. **அருணா ராய்**
2. **ஹர்ஷ் மந்திர்** - மனித உரிமை ஆணையர்
3. **ஜிலிபோ ரொபைரோ**
   முன்னாள் மும்பை காவல்துறை ஆணையர்
4. **G.K. பிள்ளை**
   முன்னாள் உள்விவாகரத்துறை செயலாளர்
5. **K. சந்திரசேகர்**
   முன்னாள் அமைச்சரவை செயலாளர்
6. **நஜீங்சங்** முன்னாள் டெல்லி இணை கமிஷனர்
7. **சிவ சங்கர் மேனான், சுஜாதா சிங்**
   முன்னாள் வெளிவிவகாரத்துறை செயலாளர்கள்

இந்தக் கடிதம் அரசியல் அமைப்பு முறைமை குழு Constititution Conduct Group என்ற பெயரில் கீழ் அனுப்பப்பட்டுள்ளது.

**பில்கிஸ் பானு வழக்கில் - தண்டனை வழங்கிய நீதிபதியின் ஆதங்கம்**

பில்கிஸ் பானு வழக்கை தீர விசாரித்து இந்த பிராமிணிஸ்ட்டுகளை தைரியமாக தண்டித்த நீதிபதி UD Salvi - யி.டி. சல்வி அவர்கள். வழக்கறிஞர்களின் குழுமம் (Bar) அந்த வழக்கை விசாரணைக் கொடுத்துள்ள அமர்விலும் (Bench) இப்படிக் கூறினார்.

“மிகவும் கேவலமான ஓர் முன்மாதிரியை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இது முற்றிலும் தவறானது. நான் கூறுகின்றேன், இதுபோல் கற்பழிப்பு, கொலை ஆகிய வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள், இதேபோல், தண்டனை குறைப்பைக் கேட்பார்கள்.

**6000 பேர் கையெழுத்திட்டக் கடிதம்**

6000 உழைக்கும் மக்கள், சமுதாய ஆர்வலர்கள், பெண்கள் நலம் விரும்பிகள் கையெழுத்திட்ட பிரிதொரு கடிதமும் உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் பலப் பெண்களும் கையெழுத்திட்டுள்ளார்கள்.

அந்தக் கடிதத்தில் குரூரமான பல குற்றங்களைச் செய்த இந்தக் குற்றவாளிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளது, பெண்களுக்கு நீதித்துறையின் மேல் உள்ள நம்பிக்கையை தகர்த்துவிட்டது.

நீதி பரிபாலத்தின்மேல் மீண்டும் பெண்கள் நம்பிக்கையை பெற்றிட வேண்டும் என்றால், இந்த 11 பேரையும் மீண்டும் சிறையிலடைக்க வேண்டும். அவர்கள் தண்டனையை நிறைவு செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் சிறையிலிருக்க வேண்டும்.

**வெளிநாடுகளிலிருந்து கண்டனம்**

United States Commission of International Religious Freedom - அமெரிக்காவின் சர்வதேச மத சுதந்திர ஆணையம் இப்படி 11 குரூர குற்றவாளிகளை சிறையிலிருந்து விடுவித்ததைக் கண்டித்துள்ளது. அது, இது இந்தியாவில் நீதி பரிபாலனம் படுபாதாளத்தில் வீழ்ந்து போனதையே இது காட்டுகின்றது எனக் கண்டித்துள்ளது.

(Travest of Justice) PUCL என்ற மனித உரிமைகளுக்கான மக்கள் குழுமமும் இதனைக் கண்டித்துள்ளது.

பேபக் குழும் - Babaak Collective என்ற




பெண்களின் அமைப்பும், அகில இந்திய உழைக்கும் பெண்களின் கழகமும் இப்படி 11 குரூர குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்துள்ளது.

இந்தப் பெண்களின் அமைப்புகளெல்லாம் "இனி பெண்கள் இந்திய நீதித்துறையை நம்பிட இயலுமா?" எனக் கேள்வி கேட்டுள்ளார்கள்.

(Source : Sabrang India 20, Aug-2022)

பாரதீய ஜனதா கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர், இதில் தண்டிக்கப்பட்ட வர்கள் எல்லோருமே பிராமிணிஸ்டடுகள் எனச் சொல்லியுள்ளார்.

இந்தியாவில் பிராமிணிஸ்ட்டுகள், கற்பெண்ணைக் கற்பழிப்பார்கள். குழந்தைகளையும், சிசுக்களையும் கொலை செய்வார்கள் என்பது எதுவும் புதிய செய்தி அல்ல. அவர்கள் குண்டுகளை வைத்துவிட்டு லாவகமாக முஸ்லிம்களின் மேல் பழியைப் போட்டு, முஸ்லிம்களைத் தூக்கிலும் போட முடியும் எனக் காட்டியுள்ளார்கள். இதுகுறித்து விரிவான தகவல்களுக்கு படிக்கவும் "பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்" - மூலம் எஸ்.எம். முஷ்ரிஃப் முன்னளர் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், மராட்டிய மாநிலம். வெளியீடு "வேர்கள் பதிப்பகம்".

இங்கே மிகப்பெரிய அதிசயம் என்ன வெனில், இவர்களுக்கெதிராக, சாட்சியங்களையும், ஆவணங்களையும் திரட்டியதுதான். அதுவும் மோடி குஜராத்தில் முதலமைச்சராக இருந்திடும் போது! என்னே திறமை. பின்னர் இவர்களின் ரவுடித்தனம் அரசியல் பின்னணி (பா.ஜ.க.) ஆகியவற்றையெல்லாம் கடந்து குற்றங்கள் நீருபித்தது. பிரிதொரு இமாலய சாதனை.

நீதி வழங்கிய நீதிபதியை இவர்கள் விட்டு வைத்திருப்பது இன்னொரு அதிசயம்.

**பில்கிஸ் பானுவும், அவருக்குப் பக்கத் துணையாக நின்ற டீஸ்டா செட்டல்வாட், ஓரிரு பெண்கள் அமைப்புகள் இவையெல்லாம் சாதித்திருப்பது அனைத்து அதிசயங்களையும் வெல்லும்.**

**இவர்கள், இந்தக் குரூர குற்றவாளிகளை விடுதலை செய்தது மட்டுமல்ல டீஸ்டாவை சிறையிலும் அடைத்து விட்டார்கள். இந்த அத்தனை அநியாயங்களிலும் உச்ச நீதிமன்றம் உடந்தையாக நின்றது, நிற்கின்றது.**

**- MGM**






# இந்தியத் தேசியக் கொடியை வடிவமைத்த சுரையா..!

## மறைக்கப்பட்ட உண்மைகள்!

ஒருவரின் உழைப்புக்கான அங்கீகாரம் அவருக்கு மறுக்கப்படுவது, தாய்க்கு குழந்தையின் உரிமை மறுக்கப்படுவதற்குச் சமம். நம் தேசியக் கொடியை வடிவமைத்த சுரையாவும், அப்படிப் பறிகொடுத்த தாயைப்போலதான் அதற்கான அங்கீகாரம் இழந்தவரானார். தேசியக் கொடி - நம் மாபெரும் கவுரவம். அதனால்தான் அதைக் காக்க உயிரைவிட்டான் சென்னிமலை என்னும் கிராமத்தில் பிறந்த நெசவாளி குமரன். 2018-ம் ஆண்டு குடியரசு தினத்தன்று, நிலவில் இந்திய மூவர்ணக் கொடியை நட மாபெரும் திட்டம் ஒன்றை தீட்டிவருகிறது இஸ்ரோ.

அந்தப் பெருமை வாய்ந்த கொடியை வடிவமைத்தவர் என்னும் பெருமை, இந்திய வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியது. இன்று அந்தப் பெருமைக்கு உரியவராக இருப்பவர், பிங்கலி வெங்கையா. ஆனால், இந்தப் பெருமையில் சுரையா என்ற பெண்ணுக்குத்தான் முக்கிய பங்கிருக்கிறது என்ற செய்தி கடந்த சில வருடங்களாக, சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. தெலுங்கானாவைச் சேர்ந்த பாண்டுரங்க ரெட்டி என்பவர், இந்திய தேசியக் கொடியின் வரலாற்றை ஆராய்ந்து வெளியிட்டிருக்கும் திடுக்கிடும் தகவல்களே இதற்கு அடிப்படை.

''இந்திய தேசியக்கொடி ஒன்றும் ஒரு சில தினங்களில் வடிவமைக்கப்பட்டது அல்ல. பல்வேறு ஆண்டுகளாக, பல பரிணாமங்களைச் சந்தித்து உருவானதுதான் நம் மூவர்ணக் கொடி. ஆங்கிலேயே அரசாங்கத்தின் கொடியைப் புறக்கணித்து, தனி சுதேசிக் கொடி வேண்டுமென்று 1916ல் தொடங்கியது நம் தேசியக் கொடிக்கான முதல் புரட்சி. ஒவ்வோர் இடத்திலும் பல்வேறு கொடிகள் பயன்படுத்தப்பட்டாலும், 1921ல் தான் சிவப்பு, பச்சை நிறங்கள் கொண்ட நம் தேசியக்கொடி முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டது. அந்தச் சமயத்தில் பிங்கலி வெங்கையா, தேசியக்கொடிக்காக 30 வடிவமைப்புகளை காங்கிரஸிடம் கொடுத்துள்ளார்.

இந்தியாவிலுள்ள மதங்களைக் குறிப்பதாக இருந்த நிறங்களை, உணர்வுகளின் குறியீடாக மாற்றி, காந்தி அறிவுறுத்திய அமைப்பில் கொடியை

உருவாக்கியுள்ளார் வெங்கையா. உண்மையில் காந்தி மற்றும் லால் ஹன்ஸ்ராஜ் ஆகியோரின் ஆலோசனையை அவர் செயல்படுத்த மட்டுமே செய்தார் வெங்கையா" என்று கூறுகிறார் பாண்டுரங்கன் ரெட்டி.

''காங்கிரஸின் வரலாற்றைப் 870 பக்க புத்தகமாக எழுதியுள்ள மூத்த காங்கிரஸ்காரர் பட்டாபி சீதராமையா, தனது புத்தகத்தில் ஓர் இடத்தில்கூட, வெங்கையாவின் பெயரைக் குறிப்பிடவில்லை. 1957-ம் ஆண்டு இந்திய சுதந்திரப் போரின் நூற்றாண்டு விழா புத்தகத்தை எழுதிய தாராசந்தும், வெங்கையாவின் பெயரைக் குறிப்பிடவில்லை'' என்றெல்லாம் குறிப்பிடுகிறார் பாண்டுரங்க ரெட்டி.

''ராஜ்ஜியத்தின் இறுதி நாட்கள் என்ற பெயரில், டிரெவர் ராயல் என்ற ஆங்கில வரலாற்று ஆசிரியர், நம் தேசியக்கொடியை வடிவமைத்தவர் பற்றிய குறிப்பொன்றை தன் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அந்தக் குறிப்பில், இன்று நம் கொடியிலிருக்கும் அசோகச் சக்கரம், ஹைதராபாத்தைச் சேர்ந்த சுரையா தயாப்ஜி என்ற இஸ்லாமியப் பெண்மணியால் வடிவமைக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆம்! இந்திய தேசியக்கொடியின் வடிவமைப்பில் ஒரு பெண்ணுக்குமா பெரும் பங்கிருக்கிறது. இந்தியாவின் சுதந்திரம் உறுதியான சமயம், 'சுதந்திர இந்தியாவின்' கொடியை அறிமுகப்படுத்த காங்கிரஸ் தலைவர்கள் திட்டமிட்டனர். அந்தச் சமயம் இருந்த கொடியில், இன்றைய அசோக சக்கரத்துக்குப் பதிலாக காந்தியின் ராட்டையே இருந்தது. அப்போது பிரதமரின் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த ஐ.சி.எஸ் அதிகாரி பத்ருதின் தியாப்ஜி, ஒரு கட்சியின் கொடி தேசிய கொடியாக வேண்டாமென்று ஆலோசனை கூற, பிரதமர் நேருவும் அதை ஏற்றுக்கொண்டுள்ளார். அதனால், அதற்குப் பதில் அசோகச் சக்கரத்தை வைத்து கொடியை வடிவமைத்துள்ளார் பத்ருதுனின் மனைவி சுரையா.

ஆனால், காந்தி அதற்கு உடனடியாக ஒப்புதல் தரவில்லை. 'அசோகரின் சக்கரம் இந்து - இஸ்லாம் ஒற்றுமையைக் குறிப்பதால் அதுவே சரியாக இருக்கும்' என்று கூறியதால், சுரையாவின் வடிவமைப்பை அவர் அரை மனதோடு ஏற்றுக்கொண்டதாகவும் அந்தப் புத்தகத்தில் டிரெவர் எழுதியிருக்கிறார்'' என்று பாண்டுரங்க ரெட்டி குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினத்தன்று நேருவின் காரில் பறந்த தேசியக் கொடியை வடிவமைத்தது சுரையா தான் என்றும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சுரையாவின் பங்கு இத்தனை ஆண்டுகளாக மறைக்கப்பட்டுள்ளது. சுரையாவுக்கான அங்கீகாரம் மறுக்கப்பட்டுள்ளது. ஒருவேளை சுரையா காங்கிரஸை சேர்ந்தவராக இருந்திருந்தால் அவரது பெயரும் வரலாற்றில் இடம்பெற்றிருக்குமோ என்னவோ!

பெண் என்பதால் அவருக்கான அங்கீகாரம் மறுக்கப்படவில்லை என்பதாகச் சொல்லலாம். ஆனால், பெண்ணாக இருந்ததால்தானோ என்னவோ அவர் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. பெண் என்பவளுக்குத்தான் எல்லாம் கடமை என்ற கட்டத்துக்குள் வந்துவிடுகிறதே. இன்டீரியர் டிசைனர், குக், நியூட்ரிஷியன் போன்ற துறைகளில் சாதிப்பவர்கள் பலர். ஆனால் அதையெல்லாம் குடும்பத் தலைவியாய்ச் செய்பவளுக்கு ஏது அங்கீகாரம்? அது அவள் கடமை தானே? அவளும் அங்கீகாரத்தை எதிர்பார்க்காத, கடமையைச் செவ்வன செய்யத் தெரிந்தவளாகவே வாழ்ந்துபழகிவிட்டாள்.

ஆனால் பெண்களே, எதுவும் கடமை மட்டுமாக முடிந்துவிடாது. உங்கள் மகனின் வெற்றியில், நீங்கள் அதிகாலை 4 மணிக்கு எழுந்து போட்டுக்கொடுத்த காபிக்கும் பங்கிருக்கிறது. நீங்கள் பெருமையைத் தேடிப்போக வேண்டாம். ஆனால் உங்களுக்கான அங்கீகாரத்தை யாருக்காகவும், எதற்காகவும் இழக்காதீர்கள். உங்கள் உழைப்பிற்கான பலனை நீங்கள் அனுபவித்தே தீரவேண்டும். இல்லையேல், சுரையாவைப் போல் மறக்கப்பட்டவர்களாகி விடுவீர்கள்!

**உங்கள் வெற்றிக்கு கைதட்டல்கள் தர இங்கு யாரும் இல்லாவிட்டாலும், காலம் இருக்கிறது. அது நிச்சயம் பதில் சொல்லும்... இன்று சுரையாவுக்கு கூறியதுபோல!**

- பிரதீப் கிருஷ்ணா

நன்றி - விகடன்

# நம்மை பிடித்துள்ள பிளேக்

**மௌலானா முகம்மதலி இரங்கூன் சோலியாப் பள்ளியில் 15-3-1929-ல் சொற்பொழிவாற்றி இரங்கூன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியான செய்தி.**

மௌலானா முகம்மதலி மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர். ஒருபொழுது காந்திஜி வெள்ளை யர்களை நோக்கி சொன்னார் உங்களுக்கு நான் பயப்பட மாட்டேன் காரணம் என்னிடம் இருசிங்கம் இருக்கிறதென்றார். அந்த சிங்கங்கள் மௌலானா முகம்மதலி, மௌலானா சவுக்கத்தலி என்றார்.

மௌலானா முகம்மதலி இரங்கூன் சென்றி ருந்த போது சோலியாப்பள்ளியில் முஸ்லிம்களை நோக்கி முஸ்லிம்கள் இன்றுபோல் கோடிக் கணக்கில் இல்லாத காலமொன்றிருந்தது. அந்த அருள்பெற்ற நாட்களில் முஸ்லிம்கள் சிலராக இருந்ததாலும் அவர்கள் உண்மை விசுவாசிகளா யிருந்தனர். ஹிஜரத்துக்கு முன் திரு நபி (ஸல்) அவர்களை உற்றாரும், உறவினரும், நாடும் எதிர்த்து நின்ற போது ஒருகைப்பிடி அளவினரே அன்னாரை பின்பற்றி நின்றனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் சொந்த மக்கள் மீது நம்பிக்கை இழந்தவர்களாக தாயிபுக்கு சென்று சத்தியப் பிரச்சாரம் செய்தார்கள்.

ஆனால் அங்கு அவர்கள் கல்லால் எறியப்பட்டு மக்களால் வசைபாடப் பட்டார்கள். நாயகம் (ஸல்) அவர்களின் இன்னலுக்குப் பின்னுள்ள வாழ்க்கையான அடுத்தகட்டத்தில் இஸ்லாமிய மாளிகையின் எல்லா வாயில்களின் வழியாகவும் மக்கள் ஆயிரக்கணக்கில் பிரவேசிப்பதை



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
களச்சல்

பார்க்கிறோம். இஸ்லாம் மக்களை கவர்ந்தது. தேசங்கள் வெற்றி கொள் ளப்பட்டது.

இன்று உங்களுடைய நிலை என்ன? ஏன் நீங்கள் கோடிக்கணக்கிலிருந்தும் இன்று அவல நிலையில் இருக்கின்றீர்கள்? ஒரு காலத்தில் உலகை வெற்றி கொண்ட நீங்கள் இப்போது அடிமையாய் இருக்கின்றீர்கள். ஈர்ப்பு சக்தியாக இருந்த உங்கள் மார்க்கம் இன்று அதன் பிடியிலிருந்து சிலர் விடுபட்டு செல்லுமளவுக்கு தளர்ச்சியடைந்து வருவதன் காரணம் என்ன?

ரஷ்யாவும் பிரிட்டனும் இருபெரும் வல்லரசாக விளங்குவது போல் இஸ்லாத்தின் உதயகாலத்தில் இவ்விதம் இரு வல்லரசுகள் இருந் தது. பேரீச்சம் பழத்தை புசித்து ஒட்டகப்பாலை அருந்தி ஈச்சம்பாயில் படுத்துறங்கிய ஆரம்பகால ஏழை முஸ்லிம்கள் அன்றைய வல்லரசான ரோமாபுரியையும் பாரசீகத்தையும் வெற்றி கொண்டனர். நாம் இஸ்லாத்தின் ஜீவனை இழந்து விட்டோம். மணியில்லா வெறும் உமி தான் நம்மிடம் இருக்கிறது. வெறும் வெளி அனுஷ்டானங்களை மேற்கொண்டிருக்கிறோம். ஈமானின் உறுதியை இழந்து விட்டோம். உதார ணமாக தொழுகை எடுத்துக் கொள்ளுங்கள். இஸ்லாமிய வணக்கமென்பது எவ்வித ஒழுங்கும் கட்டுபாடு மிக்கதுமென்பதை பார்க்க வேண்டும். அப்படியிருந்தும் அந்த இரண்டும் தான் இன்று நம்மிடமில்லை என்பதை நான் காண்கிறேன்.

தொழுகைக்காக நாம் நிலையில் நின்று அல்லாஹூ அக்பர் என்ற வார்த்தையை கேட்ட உடன் ஆண்டவனைதவிர மற்றெல்லாவற்றையும் உதறி தள்ளிவிட்டு ஊசி விழுந்தாலும் சத்தம் கேட்குமளவுக்கு அமைதி கொண்டு தோளோடு தோளாய் சிப்பாய்களைப் போல அணிவகுத்து நிற்கிறோம். இமாம் "அல்லாஹு அக்பர்" சொல்லாத வரை நாம் குனிவதில்லை. நிமிர்வது மில்லை. ஆனால் தொழுகை முடிந்த உடன்

நீங்கள் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டும் தள்ளி கொண்டு செல்வதும் கேலி செய்வதும் சரியா? இதுபோன்ற ஓர் அறிவிற்சிறிய பாவியை அணுகுவதற்காக நீங்கள் இவ்விதம அசவ்கரியங்களை மேற்கொள்வதைப் பார்க்க நான் வேதனையடைகிறேன். நம்முடைய தொழுகை நமக்களித்திருக்கிற கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் நாம் எப்பொழுதும் இழந்துவிடக்கூடாது என்பதை நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு மனிதன் உடற்பயிற்சி செய்வதை பார்த்தால் அது அந்த சமயம் அவனுக்கு ஏற்படக்கூடிய ஒருவித தெம்புக்காக வேண்டி அவன் அவ்விதம் செய்கிறானென்று நீங்கள் கருதுவதில்லை. மாறாக உடற்பயிற்சியிலிருந்து நீங்கள் உடல் உரம் பெறுவதாகவும் அதனை உங்களின் நித்திய வாழ்க்கையில் உபயோகித்து நலம் பெற எண்ணுகிறீர்கள். அதுபோலவே தொழுகையின் மூலம் நீங்கள் ஒழுங்கு கட்டுப்பாடென்ற குணாதிசயங்களைப் பெற்று அவற்றை உங்களின் தினசரி வாழ்க்கையில் செயல்படுத்தி வரவேண்டும். இந்தப் பயிற்சி நாளொன்றுக்கு 24 மணி நேரத்திலும் இப்லீசுடன் நீங்கள் செய்ய வேண்டியிருக்கும் போராட்டத்தை சமாளிப்பதற்காகும். தொழுகையின் போது நீங்கள் ஒருவருக்கு பக்கத்தில் ஒருவர் நின்று தோளோடு தோளாய் குனியவும் சுஜூது செய்யவும் உட்காரவும் செய்கின்றீர்கள் ஆனால் பள்ளிக்கு வெளியில் நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர் போன்று நடந்து கொள்ளவில்லையானால் இவ்விதம் தொழுகையில் நீங்கள் கடைபிடிப்பதால் என்ன பயன். நீங்கள் தொழுகையை முடிக்கும் பொழுது உங்கள் வலப்புறமும், இடப்புறமும் திரும்பி "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ் மதுல்லாஹ்" (இறைவனின் சாந்தியும் கிருபையும் உண்டாவதாக என வாழ்த்துகின்றீர்கள்.

சகோதர முஸ்லீமுக்கு உங்களின் தினசரி வாழ்க்கையில் வாக்காலும் செயலாலும் நன்மை நாடாவிடில் இவ்விதம் மொழிவதில் யாது பயன்? ஒரு உண்மையான முஸ்லிம் தன் சகோதர முஸ்லிமுக்கு தன் வாக்காலும் கையாலும் யாதொரு தீங்கும் செய்ய மாட்டான் என நாயகம் திருமேனி (ஸல்) நவின்றுள்ளார்கள். உண்மையில் அவ்விதம் நடக்கக்கூடிய முஸ்லிம்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? இஸ்லாத்தின் சகோதரத்துவமெங்கே? இஸ்லாம் கோரும் சமத்துவமெங்கே? இஸ்லாம் சொல்லும் அன்புமயமான மனிதவர்க்கமெங்கே? இஸ்லாம் உலகுக்களித்த பெரும் பேறு மனித சமத்துவமும், தெய்வீக ஏகத்துவமும் ஆனால் இவ்விரு கொள்கைகளும் நம் செய்கையில் செய்து காட்டுகிறோமா?

நபிகள் நாயகம் தம் இறுதி வேளையில் (நாட்களில்) தாம் நேரில் வந்து தொழுகையை நடத்தி வைக்க முடியாதிருந்த போது ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக்கை இமாமத் செய்ய சொல்லி இருந்தார்கள். ஒருநாள் அபூபக்கர் சித்தீக் அவர்கள் இமாமத் செய்யப்போகும் போது நபிஸல் பள்ளியில் நுழைந்தார்கள். உடனே தொழ ஆயத்தமாகியிருந்த சகாபாக்கள் நாயகம்ஸல் மிஹ்ராபுக்கு போக வழிவிட அபூபக்கர் ரலி ஒதுங்கி கொள்ளவும் கருதினார்கள். ஆனால் நாயகம் அபூபக்கர் ரலியை இமாமத் செய்ய பணிந்து தாங்கள் பின்னின்று தொழுதார்கள். இவ்வித முன்மாதிரியை நமக்கு நபி தந்தருளினார்கள்.

நான் துருக்கியில் கான்ஸ்டான்டி நோபிளில் ஹகியா சோபியா பள்ளிக்குபோன போது கலீபா தொழ பள்ளி ஹாலில் தனிமேடை நிர்மாணிக்கப்பட்டதை கண்டேன். கலீபாவுக்கு தனிமேடை தொழ, இமாம் தனி இவையெல்லாம் ஆரம்ப முஸ்லீம்கள் பின்பற்றிய முன் மாதிரியல்ல.

சகோதரர்களே! இன்று நாம் சிறு விசயங்களுக்கெல்லாம் சண்டையிட்டுக் கொள்வது நமது துரதிஷ்டமேயாகும். சிறிய விசயங்கள் மிகைப்படுத்தப்படுகின்றன. முடிவு முஸ்லிம்களுக்கிடையில் அதிகப் பூசல்களும் சண்டையும். நாம் இஸ்லாத்தின் உயிர் நாடியான விஷயங்களை புறக்கணித்து விட்டு உதவாக்கரை சிறிய ஆச்சாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறோம். இங்கு இரங்கூனிலும் நான் கேள்விப்படுகிறேன். சில கோஷ்டிகளுக்கிடையில் தொழுகைக்கு பின் துவா ஓத வேண்டுமா? கூடாதா? என் பதிலும் ஆண்டவன் பொய் சொல்வானா? சொல்ல மாட்டானா? என்ற பதிலும் தகராறுகள் ஏற்பட்ட தாம் - நாம் இவ்வித சிறு பிள்ளைத்தனமான காரியங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்திருப்பது உண்மையில் அவமானமாகும். தொழுகும் போது உங்களின் கைகளை நெஞ்சில் கட்டிக் கொள்ள வேண்டுமா?



அல்லது வயிற்றி கட்டிக் கொள்ள வேண்டுமா? "ஆமீன்" என்று இரைந்து சொல்ல வேண்டுமா? மெதுவாக சொல்ல வேண்டுமா? இஸ்லாத்தின் உயிர் நாடியான பிரச்சினைகள் பிரச்சினைகளாக இருக்கும் போது இப்படிப்பட்ட சில்லரை விசயங்கள் நம்மை ஆட்கொள்ளுகின்றன. நீங்கள் உண்மையிலேயே உங்களின் தைரியத்தையும் பலத்தையும் காட்டிக் கொள்ள விரும்பினால் உங்களுக்கு வேறு எதிரிகளில்லையா? உங்களின் போர் திறனை உபயோகிப்பதற்கு வேறு மைதானங்களில்லையா? உண்மை என்னவெனில் நீங்கள் கோழையாகி விட்டீர்கள். உங்களின் உண்மையான பலத்தை இழந்து விட்டீர்கள். உங்களை ஒவ்வொரு நாளும் ஆக்கிரமித்துக் கொண்டுவரும் பெரிய எதிரியை எதிர்க்க முனையாமல் இஸ்லாத்தின் காவலர்களென பாசாங்கு செய்கிறீர்கள்.

முஸ்லீம்கள் கான்ஸ்டான்டின் நோபிளை வாகைகூட சுல்தான் முகம்மது நுழைந்த போது கிறிஸ்தவ மதகுருமார் சொற்போர் நடத்திக் கொண்டிருந்தனர். தெய்வத்தன்மை மிகுந்த ஏசுவின் எச்சங்களான மலம் மூத்திரம் இவை பரிசுத்தமானதா? அசுத்தமானதா? என்ற விசயம் பற்றி பெரும் சர்ச்சை நடைபெற்றுக் கொண்டிருந்ததாம். இவ்விதமான விவாதங்கள் தாம் இன்று நம்மிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பரிசுத்த கலிமாவால் நாம் பிணைக்கப் பட்டிருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்து செயல்படுங்கள். நம்முடைய மதம் எவ்வித சகிப்புத் தன்மையை போதிக்கிறதென்றால் நாம் ஒத்துப்போகக் கூடிய விசயங்களில் எங்களுடன் ஒன்று சேருங்களென கிறிஸ்தவர்களுக்கு வான் மறை அழைப்பு விடுக்கிறது. அப்படியானால் அதில் பத்திலொரு பங்கையாவது ஏன்? உங்கள் சகோதர முஸ்லிம்களுக்கு அளிக்க தயங்கு கிறீர்கள் போன்ற இஸ்லாமியர் ஒற்றுமையோடு வாழுவதின் அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றினார்கள்.

நீங்கள் குர்ஆனுக்கே திரும்புங்கள். அதன் வற்றாத நீர்ச்சுனையிலிருந்து நல்லுணர்ச்சி பெறுங்கள். நான் உங்களுக்கு மிக்க உறுதியாக சொல்கிறேன். மனிதன் எந்த அளவு இஸ்லாத்தின் கட்டளையை புறக்கணிக்கிறானோ அந்த அளவுக்கு அவன் வழி தவறி கெட்டு விடுகிறான். என் கல்வியை நான் ஆக்ஸ்போர்டிலும் இங்கிருக்க கூடிய டாக்டர் ஜாகிர்ஹூஸைன் ஜெர்மனியிலும் கல்வியை கற்றோம் என்றாலும் என்னுடைய அசல் கல்வியை நான் சிறைச் சாலையில் இருந்த போது குர்ஆனை கிளிப் பிள்ளைப் போல் அல்லாமல் அர்த்தம் அறிந்து ஓதி விளக்கம் பெற்றது தான் உண்மையாக நான் கல்வி கற்ற நாளாகும். ஆகவே மார்க்க ஞானம் பெற முயற்சித்து மார்க்க அறிவு இருந்தால் தவறி

லிருந்து திருந்த வழி பிறக்குமென முஸ்லீம்களுக்கு மத்தியில் உரையாற்றினார்கள் மௌலானா ஜௌஹர்.

*1929-ல்* ரங்கூனில் சோவியப்பள்ளியில் மௌலானா முஸ்லீம்களிக்கிடையே ஆற்றிய உரைஇக்காலத்தவரும்எக்காலத்தவரும்பின்பற்றி ஒழுகினால் சமுதாயம் நல்ல முன்மாதிரியான சமுதாயமாக உலகில் திகழும்.

வீரகேசரி இரங்கூனில் சோலியா பள்ளியில் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகளை குளச்சல் ரிபாயிப் பள்ளி திறப்பு விழாவின் போது நான் பேசினேன். இஸ்லாமிய தொழுகையானது ஏகத் துவத்தை சமத்துவத்தை தலைமைக்கு கட்டுப் பட்டு முஸ்லிம்கள் செயல்பட வேண்டுமென ஒவ்வொரு நாளும் ஐவேளை ஜமாஅத் தொழுகை நம்மை வலியுறுத்துகிறதை எண்ணி நாம் செயல் பட்டால் நம் சமுதாயம் ஒற்றுமைமிகு சமுதாய மாக கட்டுக்கோப்பான சமுதாயமாக திகழும்.

சவூதி மன்னர் காலித் இந்தியா வந்திருந்த போது ஒரு வெள்ளிக்கிழமை ஜூமுஆவிற்கு வரும்பொழுது ரோட்டில் போக்குவரவு நெருக்கடி ஏற்பட்டு நினைத்தபடி டெல்கி ஜூமுஆமஸ்ஜிதில் தொழுகையில் பங்கு பெற முடியவில்லை. அவருக்கு அன்று ஜூமுஆ மஸ்ஜிதில் இறுதி ஸப்பில் மிக சாதாரண மிஸ் கீன்கள் நிற்கும் பகுதியில் இறைவனைத் தொழும் பாக்கியம் கிடைத்தது. தொழுகை முடிந்ததும். நிருபர் கூட்டம் சவூதி அரசரை அணுகி இதுபற்றி ஆதங்கத்தோடு வினா எழுப்பியபோது இதுதான் இஸ்லாம் சொல்லும் சமத்வம் ஆண்டானு அடிமையும் இறை முன்னிலையில் ஒன்றே என்ற தத்துவமே இன்று நடைபெற்ற இந்நிகழ்வென சவூதி அரசர் காலித் பதில் சொன்னார்.


மண்டைக்காடு கலவரத்துக்குப் பிறகு தி.க. சார்பாக நாகர்கோவில் வேப்பமூட்டில் காலஞ் சென்ற குமரி மாவட்ட தி.க. தலைவர் திரு. சண்முகய்யா தலைமையில் கூட்டம் நடை பெற்றது. சிறப்புரையாற்றிய விடுதலை ஆசிரியர் திரு. கீ. வீரமணி அவர்கள் மண்டைக்காடு கலவரத்தின் பின்னணி பற்றி பேசி விட்டு இந்நாட்டின் வர்ணாசிரம சமூக அமைப்பு தான் கிறிஸ்தவ இஸ்லாமிய சமூகங்களை நோக்கி நாடார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் சாரை சாரை யாக போய் சேர்ந்து சமூகத்திலே மதிக்கப்பட்டவ ராயினர். இன்னும் இவ்வளவு போராடியும் தீண்டாமை இந்து மதத்தினுள் உள்ளது. மனுதர்மம் இதனை நியாயப்படுத்துகிறது.

ஒருபறையன் அல்லது சக்கிலியன் இஸ்லாமி யனானால் அவன் மௌலவிக்குரிய படிப்பு படித் தால் அறிஞனாக அவன் இமாமாக செயல்பட இஸ்லாத்தில் தடையில்லை. மேலும் பள்ளி வாசலில் தொழுகைக்காக அணி வகுக்கும் போது ஆண்டானும்அடிமையும்அருகருகேதோளோடு தோள் சேர்ந்து நின்று தொழுவதோடு முதலாளி தொழிலாளின்பின் அணி வகுப்பில் நின்று தொழும்போது முதலாளி தொழிலாளியின் காலடியில் தன் சிரம் தாழ்த்தி சுஜூது செய்யும் நிலை ஏற்படுகிறது. இதைவிட ஒரு தத்துவார்த்தம் வேறு மார்க்கத்திலுண்டா? இவ்வாறான சமுத் துவத்தை நாடோறு போதிக்கும் இஸ்லாத்தை நாங்கள் எப்படி குறை சொல்ல இவ்வாறான ஓர் சமத்துவம் இந்துமதத்திலுண்டா? என வினா எழுப்பினார். கூட்டத்தினரை நோக்கி தி.க. தலைவர் வீரமணி. இவ்வுரை பற்றி நான் நம் ஊர் நிபாயிப்பள்ளி திறப்புவிழாக் கூட்டத்தில் தொழுகையில் இருக்கு சமத்துவத்தைப் பற்றி குறிப்பிடும் போது திரு. வீரமணி உரையைப் பற்றி குறிப்பிட்டேன்.

இஸ்லாத்தில் இருக்கும் சமத்துவமும் சகோத ரத்துவமும் பற்றி கவிக்குயில் சரோஜினி நாயுடு ஐவேளை மஸ்ஜிதில் தொழுகையில் ஈடுபடும் பல நாட்டு முஸ்லிம்களும் ஒருவர் நாடு அல்ஜீரியா என்றே எகிப்து என்றோ பேதா பேதாம் பாராமல் சகோதர உணர்வோடு தொழுகையில் காண்பிக்கும் ஒற்றுமையும் ஜனநாயக நெறியை யும் பார்த்து நான் மெய் சிலிர்க்கிறேன் என குறிப்பிடுகிறார்.

“அஸ்ஸலாத்துமிஃறாஜில் முஃமினீன்” தொழுகையானது முஃமின்களுக்கு மிஃறாஜைப் போன்றது என்ற நபிவாக்கைப் பின்பற்றி ஒழுகி ஈருலக பேறடைவோம்.

**தொழுகையில் மனமொன்றி இறையச்சத் தோடு தொழும் தொழுகையை இறைவன் விரும்புகின்றான். முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி.**



# கஅபாவை இப்படியுமா கண்ணியப் படுத்துவார்கள்

இரண்டாவது சிலுவைப் போரில் முஸ்லிம்களை வீழ்த்துவதற்கு போர்ச்சுகீசியர்கள் கடுமையான திட்டங்களைத் தீட்டினார்கள். தெற்கிலிருந்து முஸ்லிம் நாடுகளை சுற்றி வளைத்து பின்னிருந்து தாக்குதலை மேற்கொள்வது எனத் திட்டம் வகுக்கப்பட்டது. அந்த திட்டத்தில் முஸ்லிம்களின் புனித ஸ்தலங்களான மக்கா, மதீனா அக்ஸா ஆகியவைகளை தகர்க்க வேண்டும் என்பதும் உள்ளடங்கும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றி இத்தோடு முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் முழுமையாக அழித்தொழிக்க வேண்டும், பின்பு கிறிஸ்துவ மதமும் ஐரோப்பிய கலாச்சாரமும் மட்டும்தான் இனி உலகை ஆள வேண்டும் என்ற இந்த திட்டத்தினை நிறுவியவர் மரியாதைக் குரிய குள்ளநரி போர்ச்சுகீசிய படைத்தளபதி அல்புகெர்கே.

இவன் தனது படைகளுக்கு மத்தியில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினான் “நம் கடவுளுக்கு நாம் செய்யக்கூடிய மிகப் பெரிய சமர்ப்பணமே முஸ்லீம்களை முழுமையாக அழிப்பது தான். முஹம்மதின் ஜோதியை இனி மீண்டும் ஒளிர முடியாத அளவிற்கு அணைத்து விட வேண்டும். முஸ்லிம்களது வியாபாரங்களை ஒன்றுமில்லாமல் ஆக்கினாலே நாம் நினைத்த திட்டத்தை சாதித்துவிடலாம்”.

அல்புகெர்கே இந்தியாவின் போர்ச்சுகீசிய வைஸ்ராயாக நியமிக்கப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே செங்கடல், அரபுக் கடல் பஹ்ரைனின் வளைகுடா போன்ற இடங்களுக்கு அவ்வப்போது பயணம் செய்வது முஸ்லிம்களது கப்பல்களை சூறையாடுவது, அவர்களது கடலோர நகரங்களை தாக்குவது, முஸ்லிம்களின் நிலைமையைப் பற்றி தகவல் சேகரிப்பது, அவர்களது தற்காப்பு திறன்களை அறிந்து கொள்வது என அவனது மோப்பம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

இதன் காரணமாக இந்தியா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள போர்ச்சுகீசிய காலணிகளின் ஆளுநராக இவன் நியமிக்கப்பட்ட பின்னர் முஸ்லிம்களுக்கு தெற்கு மற்றும் கிழக்கு கடல்களில் போர்ச்சுகீசியர்களின் அச்சுறுத்தல் அதிகரித்தது.

இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் முஸ்லிம்களை எதிர்த்து போராடுவதற்கான களமாக இவன் தேர்ந்தெடுத்தது செங்கடல் தான். ஏனென்றால் செங்கடலில் உள்ள ஜித்தாவின் துறைமுகத்தை கைப்பற்றினால் அங்கிருந்து மக்காவிற்குள் எளிமையாக நுழைந்து தங்களது திட்டமான புனித இல்லத்தை தகர்க்கும் திட்டத்தை நிறைவேற்றி விடலாம் என்ற நோக்கில் தான்.

இந்தத் திட்டத்தின் விபரீதத்தை விளங்கிய அந்தப் பகுதியின் அப்போதைய மன்னர்களாக இருந்த மாலிக்குகள் ஜித்தா துறைமுகத்தை போருக்கான தயார் நிலையில் வைத்திருந்தனர். இவர்கள் பலவீனமானவர்களாக இருந்ததால் தயார் நிலையில் வைத்திருந்தார்களே தவிர எதிரிகளை அழிக்க எந்த முயற்சியும் செய்ய வில்லை. இதனால் எதிரிகள் தங்களது முதல் இருத் தாக்குதலில் வெற்றிபெற்று சிறிதளவு முன்னேறினர்.

ஆனால் மமாலிக்குகள் ஆட்சி கவிழ்ந்து உஸ்மானியா பேரரசு ஆட்சிக்கு வந்த பிறகு இவர்களது அடுத்த கட்ட முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்தது.

பிறகு ஹிஜாஸ் பகுதி உஸ்மானியா பேரரசின் ஆளுகைக்கு கீழ் வந்ததும் போர்ச்சுகீசியர்களை கிழக்கிலும் தெற்கிலும் நேரடியாகவே கடுமையாக எதிர்த்துப் போராடினார்கள்.

இந்த நேரத்தில் ஜித்தாவின் துறைமுகத்தை தங்களது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து திறமையான போர்வீரர்களையும் சக்தி வாய்ந்த ஆயுதங்களைக் கொண்டும் துறை முகத்தை போர்ச்சுகீசியர்களிடமிருந்து கஅபாவை பாதுகாப்பதற்கான அரணாக மாற்றினார்கள்.

ஆனாலும் போர்ச்சுகீசியர்கள் கஅபாவை இடிப்பதன் அச்சுறுத்தல் தொடர்ந்துக் கொண்டே இருந்தது.

இதனை ஒட்டுமொத்தமாக ஒடுக்குவதற்கு உஸ்மானியா கலீஃபா சுலைமான் கானூனி அவர்கள் மிக உயர்ந்த மூலோபாய திட்டங்களை உருவாக்கினார்.

அதில் முதன்மையாக சூயஸ் துறைமுகத்தில் பிரம்மாண்டமான உஸ்மானியா செங்கடல் கப்பற்படை உருவாக்கப்பட்டது. இந்த கப்பல் படையானது பெரும்பெரும் பீரங்கிகள் மற்றும் போர் உபகரணங்களை தாங்கும் வண்ணம் உருவாக்கப்பட்டது.

பின்பு இந்த பிரம்மாண்டமான கப்பற்படை போர்ச்சுகீசியர்களின் கோட்டையாக இருந்த இந்தியாவை நோக்கி நகர்ந்தது, நகரும் வழியில் செங்கடல் அரபு கடலிலும் உள்ள எல்லா துறை முகங்களையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

இந்திய பெருங்கடலில் போர்ச்சுகீசியர்களது அச்சுறுத்தலை தடுப்பதற்கு ஏதன் துறைமுகத்தை யும் அரபு வளைகுடாவில் போர்ச்சுகீசியர்கள் அச்சுறுத்தலை தடுப்பதற்கு மஸ்கட் துறைமுகத் தையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இவ்வளவு தயாரிப்பில் உஸ்மானிய பேரரசு ஈடுபட்டாலும் எதிரிகளைப் பற்றிய அச்சம் இவர்களைத் தொடர்ந்து கொண்டே இருந்தது.

ஏனென்றால் செங்கடலுக்கு செல்வதற்கு மீதமுள்ள ஒரே வழியான கிழக்கு ஆப்பிரிக்காவில் செங்கடலின் மேற்குப்பகுதியில் அவர்களது கரங்கள் ஓங்கியே இருந்தது. அவர்களது பலம் வாய்ந்த தளமாக அது கருதப்பட்டது.

இதனால் கிழக்கு ஆப்பிரிக்காவை கைப்பற் றியே ஆகவேண்டும், இதன்மூலம் போர்ச்சுகீசி யர்கள் செங்கடலுக்கு போகக்கூடிய கடைசி பாதையும் மூடப்பட்டு விடும் என்று உஸ்மானிய பேரரசின் போர் தளபதி ஆஸாத் முர் திட்டம் வகுத்தார்.

இந்தத் திட்டத்திற்கு மன்னர் சுலைமான் கானூனி அவர்கள் ஒப்புதல் வழங்கியதோடு, இந்தத்திட்டம்சம்பந்தமானவிஷயங்களில்தனது சொந்த முடிவை எடுத்துக் கொள்ளலாமென்று போர் தளபதிக்கு முழுமையான சுதந்திரம் வழங்கினார்.

இதனால் ஆசாத் மூர் 30,000 வீரர்களோடு கிழக்கு ஆப்பிரிக்காவில் நுழைந்து செங்கடல் செல்வதற்கான கடைசி பாதையாக போர்ச்சுகீ-சியர்கள் நம்பி கொண்டிருந்ததையும் தனது ஆளுகைக்குள் கொண்டு வந்தார்.

இத்தோடு போர்ச்சுகீசியர்களுடைய கஅபாவை இடிக்கும் திட்டம் தவிடு பொடியானது.

இதற்கு பிறகு

கஅபாவையும் மதீனாவையும் கண்ணியப் படுத்துவதன் பொருட்டு சுமார் 300 ஆண்டு களுக்கு முஸ்லிம் கப்பல்களை தவிர்த்து எந்த ஐரோப்பிய கப்பல்களுக்கும் செங்கடலில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதுவே செங்கடல் இஸ்லாத்தை ஏற்ற வரலாறு.

# ஒருவரின் ஹஜ் ஏற்படுத்திய தாக்கம்!

"தாத்தாரியர்கள் ஹிஜாஸ் பகுதிக்கு வருகைத் தர போகிறார்கள், மக்கா மதீனா நகரங்களை முழுக்க சூரையாடப் போகிறார்கள். இந்த வருடம் ஹஜ்ஜிற்கு வருகைத் தரப் போகிறவர்களை கொன்றுக் குவிக்கவும் திட்டம் தீட்டி உள்ளார்கள்" என்றச் செய்தி வீர வேங்கை சுல்தான் அல்லாஹிர் பைபரஸ் அவர்களது செவிக்கு எட்டியது.

இந்த நிலையில் இந்த வருடம் ஹஜ் செய்வதற்காக சுல்தான் அவர்கள் முன்பே நாடியிருந்தார்கள். இதற்கு மத்தியில் இந்த செய்தியை அறிந்ததும் தங்களது ஹஜ் பயணத்தை இன்னும் துரிதப்படுத்தினார்கள். இந்த வருடம் ஹஜ்ஜையும் ஜிஹாதையும் ஒன்றாக செய்வோம் என்று உறுதி பூண்டார்கள்.

"சுல்தான் பைபரஸ் ஹஜ் செய்வதற்காக வந்துள்ளார்கள் என்றச் செய்தி அறிந்ததும் தாத்தாரியர்கள் பயந்து திரும்பி ஓடியே விட்டார்கள்."

**யார் இந்த சுல்தான் அல்லாறிர் பைபரஸ்?**

ஹிஜ்ரி 625 இல் எகிப்தில் பிறந்தவர். இவரது சிறப்பு பெயர் வெற்றிகளின் தந்தை. சந்தையில் அடிமையாக விற்கப்பட்டு மன்னர் நஜ்முத் தீன் அய்யூபி அவர்களுக்கு உதவியாளராக பணிபுரிந்து பின்பு எகிப்தின் மாபெரும் சக்கரவர்த்தியாக விளங்கியவர். இஸ்லாமிய உலகம் ஈன்றெடுத்த தன்னிகரற்ற ஆளுமைகளில் சுல்தான் அல்லாஹிர் பைபரஸ் அவர்களும் ஒருவர்.

இராணுவ திட்டங்கள் தீட்டுவதிலும் இராஜதந்திரத்தந்திரங்களை மேற்கொள்வதிலும் திறன் வாய்ந்தவர். மங்கோலியர்களால் அழித்துதொழிக்கப்பட்ட அப்பாஸிய பேரரசை மீண்டும் உயிர்தெழச் செய்தவர்.

மம்லூகிய பேரரசின் நிறுவனர். இவரது மிகப்பெரிய சாதனையே இஸ்லாமிய பேரரசை அரித்துக் கொண்டும் அழித்துக் கொண்டும் இருந்த முக்கிய விஷமிகளான சிலுவை யுத்தகாரர்களை மன்சூர் என்ற மாபெரும் போரின் மூலமும் தாத்தாரியர்களை ஐன் ஜாலூத் என்ற மாபெரும் போரின் மூலமும் வேரறுத்த பெருமை இவரையே சாரும்

**தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**





# கடலூர் மாவட்டத்தில் உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்



20.8.2022 அன்று கடலூர் மாவட்டம், குமராட்சி வழி, கிழக்கரை, கோப்பாடி அத்திப்பட்டு, காலனித் தெரு ஆகிய, கிராமங்களில் ஒறிறை மார்க்கம் பிரசாரம் செய்யப்பட்டது. அதே சமயம் இஸ்லாத்திற்கு வந்த மார்க்க அறிஞர்களின் நூல்கள் இலவசமாக வழங்கப் பட்டது.








# சீர்காழியில் உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்


















22.8.2022 அன்று சீர்காழி, தாலுக்கா நல்லூர், கிராமம், வள்ளுவ தெரு மற்றும் நரிமுடுக்கு ஆகிய ஊர்களில் ஓர் இறை இஸ்லாமிய பிரச்சாரம் செய்யபட்டது. குர்ஆன் மற்றும் மார்க்க அறிஞர்களின் புத்தகம் இலவசமாக கொடுக்கப்பட்டது.



## அளக்குடி கிராமத்தில்

# இல்லம் தேடி இஸ்லாம்







29-8-2022 அன்று அளக்குடி கிராமம் சுற்று பகுதியில் தாவா நடைபெற்றது. அதுசமயம் இஸ்லாத்திற்கு வந்த மார்க்க அறிஞர்களின் புத்தகம் இலவசமாக கொடுக்கபட்டது

தலையங்கம்

# சமத்துவத்தை நிலைநிறுத்திக் காட்டியவர் முஹம்மத் நபி (ஸல்)

'மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலன்று பெருமை பாராட்டிக் கொள்ள வேண்டாம்) உங்களில் எவன் மிகவும் பயபக்தியுடையவனாக இருக்கின்றாரோ அவன் தான் அல்லாஹ்விடத்தில் மிக்க கண்ணியவான். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தோனும், நன்கு தெரிந்தோனுமாக இருக்கின்றான். (அல்ஹுஜ்ராத் - 13)

கிஃபார் குலத்தை சார்ந்த அபூதர் (ரலி) அவர்கள் ஒருமுறை பிலால் (ரலி) அவர்கள் மேல் கோபப்பட்டுவிட்டார்கள். இரண்டு பேருக்குமிடையே நடந்த வாக்குவாதத்தில் அபூதர் (ரலி) அவர்கள் "கறுப்பு நிறத்தைக் கொண்ட தாயின் மகனே" எனக் கூறிவிட்டார்கள். இதை பிலால் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறிவிட்டார்கள். இறைவனின் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அபூதர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். நீங்கள் அவர்களின் தாயை உட்படுத்தும் பெயர் ஒன்றால் பிலால் (ரலி) அவர்களை அழைத்தீர்களா? எனக் கேட்டார்கள். பின்னர் நீங்கள் இன்னும் ஜாஹிலிய்யாவின் (மௌட்டீகத்தின்) பிடியிலிருந்து விடுபடவில்லையா? எனக் கூறிக் கடிந்தார்கள். ஜாஹிலிய்யா என்பதன் முழுப் பொருளையும் புரிந்திட முடியாத அபூதர் (ரலி) அவர்கள் அதை ஒழுக்கமின்மையின் சொல்லாக எடுத்துக் கொண்டு இந்த என் தள்ளாத வயதிலா? என ஆதங்கத்தோடு கேட்டார்கள். இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் ஆமாம். நீங்கள் அவருடைய சகோதரர் ஆவீர். நீங்கள் அவரிடம் கனிவோடும் பாசத்தோடும் இருந்திட வேண்டும் என்றார்கள்.

அபூதர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பதிலின் ஆழத்தைப் புரிந்துகொண்டார்கள். கண்கள் கலங்கியவர்களாக பிலால் (ரலி) அவர்களை பார்த்து இப்படிக் கூறினார்கள்.

பிலால் (ரலி) அவர்களே என்னை மன்னித்து விடுங்கள், உங்கள் கால்களில் என் முகத்தை மிதியுங்கள் எனக் கண்ணீர் மல்க கூறினார்கள்.

கைஸ் பின் முத்தாதியாஷ் என்றொரு நயவஞ்சகர் இவர், இவர் ஒருமுறை ஸல்மான் அல் பாரிசி (ரலி), சுஹைப் ரூமி (ரலி), பிலால் ஹபஷி (ரலி) ஆகியோர் அமர்ந்திருந்த அவைக்கு வந்தார். வந்தவர் ஏளனத்தோடு ஒரு கேள்வியை கேட்டார். அவ்ஸ் கஸ்ரஜ் குலத்தவர்கள் முஹம்மதுக்கு ஏதோ சேவை செய்திருக்கின்றார்கள். உங்களை முஹம்மத் இந்த அளவுக்கு கண்ணியப்படுத்துவதற்கு நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்?


*இப்படியொரு ஏளனம் நிறைந்த கேள்வியை கைஸ் பின் முத்தாதியாஹ் கேட்டபோது, முஆத் பின் ஜபல் (ரலி) அவர்களும் அங்கே இருந்தார்கள். கைஸ் பின் முத்தாதியாஹ்வின் மேலங்கியை பிடித்திழுத்துக் கொண்டே வந்து பெருமானார் (ஸல்) அவர்கள் முன் நிறுத்தினார்கள்.*

*முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் கைஸ் பின் முத்தாதியாஹ் எப்படி ஏளனமாகப் பேசினார் என்பதை எடுத்துச் சொன்னார்கள். இதைக் கேட்டதும், இறைவனின் தூதர் (ஸல்) அவர்களின் முகம் சிவந்தேறிவிட்டது. இருவரையும் அழைத்துக்கொண்டு பள்ளிவாசல் நோக்கி நடந்தார்கள். நம்பிக்கையாளர்களை ஒன்றாய் சேர்த்தார்கள். ஒரு சிறு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.*

*“மனிதர்களே! உங்கள் அனைவருடைய இறைவன் ஒருவனே, அனைவருக்கும் உணவளிப்பவன் அவனே, அனைவரும் ஒரே பெற்றோர்களிலிருந்து வந்தவர்களே, உங்களுடைய நம்பிக்கையும் ஒன்றாகவே இருக்கட்டும்.”*

*முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நிறத்தால், குணத்தால், மொழியால், பொருளாதாரத்தால், ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படுத்திக் கொண்டு மனிதனுக்கு மனிதன் அடிமையாக வாழ்ந்த மக்களை ஓர் இறைவனின் பால் அழைத்து, ஏற்றத் தாழ்வுகளை களைந்து, மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை. நாம் அனைவரும் அந்த ஏக இறைவனின் அடிமைகள் என்பதை வெறும் சொல்லோடு நிறுத்தி விடாமல் செயலில் சமத்துவத்தை நிலை நிறுத்திக் காட்டியவர் இறைவனின் தூதர், மனித குலத்தின் வழிகாட்டி முஹம்மது நபி (ஸல்) அவர்கள்.*

**“மனிதர்களே! உங்கள் இறைவனுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவனிலிருந்து அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்தே அநேக ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்.” ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்... (அன்னிஸா-1)**



# வாழைத்தண்டு ஜூஸ்



**தேவையானவை**

வாழைத்தண்டு-1
தயிர்-1 கப்
சீரகப்பொடி - 1 டீஸ்பூன்
உப்பு - தேவைக்கு

**செய்முறை**

வாழைத் தண்டை வட்ட வட்ட வில்லைகளாக நறுக்கி நார் நீக்கி, பொடியாக நறுக்கி தண்ணீரில் போடவும், மீண்டும் நார் நீக்கி, மிக்ஸி ஜாரில் போட்டு, சீரகப் பொடி, உப்பு சேர்த்து மைய அரைக்கவும். அரைத்த சாறை வடிகட்டிக் கசடுகளை நீக்கவும். அந்தச் சாறுடன் தயிர் சேர்த்து மீண்டும் மிக்ஸியில் அரைத்து கண்ணாடி டம்ளரில் நிறைத்துப் பருகவும். சுவையான வாழைத்தண்டு ஜூஸ், உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது. வாரம் இருமுறை குடித்து வந்தால் சிறுநீரகக் கல் பிரச்சினை ஏற்படாமல் தடுக்க முடியும்.



# கொள்ளு சூப்

**தேவையானவை**

கொள்ளு பருப்பு - 100
தக்காளி - 1
இஞ்சி - சிறு துண்டு
சீரகம் - 1/2 டீஸ்பூன்
சின்ன வெங்காயம் - 10
பூண்டு - 2 பற்கள்
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழை,
புதினா இலைகள் - ஒரு கைப்பிடி
மிளகுத் தூள் - 1 டீஸ்பூன், உப்பு - தேவைக்கு

**செய்முறை :**

கொள்ளுப் பருப்பை 10 மணிநேரம் ஊற வைக்கவும். பிறகு நன்கு களைந்து தேவையான தண்ணீர் சேர்க்கவும். அத்துடன் நறுக்கிய சின்ன வெங்காயம், தக்காளி, பூண்டு, இஞ்சி சேர்க்கவும் கூடவே சீரகம், மிளகுத்தூள், உப்பு, கறிவேப்பிலை, கொத்தமல்லி, புதினா இலைகள் சேரைத்து குக்கரில் வேக வைக்கவும். மூன்று விசில் வந்ததும், அடுப்பை சிப்பில் வைத்து ஐந்து நிமிடங்கள் கழித்து அணைக்கவும். பிரஷர் அடங்கியதும் மூடியைத் திறந்து வேக வைத்த கொள்ளை மத்தால் கடையவும். தேவைக்கேற்ற சிறிது சுடுநீர் சேர்த்துக் கலந்து சூப்பாக பருகவும். சுவையான இந்த சூப் உடல் மெலிய நன்கு உதவும்.

நன்றி முதுமை எனும் பூங்காற்று

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002